# அகதி முக(ா)ம்



அருணா
செல்லத்துரையின்
நாடகங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதி முக(ா)ம்

## அருணா செல்லத்துரையின்

### நாடகங்கள்

# Ahathi Muha(a)m

## (Refugee Camp / Face of a Refugee)

### Dramas - by

## Aruna Selladurai

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் : அருணா செல்லத்துரை

*ஆசிரியரின் பிற நூல்கள்*

"வீடு" தொலைக்காட்சி நாடகமும் / வானொலி நாடகங்களும் – 1993
(1994ம் ஆண்டு யாழ் / இலங்கை இலக்கியப் பேரவையின்
சிறந்த நாடக நூலுக்கான இலக்கியச் சான்றிதழ் பெற்றது)
"VEEDU" TELE DRAMA / RADIO DRAMAS
(SELECTED AS BEST BOOK - DRAMA 1994 BY ILANKAI LITERARY COUNCIL JAFFNA)

"அருணா செல்லத்துரையின் மெல்லிசைப் பாடல்கள் – 1994
(வானொலி / தொலைக்காட்சியில் ஒலி / ஒளிபரப்பாகியவை)
"ARUNA SELLADURAIYIN MELLIYSAI PADALKAL
(LIGHT SONGS - 1994)

"நந்தி உடையார்" வன்னிப் பாரம்பரிய வரலாற்று நாடகம் –1996
(1996ம் ஆண்டு சாகித்திய மண்டலப் பரிசு / 1996ம் ஆண்டு "உண்டா" தங்க விருது)
"NANTHI UDAIYAR" VANNI HISTORICAL & TRADITIONAL DRAMA
(WON 1996 SAHITHIYA AWARD/WON 1996 "UNDA ABHINANDANA" GOLD AWARD)

"இலங்கையில் தொலைக்காட்சி" வரலாற்றுச் சுவடி – 1997
(1997ம் ஆண்டு வடகிழக்கு மாகாண இலக்கியப் பரிசு)
"TELEVISION IN SRI LANKA" - 1997
(WON 1997 NORTH EAST LITERARY AWARD)

"வன்னிப் பிராந்தியக் கூத்துக்கள்" பாரம்பரியத் தேடல் –2000
"TRADITIONAL DRAMAS IN VANNI"TRADITIONAL FINDINGS
(2000)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதி முக(ா)ம்

## அருணா செல்லத்துரையின்
நாடகங்கள்

# Ahathi Muha(a)m

## (Refugee Camp / Face of a Refugee)

Dramas - by

## Aruna Selladurai

**Aruna Publications**
A 15/1/1, Manning Town Housing Complex
Mangala Road, Colombo- 8
Sri Lanka.
☎ : 688466

**அருணா வெளியீட்டகம்**
A 15/1/1, மனிங் ரவுண் வீடமைப்புத் தொகுதி
மங்கள வீதி. கொழும்பு – 8
இலங்கை.
☎ : 688466



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தேசிய நூலகம் – வெளியீடுகளில் உள்ள பட்டியற் தரவு

செல்லத்துரை, அருணா
அகதி முக(ா)ம் (நாடகங்கள்) / அருணா
செல்லத்துரை .– கொழும்பு : ஆசிரியர், 2001 .–
ப. 157 ; படங்கள் ; ச.மீ.21.
ISBN 955-96159-4-7 விலை : ரூ.160.00
1. 894.8112 டிடிசி 2. தலைப்பு
i. நாடகங்கள் .தமிழ்

ISBN 955-96159-4-7

**அருணா வெளியீட்டகம்**
**Ahathi Muha(a)m / Dramas** -
by Aruna Selladurai
First Edition - 2001
© : Aruna Selladurai
Author : Aruna Selladurai
**Price : Rs. 160.00**
Printed by : Uni Arts (Pvt) Ltd.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்பாசிரியர் : அருணா செல்லத்துரை

ஆசிரியரின் ஏனைய பங்களிப்புகள்
CONTRIBUTION BY AUTHOR

## ஒலியில் .....

"ஒலித்தென்றல் 1" மெல்லிசைப் பாடல்கள் / ஒலிப்பேழை – **1994**
"OLITHENRAL - 1" LIGHT SONGS AUDIO CASSETTE - 1994

"ஒலித்தென்றல் 2" மெல்லிசைப் பாடல்கள் / ஒலிப்பேழை
"OLITHENRAL - 2" LIGHT SONGS AUDIO CASSETTE

"நந்தி உடையார்" வன்னிப் பாரம்பரிய வரலாற்று நாடகம்/ஒலிப்பேழை – **1996**
"NANTHI UDAIYAR" VANNI HISTORICAL & TRADITIONAL DRAMA
AUDIO CASSETTE - 1996

"நந்தி உடையார்" வன்னிப் பாரம்பரிய வரலாற்று நாடகம்/(CD) இசைத்தட்டு – **1996**
"NANTHI UDAIYAR" VANNI HISTORICAL & TRADITIONAL
DRAMA/COMPACT DISC (CD) -1996

## ஒளியில் .....

"வேழம்படுத்த வீராங்கனை" முல்லை மோடி வட்டக்களரி நாட்டுக்கூத்து/ஒளிப்பேழை – **1994**
"VEZAMPADUTHA VEERANKANAI" MULLAI MOODY VADDAKKALARY
TRADTIONAL FOLK DRAMA VIDEO CASSETTE - 1994

"திருப்பங்கள்", வீடு, ஆகிய தொலைக்காட்சி நாடகங்கள் ரூபவாஹினிக்காகவும் "மனக்கோலங்கள்" வெளி நிறுவனம் ஒன்றிற்காகவும், "யாழ்தேவி" "தண்டனை" போன்ற தொலைக்காட்சி நாடகங்கள் பயிற்சிப் பட்டறைகளுக்காகவும் தயாரிக்கப்பட்டவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரங்கில்...........

**"கோவலன்கூத்து"** நாட்டுக்கூத்து
1974ம் ஆண்டு அகில இலங்கைத் தமிழ் நாடகவிழாவில் விருது பெற்றது.

**"வேழம்படுத்த வீராங்கனை"** முல்லைமோடி வட்டக்களரி நாட்டுக்கூத்து.
1994ம் ஆண்டு பாடசாலை மட்டத்திலான தமிழ்த் தினப் போட்டிகளில் பரிசு பெற்றது.

**"நந்தி உடையார்"** வன்னிப்பாரம்பரிய வரலாற்று நாடகம்
1996ம் ஆண்டு வவுனியா நகரசபையில் மேடையேற்றப்பட்டது.

**"தரை தட்டிய மீன்கள்"** சமகாலப் பிரச்சினைகள்.
1998ம் ஆண்டு யாழ் / இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் கொழும்புக் கிளை கல்லூரி அபிவிருத்தி நிதிக்கென, கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் மேடையேற்றப்பட்டது.

**"அகதி முக(ா)ம்"** சமகாலப் பிரச்சினைகள்.
1998ம் ஆண்டு அரச தமிழ் நாடகவிழாவின் இறுதிப்போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டு மருதானை எல்பின்ஸ்டன் அரங்கில் மேடையேற்றப்பட்டது.

**" நவீன நாரதர்"** சமகாலப் பிரச்சினைகள்.
1999ம் ஆண்டு கொழும்பு இந்துக் கல்லூரி கலை விழாவில் மாணவர்களால் மேடையேற்றப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title of the book | : | **"Ahathi Muha(a)m"**<br>*("Refugee Camp / Face of a Refugee)* |
| Language | : | Tamil |
| Subject | : | Stage / Radio Dramas |
| Written by | : | Aruna Selladurai |
| Copyright | : | Author |
| Published by | : | Aruna Veliyettaham<br>*[Aruna Publication]* |
| First Edition | : | June 2001 |
| Types used | : | 12 Point |
| Number of Pages | : | 157 |
| Number of Copies | : | 1000 |
| Computer Type Setting | : | V. Sadagopan, R.Yogathasan,<br>R. Thavarajan |
| Printed at | : | Uni Arts (Pvt) Ltd. |
| Price | : | Rs.160.00 |
| ISBN | : | ISBN 955-96159-4-7 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பினுள் உதிரமாய்

உள்ளத்துள் உரமாய்

உள் நின்று ஊக்குவிக்கும்

என் தந்தை

கதிரவேலு அருணாசலத்திற்கும்

என் அன்பு அன்னை

அன்னம்மாவிற்கும்

பத்தாம்பளையான

வற்றாப்பளை உறையும்

பெத்தாச்சி

கண்ணகை அம்மனுக்கும்

காணிக்கையாகும் என்படைப்புக்கள்

அருணா செல்லத்துரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதி முக(ா)ம் பற்றி சில குறிப்புகள்.....

ஓர் ஊடகத்துக்கென ஆக்கப்பட்ட கலைப்படைப்பை மற்றொன்றின் மூலமாக உள்வாங்கிக்கொள்வதற்கு வித்தியாசப்பட்ட கற்பனை வளம் ரசிகர்களுக்குத் தேவைப்படும். இந்தப் புதிய அனுபவத்தையூட்டும் முயற்சியில் எங்கள் அருணா செல்லத்துரை வெற்றிபெற்று வருகிறார் என்று துணிந்து கூறலாம். 1993ஆம் ஆண்டில் "வீடு" என்ற தலைப்பில் தொலைக்காட்சி நாடகமும் வானொலி நாடகங்களும் என்ற நூல் முதல், இப்பொழுது அவர் வெளியிட்டிருக்கும் மூன்று நாடகங்களைக் கொண்டுள்ள நூல் வரை, வாசகர்களும் கலைஞர்களும் மற்றையோரும் வழங்கிவரும் பேராதரவே இதற்குச் சான்றாகும்.

அகதி முக(ா)ம், தரைதட்டிய மீன்கள், நவீன நாரதர் என்ற இந்த மூன்று நாடகங்களும் மேடைக்கும் வானொலிக்கும் உகந்தவை என்று நூலில் நாடகத் தலைப்புகளுடன் சேர்த்துச் சுட்டிக்காட்டுகிறார் அருணா. முதல் நூலில் அவர் "ஒலிபரப்பப்பட்ட" - "ஒலிபரப்பாமல் தடைசெய்யப்பட்ட" நாடகங்களைச் சேர்த்துக் கொண்டார். இந்தப் படைப்பில் அவ்வாறல்ல, வானொலிக்கெனப் பிரத்தியேகமாக எழுதப்பட்ட நாடகங்களே இடம்பெறுகின்றன. அவை வானொலிக்கு ஒப்படைக்கப்படாதவை.

மேடையேற்றப்பட்ட நாடகங்களைப் பொறுத்தவரை "அகதி முக(ா)ம் " ஒரு சிறு வரலாற்றினைக் கொண்டது. அதில் எனக்கும் ஏதோ ஒருவகையில் தொடர்புண்டு. 1998 இல் இலங்கைக் கலைக் கழகத் தமிழ் நாடகக் குழுவின் தலைவராகப் பணியாற்றிய சமயம் நடத்தப்பட்ட அரச தமிழ் மேடை நாடகப் போட்டியில் மேடையேற்றப்பட்ட நாடகங்களில் ஒன்று "அகதி முக(ா)ம்".

ஓர் அகதி முகாமை நாடகத்தின் களமாக்கி, அகதிகள் மத்தியில் அவர் கண்ட அல்லது கேள்வியுற்ற சம்பவங்களைத் தொகுத்துத் தந்துள்ளார் அருணா. சமகால நிகழ்வுகள் இந்த நாடகத்தில் எடுத்தாளப்பட்டுள்ளன. இவ்வாறான நிகழ்வுகளைக் கையாளும்போது உள்ளத்து உணர்வுகளும் ஊடே இளையோடுவதை மறைப்பதற்கில்லை, நாடகப் பாத்திரங்கள் உயிர்த்துடிப்பு மிக்கவை என்பதனால் போலும்!

இந்நாடகத்துக்கு பரிசு கிடைத்திருக்கவேண்டும் என்று பலரும் அபிப்பிராயம் தெரிவித்தனர். "இதற்குத்தான் எப்படியும் பரிசு கிடைக்கும்" என்று அனுமானித்தவர்களும் உண்டு. அன்றைய நாடகக் குழுவைப் பொறுத்தவரை இரண்டு தீர்மானங்களைக் கொண்டு இயங்கினோம். அதாவது "நீண்ட காலத்துக்குப் பின் நாடக விழா ஒன்றை நடத்தப் போகிறோமே, நாடகத்துறையின் இன்றைய நிலை என்ன என்பதை அறிந்துகொள்ள இப்போட்டியை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்த வேண்டும் எனக் கருதி, நாம் உருவாக்கிய அந்த இரு தீர்மானங்களும் இவை:-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நாடகம் எப்படி இருக்க வேண்டும் என்பதை எடுத்துக் காட்டும் ஒரு சிறந்த நாடகத்தையே பரிசுக்கெனத் தேர்ந்தெடுக்க வேண்டும். வந்த நாடகங்களுக்குள் ஒன்றை சிறந்த நாடகம் எனத் தெரிவு செய்வதில்லை.

- நாடகத்துறையில் மிகுந்த அறிவு – அனுபவம் – பரிச்சயம் கொண்ட மூவர் அடங்கிய குழு ஒன்றிடம் இப்பணியை ஒப்படைத்து, அக்குழு மேற்கொள்ளும் தீர்மானத்தில் மாற்றம் எதுவும் செய்வதில்லை.

இவ்வடிப்படையிலேயே காரியங்கள் ஒப்பேற்றப்பட்டன.அருணா, கலைச்செல்வன் உட்பட ஒருசிலர் எனக்கு நேரில் வந்து முடிவுகள் பற்றி தமது ஏமாற்றத்தை தெரிவித்துக் கொண்டனர். இருப்பினும், அன்றைய நிலைப்பாட்டில் செய்வதற்கு ஒன்றும் இருக்கவில்லை.

ஒருவேளை, மேடையேற்றப்பட்ட நாடகங்களுக்குள் சிறந்தது என ஒரு நாடகம் தெரிவு செய்யப்பட வேண்டியிருந்திருக்குமேயானால் அது அகதிமுகாமாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. இது எனது சொந்த அபிப்பிராயமாகும். வேறு பலரின் அபிப்பிராயமும் இதுவே.

நூலைப்பற்றிக் கூற வந்து ஏதேதோ கூறிவிட்டேன் என்று ஒரு சிலர் கருதலாம். "உள்ளதை உள்ளபடி" கூறப்பொருத்தமான சந்தர்ப்பம் வேறு கிடைக்காமல் போகலாம் அல்லவா?

இந்த வரலாற்றுக் குறிப்பு புதிய நாடகக்குழு தமது கொள்கையை வகுப்பதில் ஏதாவது ஒருவகையிலேனும் உதவலாம்.

அருணாவின் கலைப்பயணம் தொடரவேண்டும்! எழுத்துப் பணியும் சிறக்கட்டும்!

வீ.ஏ.திருஞானசுந்தரம்
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன
முன்னாள் தமிழ்ச்சேவைப் பணிப்பாளர்,
பிரதிப் பணிப்பாளர் நாயகம்,
கலைக் கழக நாடகக் குழுத் தலைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருணாவின் மூன்று நாடகங்கள்:

### அரங்க அனுபவம் பற்றி........

இந் நூலில் அருணா செல்லத்துரையின் மூன்று நாடகப் பிரதிகள் (பனுவல் - Text ) சேர்க்கப்பட்டுள்ளன. நாடகத்தின் கருப்பொருள் பனுவலில் கட்டியமைக்கப்பட்டு விடுகிறது. அதற்கு உருக்கொடுத்தல் என்பது காலம், இடம், ஏவல் என்பதற்கமைய ஊடகங்களின் வாய்ப்புக்கேற்ப அழுத்தம் பெறுகிறது. பனுவல் வாசித்தலும் குரல் அசைவும் வானொலி நாடகத்தின் செய் காரியங்களாகும். அவை காதுக்குரியனவாய் காற்றோடு கலந்து விடுகின்றன. நாடகப் பனுவலை நிகழ்த்திக் காட்டும் பொழுது குரல் அசைவு மட்டுமன்றி உடலசைவு, அரங்க அசைவு, மேடைச் சமநிலை என்பன கவனிக்கப் பெற்று காட்சிப் பொருளாய் விரிந்து அரங்க அனுபவத்துடன் அற்ப ஆயுளில் நிறைவெய்துகிறது.

மேடை நாடகம் என்பது தொடர் மேடையேற்றத்தின் மூலம் மட்டுமே அதன் அரங்க அனுபவச் செழுமையைப் பெற முடியும். பிறந்தவுடன் இறந்து விடும் சிசு மரணம் போல் நிகழும் எமது ஈழத் தமிழ் நாடக அரங்கச் சூழலில் அதன் அலங்காரங்களை வர்ணிப்பதும் ஆற்றாமைகளை இகழ்வதும் அம்மண அரசனின் ஊர்வலத்தைக் கண்டு அவனின் உடையலங்காரத்தைப் புகழ்ந்ததும் இகழ்ந்ததும் போலாகி விடும்.

வானொலி நாடகமும் மேடை நாடகமும் வெவ்வேறான ஊடகங்கள் என்பதனால் அவை பற்றிய செய்முறைக் குறிப்புகளும் வேறானவையாகும். எனினும் இம்மூன்று நாடகங்களும் வானொலி/மேடை நாடகப் பனுவலாகவே இந் நூலில் வழங்கப்பட்டுள்ளன.

'அகதி முக(ா)ம்' நாடகம் தமிழ் நாடகக் குழுவின் போட்டியில் பங்குபற்றி அற்ப ஆயுளில் சிசு மரணம் கண்டது. 'தரை தட்டிய மீன்கள்' சரஸ்வதி மண்டபத்தில் மேடையேற்றப்பட்டு அக் கணப்பொழுதுக் கதையாகித் தன் கதையை முடித்துக் கொண்டது. 'நவீன நாரதர்' கொழும்பு இந்துக் கல்லூரி மாணவரினால் பாடசாலையில் உயிர் பெற்றவுடன் அதுவே கதையாகிப் போனது.

இச் சோக முடிவுகளில் துவண்டு போகாமல் 'நாமும் நமக்கோர் நலியாக் கலையுடையோம். நம்மால் இயன்ற பணிகளை ஆற்றிடுவோம், சும்மா இரோம்' எனச் சட்டென்று எழுந்து இம்மூன்று நாடகங்களுக்கும் அருணா மறுவாழ்வு அளித்தார் என்பதற்கும் அப்பால் மறுபிறப்பு வழங்கியுள்ளார் எனில் தவறாகாது.

இந் நாடகப் பனுவல் வாசிக்கக் கிடைப்பது கலை இலக்கிய இரசிகர்களுக்கு சுவையான அனுபவமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அகதி முக(ா)ம்' நாடகம் வவுனியாவையும் அகதி முகாங்களையும் களமாகக் கொண்டிருக்க, ஏனையவை இரண்டும் கொழும்பையும் கொம்மினிகேசன் சென்ரரையும், நடுத்தெருக்களையும் நம் கண்முன் காட்சிகளாய் விரிக்கின்றன.

முதலாவது நாடகத்தின் வேட்கை, தமிழ் பேசும் மக்களின் விடுதலை தொடர்பானது. தமிழரசி, சுதந்திரதாசன் ஆகிய கதாமாந்தரை அருவமாய்ச் சித்திரித்து உருவமாய்க் காண விளையும் இலட்சிய வேகம் இந் நாடகத்தை நடத்துகிறது. அத்துடன் அந்நியர் தயவில் அகதிகளுக்கு உதவி செய்யும் நிறுவனங்கள் சார்ந்த மேலாளர்களின் அதிகாரத்திமிர் பற்றிய கேள்விகளையும் விசாரணை செய்கிறது.

இரண்டாவது நாடகம், உலகக் கிராமமாகிவிட்ட பூகோள மயமாதலினால் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழர்களின் குடும்ப உறவு, பாசம், தேவை, கவலை, கண்ணீர், மகிழ்வு ஆகிய அனைத்துமே தொலைபேசிக் கூண்டிலே தொடங்கி கூண்டோடு கைலாசம் போன கதையை உணர்த்தி நிற்கிறது. பூகோள மயமாதலின் போலித்தனமும் நுகர்வுப் பண்பாட்டு மோசடியும் சாதாரண கிராமிய மக்களை வேரும் வேரடி மண்ணுமாக இடம்பெயர்த்து, தன்னை மறந்தாராகி தன் நாமம் கெடச் செய்துள்ள தமிழ் மக்களின் அவலத்தை முரண் நகையாக சுவைபட விளக்குகின்றது.

மூன்றாவது நாடகமான "நவீன நாரதரில்", இந்துப் படிமங்களான நாரதர், சித்திரகுப்தன் என்ற வார்ப்புகள் எமது வாழ்வுத் தளத்தின் யதார்த்தத்தை சித்திரிக்கின்றன. நாரதர், 'நாராயணாய நமக' என்பதற்கு பதிலாக 'ஐடென்ரி கார்ட் நமக' என நடுத்தெரு நாரணர்களாக அலையும் தமிழ் மாந்தர்களின் அவலத்தை வெளிப்படுத்தியுள்ளார். மனிதரின் மரணத்துக்குக் கணக்கெழுதும் சித்திரகுப்தனுக்கே இலங்கையில் இடமில்லாமல் எவரெவரோ அவரது கணக்கையே முடிக்க முயலும் சித்திரிப்பும் குறியீடும் சிந்தனைக்கு மகிழ்வூட்டுவனவாகும்.

தமிழில் நாடகப் பிரதிகள் இல்லையென்ற முணுமுணுப்புக்கள் தொடங்கி மூன்று தசாப்தங்களாகி இன்னும் அத் தேவையைத் திருப்தியாகப் பூர்த்தி செய்யாதுள்ள தமிழ் நாடக இலக்கியச் சூழலில் இந்நூலின் வரவு உற்சாகமளிப்பதாகும்.

சோ. தேவராஜா
தலைவர், கொழும்புத் தமிழ்ச் சங்கம்
இணைப்பாளர் - தேசிய கலை இலக்கியப் பேரவை
12.06.2001



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உட்புகுமுன்......

இந்த நாடகங்கள் சமகாலப் பிரச்சனைகளை மையமாக வைத்து எழுதப்பட்டவையாகும். "அகதிமுக(ா)ம்" 1998ம் ஆண்டு அரச தமிழ் நாடக விழாவிற்காகவும், அதே ஆண்டு யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்க கொழும்புக் கிளை, கல்லூரி அபிவிருத்திக்கு நிதி திரட்டுவதற்கென மேடையேற்றுவதற்காக "தரை தட்டிய மீன்கள்" என்ற நாடகமும், கொழும்பு இந்துக் கல்லூரியின் 1999ம் ஆண்டு கலை விழாவிற்காக "மிலேனியத்தில் நாரதர்" என்ற நாடகமும் எழுதப்பட்டவையாகும்.

அகதிமுக(ா)ம், தரை தட்டிய மீன்கள் என்ற நாடகங்களை பிரதியாகவும், அரங்க ஆற்றுகையாகவும் பார்த்த அன்றைய கலைக்கழக நாடகக் குழுத் தலைவராக இருந்த திரு.வீ.ஏ.திருஞானசுந்தரம் அவர்களும், அகதிமுக(ா)ம் நாடகத்தை சிறந்த பிரதியாகத் தெரிவு செய்தும், முதல் வட்டத் தெரிவுகளுக்கு நடுவராகக் கடமையாற்றியும், தரை தட்டிய மீன்கள் நாடகத்தை அரங்கில் பார்த்தவரும், தேசிய கலை இலக்கியப் பேரவையின் இணைப்பாளருமான, திரு.சோ.தேவராஜா அவர்களும் தமது கருத்துக்களை தந்தமைக்கு எனது நன்றிகள்.

நூல் வெளியிடும் முயற்சிகளை ஊக்குவிக்கும் எனது மனைவி சிவசோதிக்கும், மகள் ஜானகிக்கும் (ஜானு), மகன் சுஜேனுக்கும் நன்றிகள்.

இது இலங்கைத் தமிழ் நாடக உலகிற்கு எனது சமர்ப்பணம்.

நாடகக் கலைஞர்களுக்கு உதவும் வகையில் நாடக அரங்கேற்றத்திற்கான குறிப்புக்களையும், மேடையமைப்பிற்கு உதவும் வகையில் படங்களையும் சேர்த்துள்ளேன்.

அன்புடன் ......

அருணா செல்லத்துரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே........


| | |
|---|---|
| அகதிமுக(ா)ம் | 1– 56 |
| தரை தட்டிய மீன்கள் | 57– 120 |
| நவீன நாரதர் | 121 – 143 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதி முக(ா)ம்

(மேடை / வானொலி நாடகம்)

திரை மூடப்பட்டிருக்கிறது.

ஒலி: வெடிச் சத்தங்கள் கேட்ட வண்ணம் இருக்கின்றன. விமானங்கள் பறக்கும் ஒலி, மனித ஓலங்கள் ஆகியன கேட்க வேண்டும். பின்னர் இந்த ஒலிகள் குறைய சோக இசை தொடர வேண்டும்.

திரை விலகுகிறது

மேடையில்: கிடுகுகளால் வேயப்பட்ட நீண்ட கொட்டில்கள் இரண்டு முள் வேலி. வலது பக்கத்தில் ஒரு ஒளி வட்டத்துள் ஒரு அதிகாரி சிறிய மேசை போட்டு உள்ளே வருபவர்களை பதிவு செய்வதற்கான ஆயத்தங்களைச் செய்த வண்ணம் இருக்கிறார். அவருக்குப் பக்கத்தில் பல பாய்கள் சுருட்டி வைக்கப்பட்டிருக்கின்றன. அதிகாரி பொலிஸ் உடையில் இருக்கலாம். மேடையின் இடது பக்கத்தில் ஒரு தண்ணீர்க் (பைப்) குழாய் இருக்கவேண்டும். "தணீரை கனமாய் பாவிக்கவும் என்று பிழையான தமிழில் பெயர்ப் பலகை ஒன்று. மணிபோல் அடிப்பதற்காக இரும்புத் துண்டொன்று கட்டித் தொங்கவிடப்பட்டுள்ளது. சிறிது நேரத்திற்குப் பின்னர் வயோதிபர் ஒருவர் மேடையின் வலது பக்கத்தில் இருந்து உள்ளே வருகிறார். அதிக தூரம் நடந்து வந்த களைப்பு, கசங்கிய உடுப்புகள், கையில் துணியினால் முடியப்பட்ட சிறிய பொதி ஒன்று........)

அதிகாரி: ஆரங்கை உள்ளுக்கை வாறது.... அப்பிடியே அசையாமல் நில்லும். (உறுக்கி) கையைத் தூக்கும், கையைத் தூக்கியபடியே மற்றப் பக்கம் திரும்பி நில்லும்.

கந்தையா: (திரும்பி ஒவ்வொரு பக்கமும் பார்க்கிறார்)

அதிகாரி: இஞ்சேரும் நான் சொல்லுறது விளங்கேல்லையே..... திரும்பி மற்றப் பக்கமாய் நில்லு....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தையா: நான்....இஞ்சை.... பயந்து....தஞ்சம்....

அதிகாரி: அதெல்லாம் எனக்குத் தெரியும்.... முதலிலை நான் சொன்னதைச் செய்யும்.

கந்தையா: நான் என்ன செய்ய வேணும்....

அதிகாரி: திரும்பி வந்த பக்கத்யையே பார்த்துக் கொண்டு நில்லும்

கந்தையா: ஐயா.... நான் .... அது.... ஒண்டும் இல்லை....

அதிகாரி: அதைப் பற்றி எனக்கு கவலை இல்லை.... நான் சொன்னதைச் செய்தால்தான் உம்மை உள்ளுக்கை விடுவன்.... இல்லையோ விசிலை ஊதி மற்றவையளைக் கூப்பிடுவன்.... என்ன செய்யப் போறீர்....

கந்தையா: (சிறிய பொதியை முன்னால் வைத்து விட்டு திரும்ப முயற்சி செய்கிறார்)

அதிகாரி: இஞ்சேரும் பொட்டலத்தை இந்தப் பக்கம் வைக்க வேண்டாம். உமக்கு முன்னாலை வையும்.... சரியோ அங்கையே வைச்சுப்போட்டு, கையைத் தூக்கிக் கொண்டு பின்னாலை வாரும்....

கந்தையா: (கைளைத் தூக்கிப் பின்பக்கமாக திரும்புகிறார்) ஐயா நான் ஒரு நாளும் பின்பக்கமாய் நடந்ததில்லை.

அதிகாரி: இண்டைக்குப் பழகும்.... சரியே.... கொஞ்சம் பொறும்.... நான் ஒண்டு இரண்டு சொல்லுவன்.... பின்னாலை நடந்து வரவேணும் சரியோ....

கந்தையா: சரி ஐயா.... சொல்லுங்கோ....

அதிகாரி: ஒண்டு.... இரண்டு....மூண்டு....நாலு.... சரி அப்படியே நில்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(கந்தையரை நெருங்கி உடம்பு முழுவதையும் சோதனை இடுகிறார். பின்னர் அவரை தன் பக்கம் திருப்பி சோதனை செய்கிறார். இடுப்புக்குள் ஏதோ தட்டுப்பட அதை எடுக்கச் சொல்கிறார். கந்தையா எடுத்துக் கொடுக்கிறார். அது ஒரு கொட்டப்பட்டி, அதை பிரித்துக் காட்டச் சொல்லுகிறார். அதில் ஒன்றும் இல்லாதபடியால் சந்தோசமடைகிறார்.)

கந்தையா: சேர்.... என்ரை பொட்டணி.... அதை....

அதிகாரி: (இடைமறித்து) நில்லும்.... அப்பிடியே முதலிலை வந்தது போலை பின்பக்கமாய்....போய் அதை எடுத்துப் பிரிச்சுக் காட்டும்.....

கந்தையா: சேர்.... நான் பின்பக்கமாய்....

அதிகாரி: கனக்க கதைக்க வேண்டாம்.... சொன்னதைச் செய்யும்.

கந்தையா: சரி....சேர்....

அதிகாரி: ஒண்டு.... இரண்டு....மூண்டு.... சரி அப்படியே நில்லும்.... அந்தப் பக்கத்தை பார்த்தபடியே.... உம்மடை பொட்டணியை அவிழும்....

கந்தையா: (குனிந்து பொட்டணியை அவிழ்க்கிறார்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரி: அவிட்டாச்சா.... (மற்றப் பக்கமாய் திரும்பி நின்றபடியே பயந்த வண்ணம் கேட்கிறார்) அவிட்டாச்சா....

கந்தையா: ஓம் சேர்....

அதிகாரி: சரி அப்படியே பொட்டணியை வைச்சுப்போட்டு மற்றப் பக்கமாய் போய் நில்லும். சொல்லுறது விளங்கேல்லையே.... போய் பொட்டணிக்குப் பக்கத்திலை நிண்டு கொண்டு ஒவ்வொண்டாய் எடுத்துக் காட்டும்.... (உறுக்கி) சொல்லுறதைச் செய்யும் ஓய்....

கந்தையா: (ஒவ்வொன்றாய் எடுத்துக் காட்டுகிறார்)

அதிகாரி: (பயந்த வண்ணம் பார்த்துக் கொண்டிருக்கிறார்) சரி.... சுத்தி வந்த துணியையும் உதறிக் காட்டும்.

கந்தையா: (துணியை உதறிக் காட்டுகிறார்)

அதிகாரி: சரி.... எல்லாத்தையும் சுத்திக் கட்டிக் கொண்டு வாரும்.... உம்மடை பெயரைப் பதிய வேணும்....

கந்தையா: இனித்தானோ ஐயா....

அதிகாரி: பேசாமல் சொல்றதைச் செய்யும்.... இல்லாட்டில் இஞ்சை இருக்க விடமாட்டம்.

கந்தையா: சரி ஐயா....

அதிகாரி: (கதிரையில் அமர்கிறார்) சரி உம்மடை பெயரைச் சொல்லும்....

கந்தையா: ஐயா கனக்கத் தூரம் நடந்து வந்தனான்.... குடிக்கக் கொஞ்சம் தண்ணி தருவியளே....

அதிகாரி: இஞ்சேர் .... இஞ்சை எல்லாம் சட்டப்படி தான் நடக்கும்.... முதலிலை பெயரைப் பதிய வேணும். அதை மேலதிகாரிகளுக்கு அனுப்ப வேணும்.... பிறகு அதுக்கு கிளியரன்ஞ் எடுக்க வேணும்.... அதுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகு தான் குடிக்கிறதுக்கு தண்ணி குடுப்பம்.... அதாலை உன்ரை விபரங்களை சொன்னியெண்டால் கெதியாய் தண்ணி கிடைக்கும்.... பொய் விபரங்கள் சொன்னியெண்டால்.... அவை கிளியரன்ஞ் தராயினம்.... பிறகு உனக்கு குடிக்கத் தண்ணியும் கிடைக்காது.... சரியோ என்ன சொல்றாய்....

கந்தையா: நான் உண்மையைச் சொல்லுவன் ஐயா....

அதிகாரி: (புத்தகத்தை எடுத்துப் பதியத் தொடங்குகிறார்) உம்மடை பெயரென்ன....

கந்தையா: கந்தையா....

அதிகாரி: (உறுக்கி) ஓய் உம்முடைய முழுப் பெயரைச் சொல்லும்....

கந்தையா: என்ரை முழுப் பெயர் கந்தையா....

அதிகாரி: ஏய்.... உன்ரை தகப்பன்ரை பெயரையும் சேர்த்துச் சொன்னால் தான் முழுப் பெயர் சரியே.... சொல்லும் உம்முடைய முழுப் பெயர் என்ன....

கந்தையா: பொன்னர் கந்தையா....

அதிகாரி: விலாசம்....

கந்தையா: வடமராச்சி....

அதிகாரி: வடமராச்சி எண்டு பெரிய பெருமையாய்ச் சொல்லுறீர் என்ன? விலாசத்தைச் சொல்லும்....

கந்தையா: இலக்கம் 18 யாழ்ப்பாணம் றோட்.... வல்வெட்டித்துறை....

அதிகாரி.... என்ன வேலை செய்தனீர்....

கந்தையா: கிளாக்கராய் இருந்தனான்....

அதிகாரி: இப்ப....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தையா: றிற்றையர் பண்ணிட்டன்....

அதிகாரி: இதுக்கு முந்தி அகதி முகாங்களிலை இருந்து பழக்கம் இருக்கோ....

கந்தையா : ஓம் ஐயா

அதிகாரி: எங்கையிருந்தனீர்.... எப்ப இருந்தனீர்....

கந்தையா: கடைசியாய் கொழும்பிலை அகதியாய் இருந்தது 1983லை .... மகாநாமா பள்ளிக்கூடத்திலை இருந்தனான்....

அதிகாரி: எத்தினை நாள் இருந்தனீர்....

கந்தையா: இரண்டு மாதம்

அதிகாரி: பிறகேன் வெளிக்கிட்டனீர்....

கந்தையா: இரண்டு மாதத்தாலை யாழ்ப்பாணம் போன ஆக்களெல்லாம் திரும்பி வந்திட்டினம்அதாலை எங்களையும் போகச் சொல்லி அகதி முகாமை மூடிப் போட்டினம்.

அதிகாரி: அதுக்கு முந்தி எங்கையாவது இருந்தனீரே....

கந்தையா: ஓமய்யா.... சிறி எழுத்துப் பிரச்சினை ஒண்டு நடந்திது தெரியுமே....

அதிகாரி: அதுதான் இப்ப சிறீ எழுத்தெல்லாம் மாத்தி கோடு போடத் தொடங்கிட்டம்.

கந்தையா: அப்ப அது பெரிய பிரச்சினை ஐயா.... அந்த நேரம் எங்களோடை வேலை செய்த சில்வா வீட்டிலை ஒரு பதினைஞ்சு நாள் அகதியாய் இருந்தனான்.

அதிகாரி: அது அகதி வாழ்க்கையில்லையே காணும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தையா: அதுகும் வெளியிலை வரப் பயந்து அவையின்ரை வீட்டிலை அவையின்ரை பாதுகாப்பிலை இருந்தது. தானை ஐயா

அதிகாரி: சரி அதையும் அகதி முகாம் எண்டு பதியச் சொல்லுறீரோ.

கந்தையா: ஒமய்யா.... பிறகு.... பெரிய கட்சி ஒண்டு ஆட்சியிலை தோத்துப் போச்சு. அதாலை எங்களுக்கு அடி.... பின்னை அதுக்கும் பெர்னாண்டோ வீட்டிலை போய் இருந்தனாங்கள்....

அதிகாரி: அவையின்ரை வீட்டிலை எத்தினை நாள் இருந்தனீங்கள்....

கந்தையா: அது ஒரு இரண்டு மாதம் வரும்....
இதுகும் முன் அனுபவம்தானை ஐயா.... பின்னாலை இதெல்லாம் இஞ்சை புறமோசனக்கு உதவும்.... அதாலை இன்னும் ஒண்டையும் குறிச்சு வையுங்கோ ஐயா.... இந்த நாட்டிலை எலக்சன் நடந்தாலென்ன, நடக்காவிட்டாலென்ன, வேறை என்ன பிரச்சினை நடந்தாலும் நாங்கள் தான் அகதிகளாய் போகிறது....

அதிகாரி: அதெல்லாம் எனக்குத் தேவையில்லை.... வேறை எப்பெப்ப எங்கையெங்கை அகதியாய் இருந்தனீர் அதைச் சொல்லும்....

கந்தையா: ஐயா அதைச் சொல்லுறன்.... எனக்கு குடிக்கத் தண்ணி கொஞ்சம் தந்தால் நல்லது....

அதிகாரி: ம்.. எங்களுக்கு சரிப்பட்டு வருவீர் போலை தெரியுது.... பின்னுக்கு உம்மடை உதவியும் தேவைப்படும் .... சரி.... சரி போய் தண்ணி குடியும், அதுக்கு முந்தி எனக்கு ஒரு சத்தியம் செய்து தரவேணும்.

கந்தையா: என்னெண்டாலும் சொல்லுங்கோ ஐயா.... செய்வன் .... கொஞ்சம் தண்ணி தாங்கோ....

அதிகாரி: கொஞ்சம் பொறும்.... தண்ணி குடிக்க விடுவன்.... உமக்கு சிங்களம் தெரியுமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தையா: ஓமய்யா நல்லாய் கதைப்பன்....

அதிகாரி: அப்ப.... இஞ்சை ரீ.வி. க்காரர் வந்தால் நீர்தான் முன்னுக்கு வந்து கதைக்க வேணும்....

கந்தையா: ஓமய்யா....உதென்ன பெரிய வேலையே.... ஐயா கொழும்பிலை வேலை செய்யேக்கை நான்தான் அரசாங்கக் கட்சி தொழிலாளர் யூனியன் தனாதிகாரி....

அதிகாரி: அப்ப நாங்கள் சொல்றபடியெல்லாம் செய்யிறதுக்கு உமக்கு தெரியும்.... என்னெண்டு சொல்ல வேணும்....

கந்தையா: இஞ்சை எல்லாம் நல்லாய் நடக்குது எண்டு சொல்ல வேணும் சரிதானை ஐயா....

அதிகாரி: அது மட்டுமில்லை.... சாப்பாடு கிடைக்கிதோ இல்லையோ நல்ல சாப்பாடு கிடைக்குது எண்டு சொல்லவேணும்.... நல்ல வசதியான இடம். இஞ்சை உள்ள ஆக்கள் எல்லாம் நல்லாய் எங்களைக் கவனிக்கினம் எண்டு சொல்ல வேணும்.....

கந்தையா: அதெல்லாம் சரியாய்ச் செய்வன் ஐயா.... நீங்கள் என்னை ஸ்பெசலாய்க் கவனிப்பியள் தானை....

அதிகாரி: அதெல்லாம் நாங்கள் செய்வம்.... நீர் ஆர் வந்தாலும் முன்னுக்கு வந்து இந்த விசயங்களைச் சொல்ல வேணும் சரியோ....

கந்தையா: இருபது வருசமாய் அரசாங்கத் தொழிற்கட்சி தனாதிகாரியாய் இருந்தனான்.... ஐயா....

அதிகாரி: கொஞ்சம் பொறும்.... பொறும்.... இருபது வருசமாய் இந்த நாட்டிலை ஒரு கட்சி ஆளும் கட்சியாய் இருந்ததில்லை....பிறகெப்படி நீர் தனாதிகாரியாய் இருந்திருக்க முடியும்.... பொய் சொல்லாதையும்.... பிறகு கஷ்ரம்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தையா: அது ஐயா..... (நெருங்கி வந்து ரகசியமாய்) ஆளும் கட்சியா வாற கட்சியோட நானும் சேர்ந்து கொள்ளுவன்.

அதிகாரி: அதெப்பிடி..... விளங்கேல்லையே

கந்தையா: அதெப்பிடியெண்டால்.... புதுக்கட்சி ஆளுங்கட்சியாய் வரேக்கை முந்தி இருந்த கட்சியைப் பற்றி பிழையாய் இரண்டு அறிக்கை விட்ட உடனை அவையள் என்னை விசாரணை செய்யிறதாய்ச் சொல்லுவினம்.... உடனை அந்தக் கட்சியை விட்டு விலகிடுவன்....

அதிகாரி: அப்பிடிச் செய்து போட்டு பிறகென்ன செய்வீர்....

கந்தையா: பிறகு ஆளுங்கட்சிக்கு விண்ணப்பம் செய்வன்.... அவையள் சேத்துப் போடுவினம்....

அதிகாரி: அப்ப சந்தேகப்படாயினமோ....

கந்தையா: சந்தேகப்படத்தான் செய்வினம்.... அப்ப எங்கடை ஆக்களைப் பற்றி கோபமாய் இரண்டு அறிக்கை விட்டால் சரி.... (ரகசியமாய்) அவையளுக்கு நல்ல வடிவாய் தெரியும்.... எங்களைப் போலை ஆக்களுக்கு ஒரு பொலிசி..... அதுதான் கொள்கை இல்லையெண்டு முன்னுக்கு கொஞ்சம் ஒரு மாதிரிப் பார்த்தாலும் பிறகு சேத்துக் கொள்ளுவினம்.... கொஞ்சக் கூட்டங்களுக்குப் போய் தலைவர்மாருக்கு மாலை போட்டால் சரி....

அதிகாரி: நல்ல அனுபவம் உள்ளாள் போலைத் தான் இருக்கு... போய் தண்ணி குடிச்சிட்டு வாரும்....

கந்தையா: (குழாயடிக்குச் சென்று..... தண்ணீர் குடிக்கிறார்)

அதிகாரி: இந்தாளை கையுக்குள்ளை போட்டு வைச்சிருக்கவேணும்.... இல்லாட்டி எனக்கு ஆபத்து....
(பொன்னம்மா மேடைக்கு பேரனுடன் வருகிறார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னம்மா: சுறுக்கா வாடா.... வீட்டிலை நிக்கிறதில்லை. உன்னைத் தேடி நான் வர .... அந்தாள் அதுக்கிடையிலை எங்களை விட்டிட்டு ஒடிப் போயிட்டுது.... எங்கை போச்சுதோ தெரியேல்லை.... உன்னை இஞ்சை விட்டிட்டு நான் போய் அந்தாளை தேடிக்கொண்டு வாறன்....

அதிகாரி: ஆரது வாறது.... திறந்த வீட்டுக்குள்ளை நாய் புகுந்தமாதிரி .... அப்பிடியே நில்லு.... கையைத் தூக்கு.... மற்றப்பக்கமாய் திரும்பி நில்லு....

பொன்னம்மா: ஐயா.... நாங்கள் பயத்திலை ....தஞ்சம்....

அதிகாரி: அதெல்லாம் எனக்குத் தெரியும்.... நான் சொல்லுறபடி திரும்பி நிண்டால் உள்ளுக்கை விடுவன்....இல்லாட்டி அப்பிடியே வெளியிலை போக வேண்டிவரும். எது விருப்பம்....

பொன்னம்மா: சரியடா தம்பி.... திரும்பி நில்லு.... (இருவரும் திரும்பி நிற்கின்றனர்)

அதிகாரி: (பயந்து பயந்து அருகில் சென்று பெடியனை சோதனை செய்கிறார்)

கந்தையா: (தண்ணீரைக் குடித்து விட்டு திரும்பி) என்ன இது பொன்னம்மா வந்திட்டாள் போலை கிடக்கு.

அதிகாரி: (பொன்னம்மாவிற்கு அருகில் சென்று இடுப்பைத் தொட்டு சோதனை செய்ய முயலும் போது)

கந்தையா: ஐயா.... கொஞ்சம் பொறுங்கோ.... (அதிகாரி கேட்காமல் மேலும் அருகில் செல்ல எத்தனிக்க உரத்த குரலில்) ஐயா கொஞ்சம் பொறுங்கோ.

அதிகாரி: (பயத்துடன் இரண்டடி பின்னுக்கு வைத்து திரும்பி) என்னப்பா.... ஏன் இப்பிடிக் கத்துறாய்.... இவையள் அவையளைச் சேர்ந்தவையோ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தையா: இவையள் ஒரு பகுதியையும் சேர்ந்தவையில்லை.... அவ என்ரை பெஞ்சாதி.... மற்றது என்ரை பேரன்....

அதிகாரி: அப்ப ஏன் முதலிலை சொல்லேல்லை....

கந்தையா: நான் தண்ணி குடிக்கிறதுக்கிடையிலை நீங்கள் இடுப்பைப் பிடிக்கப் போயிட்டியள்....

அதிகாரி: நான் இடுப்பைப் பிடிச்சது அவவை சோதிக்க சரியோ.... நீ கதையை மாத்திப் போடாதை....

கந்தையா: நான் கதையை மாத்தேல்லை ஐயா.... உங்களுக்கு தெரியும் தானை... நான் சேர்ந்திருக்கிறவையை ஒரு நாளும் காட்டிக் கொடுக்க மாட்டன்....

அதிகாரி: (பொன்னம்மாவைப் பார்த்து) ஏன் நீராவது சொல்லியிருக்கலாம் தானை....

பொன்னம்மா: ஐயா நானும் வந்த அவசரத்திலை இவரைக் கவனிக்கேல்லை.... அதுதான் கை பிழைபாடு நடந்து போச்சுது....

அதிகாரி: சரி.... எங்கடை ஆளின்ரை ஆள்.... பொட்டணியை அவிட்டுக் காட்டிப் போட்டு உள்ளுக்கை வாங்கோ....

கந்தையா: பொன்னம்மா.... சும்மாய் சாட்டுக்கு அவிட்டுக் காட்டிப் போட்டு உள்ளுக்கை வாங்கோ....

பொன்னம்மா: (பொட்டணியை அவிழ்த்து காட்டுகிறாள்) இஞ்சேருங்கோ இஞ்சையும் பதிய வேணுமே.... எல்லா விபரத்தையும் சொல்லிப் போடுங்கோ....

அதிகாரி: அது கந்தையா எல்லாம் சொல்லிப் போட்டார்.... என்ன மிஸ்ரர் கந்தையா. அது சரி.... அதார் பெடியன்....

கந்தையா: அது எங்கடை பேரப் பெடியன்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரி: அப்ப பெடியன்ரை தாய் தகப்பன்....

கந்தையா: அவையள் வெளிநாட்டிலை இருக்கினம்....

பொன்னம்மா: (ரகசியமாய்) என்னப்பா அவையள் வன்னிக்குள்ளை இருக்கினம்.... நீங்கள் போய் வெளிநாடு என்று சொல்லுறியள்.

கந்தையா: பேசாமல் இரு பொன்னம்மா.... அதுகும் எங்களைப் பொறுத்தவரையில் வெளிநாடுதான்....தாய் தகப்பன் வன்னிக்குள்ளை இருக்கினம் எண்டு சொன்னால் அது வேறை பிரச்சினை.

அதிகாரி: அதென்ன அவ என்னவோ சொல்லுறா.... மிஸ்ரர் கந்தையா விளக்கமாய்ச் சொல்லும்....

கந்தையா: அது ஐயா.... பொடியன்ரை தாய் தகப்பன் லண்டனிலை இருக்கினம். அதனாலை பிள்ளையை ஏசன்சிக்குள்ளாலை அங்கை அனுப்புறதுக்குப் பார்த்தனாங்கள்.

அதிகாரி: ஏசன்சிக்குள்ளாலை அனுப்புறதோ....

கந்தையா: ஓமய்யா காசைக்கீசை கொடுத்து தலையைக் கிலையை மாத்தி அனுப்பப் பார்த்தம் சரி வரேல்லை.

பொன்னம்மா: (ரகசியமாய்) எங்கையப்பா அனுப்பப் பார்த்தனீங்கள் கிளாலிக் குள்ளாலை வன்னிக்கு அனுப்பப் பார்த்திட்டு.... லண்டனுக்கு அனுப்பப் பார்த்தனாங்கள் எண்டு பொய் சொல்லுறியள்.... கடவுளே என்ன நடக்கப் போகுதோ....

கந்தையா: நீ பேசாமல் இரப்பா.... அதப்பா முந்திக் கிளாலி, இப்ப வவுனியாதான் எங்கடை பாங்கொக் இல்லாட்டி சிங்கப்பூர்.... அங்கை வந்திட்டால் எங்கையும் மாறிடலாம்....

அதிகாரி: அதென்ன பாங்கொக் கிளாலி எண்டெல்லாம் சொல்லுறியள்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தையா: (அதிகாரி அருகில் வந்து) அது வந்து பாருங்கோ பொடியனை தாய் தகப்பனிட்டை அனுப்புறதுக்கு ஏசன்சிக்காரன் பாங்கொக் சிங்கப்பூர் எண்டெல்லாம் கூட்டிக் கொண்டு போய் ஏலாமல் திரும்பி வந்திட்டான். அதுதான் பொன்னம்மா சொல்றா.....

ராஜன்: அப்பப்பா.... அம்மாவும் அப்பாவும் முல்லைத்தீவிலையிருந்து கடிதம் குடுத்து விட்டவைதானே....

கந்தையா: (வாயைப் பொத்தி)அது கடிதம் முல்லைத்தீவு போய்த்தான் யாழ்ப்பாணம் வந்தது.... நீ பேசாமல் இரடா....

அதிகாரி: அதென்ன பொடியன் முல்லைத்தீவு எண்டெல்லாம் சொல்லுறான்....

பொன்னம்மா: அது வந்து பாருங்கோ.... பெடியன்ரை தகப்பன் தாய் அதுதான் எங்கடை மகளும் மருமகனும் அங்கே போனாப் போலை திரும்பி வாறதுக்கு பாஸ் குடுக்கினமில்லை....

அதிகாரி: அதென்ன பாஸ் குடுக்கேல்லை எண்டு சொல்லுறா.

கந்தையா: அதென்னெண்டால் ஐயா....நேரடியாய் லண்டனுக்குப் போறதுக்கு விசா குடுக்கேல்லை.... அதைத்தான் இவ பாஸ் எண்டு சொல்லுறா....

ராஜன்: அப்பப்பா.... அங்கை குடுக்கிறது பாஸ்தான் அப்பப்பா....

பொன்னம்மா: அப்பப்பா சொல்லுறது தான் சரி நீ பேசாமல் இரு.... பாஸ் தான் விசா.... விசா தான் பாஸ்.... சரியே....

அதிகாரி: சரி உம்மடை மிஸிஸ் பொன்னம்மா.... கந்தையா.... பெடியன்ரை பெயர் என்ன எண்டு பதியிறது....

பொன்னம்மா: ராஜன்....பிர....

கந்தையா: ராஜன் பிரதாபன் ஐயா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னம்மா: ஏனப்பா பெயரையும் மாத்திறியள்

கந்தையா: (ரகசியமாய்) உந்தப் பெயரையெல்லாம் இஞ்சை வைச்சால் கரைச்சல் அப்பா.... நீ பேசாமல் இரு....

அதிகாரி: அப்ப பொடியன்ரை முழுப் பெயர்.... ராஜன் பிரதாபன்.... சரி தானே....

கந்தையா: ஓமய்யா....

அதிகாரி: நீங்கள் மூண்டு பேரும் உதிலை இரண்டு பாய் எடுத்துக் கொண்டு போங்கோ....

பொன்னம்மா: என்ன ஐயா நாங்கள் மூண்டு பேர் இருக்கிறம்.... இரண்டு பாய்தான் தாறியள்....

கந்தையா: ஓமய்யா....இப்பவும் என்ரை மனிசிக்குப் பயம்....அதாலை இன்னுமொரு பாய் குடுத்தியள் எண்டால் நல்லது....

அதிகாரி: இரண்டு பாயையும் ஒண்டாய் போட்டிட்டு மூண்டு பேரும் படுக்க வேணும்.... அதுதான் இஞ்சத்தைச் சட்டம்....

கந்தையா: அதுதானை ஐயா சொன்னன்....

பொன்னம்மா: இஞ்சருங்கோ உந்த விசர்க்கதையை நிப்பாட்ட மாட்டியளே....

அதிகாரி: அதுக்கு நான் என்ன செய்யலாம். கந்தையா இஞ்சை கிட்ட வாரும் சொல்லுறன் (ரகசியமாய்) பாய் இரண்டையும் ஒண்டாய் போட்டிட்டு பொடியனை நடுவிலை போட்டிட்டு படும். ஒரு பிரச்சினையும் வராது (சிரிக்கிறார்)

கந்தையா: ஐயா.... எங்களை கொஞ்சம் வசதியாய் வைச்சிருக்க வேணும்.... ஏனென்டால் நாங்கள் தானை முதலிலை இஞ்சை வந்தது.... இப்ப பாக்கப் போனால் நாங்கள்தானை சீனியர்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அதிகாரி: சரி.... சரி.... மூண்டு பாயைக் கொண்டு போங்கோ.... மறைச்சு சுத்தி வைச்சிருங்கோ.... சரியோ....

கந்தையா: அப்ப ஐயா எங்களுக்குச் சாப்பாடு....

அதிகாரி: சாப்பாட்டு நேரத்துக்கு மணி அடிப்பம்.... அப்ப எல்லாரும் வரிசையாய் வரவேணும் சரியோ.... எங்கை பாப்பம் நான் இடம் வலம் சொல்லுவன். இடம் வலம் சொல்லிக் கொண்டு வரிசையாய் போகவேணும்.... எங்கை பாப்பம் ....இடம்....வலம்....இடம்....வலம்....

பொன்னம்மா: மெய்யப்பா.... முந்தி பள்ளிக்கூட காலத்திலை இடம் வலம் போட்டது இப்ப மறந்து போச்சு....

ராஜன்: அம்மம்மா... நாங்கள் இப்பவும் போடுறனாங்கள்.... நான் முன்னுக்குப் போறன் நீங்கள் பின்னாலை வாருங்கோ.... எங்கை.... இடம்.... வலம்.... இடம்.... வலம்.... (கொஞ்ச தூரம் போன பின் கொட்டிலுக் கருகில் போனதும்)அயிஸ் ரைட் ... .லெவ்ற் ரேண்....இடம் வலம்....



(கொட்டிலுக்குள் போய் பாய்கள், பொட்டணிகளை வைக்கிறார்கள். மங்கிய ஒளியில் மேலும் பலர் வருவதும்.... பெயர்களைப் பதிவு செய்வதும்.... இடம் வலம் போட்டு கொட்டிலுக்குள் போவதும் வேகமாகக் காட்டப்பட வேண்டும்.)
(ஒளி மங்கி காட்சி முடிவடைகிறது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி 2

(காலை வேளைக்கான ஒலி.... வெளிச்சம் குறைந்திருந்து கூடிக் கொண்டு வருகிறது. முகாமுக்குள் இருப்பவர்கள் ஓடி ஓடி வந்து பைப்பில் தண்ணீர் பிடித்துக் கொண்டு செல்கிறார்கள். சிலர் தங்கள் காலைக்கடன்களை முடிப்பதற்கு அவரசப்படுவது போலவும், சிலர் முகம் கழுவுவது போலவும், மற்றும் சிலர் குழந்தைகளுக்கு முகம் கழுவுவதுபோலவும் நடிக்க வேண்டும். அதிகாரி மேடைக்குள் வந்து மணியை அடிக்க வேண்டும். அது சாப்பாடு தயார் என்பதைக் காட்டும் ஒலி.... சிலர் கோப்பைகளுடன் கொட்டிலுக்கு முன்னால் வரிசையாக நிற்கிறார்கள். ராஜன் மட்டும் முன்னுக்கு.... கந்தையா அடுத்தது பொன்னம்மா தொடர்ந்து நிற்க முன்னுக்கு வரச் சொல்லி அதிகாரி ஆணையிடுகிறார். பாண் பெட்டியுடன் ஊழியர் ஒருவர் தயாராக இருக்கிறார்.)



(நடிகர்களின் தொகையைப் பொறுத்து வரிசையைத் தீர்மானிக்கலாம்)

அதிகாரி.... மார்க் ரைம்....

ராஜன்: (நின்ற இடத்திலேயே) இடம்.... வலம்....இடம்....வலம்....

அதிகாரி: மார்ச் வோர்வர்ட்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜன்: இடம் வலம்.... இடம் வலம்....இடம் வலம்.... (சிலர் முண்டியடித்துக் கொண்டு முன்னுக்கு வர முயற்சி செய்கிறார்கள்)

அதிகாரி: ஹோல்ட்....ஹோல்ட்.....

(ஒருவர் குறுக்கே பாய்ந்து மற்றவருக்கு முன்னால் நிற்க முயற்சி செய்கிறார்)

அதிகாரி: (அருகில் சென்று பிரம்பினால் காலுக்கு அடித்து) எல்லாரும் சரியாய் வரிசையிலை நின்று பழக வேணும்.... இல்லாட்டி உங்களுக்கு சாப்பாடு கிடைக்காது.... சரியோ.... சொல்லும்.... இடம் வலம்....இடம் வலம்....

பொன்னம்மா: என்னப்பா எங்களை யுத்தத்திற்குப் பயிற்சிப்படுத்துகினமோ....

கந்தையா: பேசாமல் இடம் வலம் போடுமப்பா.... இடம் வலம்.... ஹோல்ட்....

அதிகாரி: எல்லாரும் அப்படியே நில்லுங்கோ.... சரி.... பாண் துண்டுகளைக் கொண்டு வந்து குடுங்கோ....

(பாண் விநியோகம் ஆரமபிக்க நடுவில் நின்ற இராமு முன்னுக்கு வர முயற்சி செய்கிறார்)

கந்தையா: இராமு முன்னுக்கு வந்து வரிசையைக் குழப்பாதை.... அப்படியே வரிசையிலை நில்லு....

இராமு: நீங்கள் முன்னுக்கு நிக்கிறியள். அதாலை சொல்லுறியள்.... நீங்களும் பின்னுக்கு நிண்டால் நான் செய்யிறதைத்தான் செய்வியள்....

அதிகாரி: அதார் உங்கை கதைவழிப்படுகிறது....

கந்தையா: அது ஐயா இராமு வரிசையை விட்டு முன்னுக்குப் பாயுறார்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிகாரி: (இராமுவின் அருகில் வந்து) நீரே முன்னுக்குப் போக நிக்கிறீர்.... இஞ்சாலை வாரும்

இராமு: (முன்னால் வந்து) அது என்ன காரணம் ஐயா, ஒவ்வொரு நாளும் கந்தையா அண்ணர் குடும்பம் தான் முன்னுக்கு வந்து நிக்கினம்.... வந்த நாளிலையிலிருந்தே இப்படித்தான் நடக்கிது....

அதிகாரி: இஞ்சை என்ரை விருப்பத்திற்கு ஏற்ற மாதிரித்தான் நடக்கவேணும் ஒருதரும் கதைக்க ஏலாது....
(தருமு முன்னே வந்து)

தருமு: இஞ்சை கதைக்கிற உரிமையும் இல்லைப் போலை கிடக்கு....

அதிகாரி: ஆரும் இஞ்சை உரிமையைப் பற்றிக் கதைச்சால் உள்ளைதான் போக வேண்டி வரும்.

இராமு: நாங்கள் உள்ளை இருந்துதான் வெளியிலை வந்திருக்கிறம்....

அதிகாரி: திரும்பவும் உள்ளை போகப் போறியளோ

தருமு: தனி மனித சுதந்திரத்திலை கையைப் போடுறியள்.... நாங்கள் ஆர்ப்பாட்டம் செய்வம்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரி: உங்கை நாளுக்கு நாள் ஆர்ப்பாட்டம் நடக்குது.... என்னத்தைக் கண்டினம்.... ஒண்டும் நடக்கேல்லை.... நடக்கிறது தான் நடக்கும்....

இராமு: (முன்னுக்கு வந்து) தனி மனித சுதந்திரத்தைப் பறிக்காதே.

தருமு: ஊழல் ஒழிய வேண்டும்.....

இருவரும்: ஊழல் ஒழிய வேண்டும்.... தனி மனித சுதந்திரத்தைப் பறிக்காதே.... பேச்சுச் சுதந்திரத்தை பறிக்காதே.... எழுத்துச் சுதந்திரத்தைப் பறிக்காதே....

தருமு: ஊழல் ஒழிய வேண்டும்....

இருவரும்: ஊழல் ஒழிய வேண்டும்.... தனி மனித சுதந்திரத்தைப் பறிக்காதே.... பேச்சுச் சுதந்திரத்தை பறிக்காதே.... எழுத்துச் சுதந்திரத்தைப் பறிக்காதே....

அதிகாரி: நல்லாய்க் கத்துங்கோ.... தொண்டை கிழியட்டும். இஞ்சை ஒண்டும் நடக்காது....

கந்தையா: (அதிகாரி அருகில் சென்று) ஐயா நான் ஒண்டு சொல்லட்டே.....

அதிகாரி: (ரகசியமாய்) சொல்லும்.... என்ன செய்யலாம் இவங்களை....

கந்தையா: எத்தினை தொழிற்சங்கத்திலை தனாதிகாரியாய் இருந்த அனுபவம் எனக்கு இருக்கு.... எத்தினை நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நான் தோற்கப் பண்ணியிருக்கிறன்....

அதிகாரி: அது சரி இதை நிப்பாட்ட வழி சொல்லும்.

கந்தையா: (ஆர்ப்பாட்டக்காரரின் அருகில் சென்று) தம்பியவை இப்ப உங்களுக்கு என்ன வேணும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும்: இஞ்சை நடக்கிற ஊழல் ஒழிய வேணும்.... பேச்சுச் சுதந்திரம் வேணும்....

கந்தையா: அதுக்கு முதலிலை நான் என்ன செய்ய வேணும்....

இருவரும்: நீங்கள் பின்னுக்கு வர வேணும்.... நீங்கள் சூழ்ச்சி செய்யிறியள்....

கந்தையா: உதென்ன தம்பி.... உது பெரிய விசயமே.... ராஜன்....பொன்னம்மா இரண்டு பேரும் பின்னுக்கு வந்து நில்லுங்கோ....

பொன்னம்மா: தம்பி ராஜன் நீ வாடா.... நாங்கள் பின்னுக்கு போய் நிப்பம்.... (இருவரும் பின்னுக்குப் போய் நிற்கிறார்கள்.)

கந்தையா: இப்ப திருப்தியோ தம்பி....

இராமு: ஓம் அண்ணை.... இப்ப திருப்தி.... நீ வா தம்பி நாங்கள் முன்னுக்குப் போய் நிப்பம்....

தருமு: அண்ணை நீங்கள் சொல்லுறியள் எண்டு வாறன்.... இல்லாட்டில் என்ன நடக்கும் தெரியுமே....

இராமு: சரி.... சரி.... வா.... தம்பி....

அதிகாரி: அப்பிடித்தான் இருக்க வேணும்.... நாங்கள் பிரச்சினையில்லாமல் எங்கடை பிரச்சினையைப பேசித் தீர்க்க வேணும்.... அப்பதான் நாங்கள் மற்றவையளுக்கு முன்மாதிரியாய் இருக்கலாம்.... சரி எல்லாரும் வரிசையாய் நில்லுங்கோ.... இப்பதான் நாங்கள் இளைஞர்களுக்கு முன்னுரிமை குடுக்கப் பழகியிருக்கிறம்.... உலக நாடுகளுக்கே இது ஒரு முன்மாதிரி.... சரி தம்பி பாணைக்குடு....

தமிழரசி: (வெளியில் இருந்து வந்துகொண்டே....) ஐயா.... ஐயா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரி: கொஞ்சம் பொறும்.... பொறும்.... நிப்பாட்டும் பாண் குடுக்கிறதை (எட்டிப் பார்த்து) ஆரது .... உள்ளுக்கை வா.... கையை உயர்த்திக் கொண்டு பின்பக்கமாய் திரும்பி நில்லு....
(அவளைச் சோதிப்பதற்காக முன்னுக்கு வந்தவர்.... மற்ற எல்லோரும் தன்னைப் பார்ப்பதைக் கண்டு பொன்னம்மாவைப் பார்த்து)
இஞ்சாலை வா.... பொன்னம்மா.... அவவைப் பார்த்து நல்ல வடிவாய் செக் பண்ணுங்கோ (பொன்னம்மாவிடம் சைகை மூலம், குண்டு சிறிய துப்பாக்கி, சயனைற் போன்றவை இருக்கிறதா எனப் பார்க்கச் சொல்கிறார்) சுறுக்காய் போய்ப் பாருங்கோ....

பொன்னம்மா: (கந்தையரைப் பார்த்து) என்னப்பா உந்தாள் என்னை மாட்டி விடுகுது.

கந்தையா: அதுக்கென்னப்பா செய்யிறது.... நாய்க்கு வேசம் போட்டால் குரைக்கத்தானை வேணும்.... இப்ப மாட்டன் எண்டு சொன்னால் எங்களுக்கு இஞ்சை கிடைக்கிற சலுகை எல்லாம் இல்லாமல் போயிடும்....

பொன்னம்மா: அப்பிடியே அப்பா.... நான் போறன்.... இப்ப நான் என்னய்யா செய்ய வேணும்....

அதிகாரி: போய் வடிவாய் .... செக் பண்ண வேணும்....

பொன்னம்மா: எங்கை பார்ப்பம்.... (சோதனை செய்கிறாள் வயிற்றுப் பக்கத்தை தடவிப் பார்க்கிறாள். திகைத்து திரும்பி) ஐயோ.... இதென்ன இது பெரிசாய் கிடக்கு.... திரும்பு பார்ப்பம்....

தமிழரசி: (திரும்புகிறாள்)

பொன்னம்மா: (தடவிப் பார்க்கிறாள்) ஐயா.... இவள் பிள்ளைத்தாச்சி....

அதிகாரி: ஆளை அனுப்பு வெளியிலை.... இஞ்சை நாங்கள் பிள்ளை பெற இருக்கிற ஆக்களைச் சேர்க்கிறதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமு: இது அநியாயம்.... இஞ்சை பயத்திலை தஞ்சம் கோரி வாற எல்லாரையும் சேர்க்கத்தான் வேணும்....

தருமு: இது மனித உரிமை மீறல்.... ஐ.நா. சபைக்கு முறைப்பாடு செய்யவேணும்.

இராமு: அநியாயத்தைத் தட்டிக் கேட்க வேண்டியது எங்கடை கடமை....

கந்தையா: (அதிகாரி அருகில் சென்று) அதுக்கென்ன ஐயா இப்ப ஆளைச் சேர்ப்பம்.... பிறகு என்ன செய்யிறது எண்டதைப் பற்றி யோசிப்பம்....

அதிகாரி: பிறகு பிரச்சினையொண்டும் வராதே....

கந்தையா: அது ஒண்டும் பிரச்சினை வராது.... நீங்கள் சேருங்கோ....

அதிகாரி: சரி.... நீர் சொல்லுறீர் சேர்க்கிறன்.... (புத்தகத்தை எடுத்து வருகிறார்) பெயரைச் செல்லும்....

தமிழரசி: என்ரை பெயர் தமிழரசி

அதிகாரி: (துள்ளிக் குதிக்கிறார்) இந்தப் பெயரெல்லாம் இஞ்சை சரிவராது.... வேறை சொல்லும்....

இராமு: பெயரை மாற்ற இஞ்சை ஒருத்தருக்கும் உரிமையில்லை....

தருமு: இது தனி மனித உரிமை மீறல்....

கந்தையா: பேந்தும் தொடங்கிட்டாங்கள்.... ஐயா.... (கண்ணையடித்து) அது பரவாயில்லை சேருங்கோ....

அதிகாரி: நீர் சொல்லுறீர் நான் சேர்க்கிறன்.... சரி உம்முடைய முழுப் பெயரைச் சொல்லும்....

தமிழரசி: தமிழரசி.... தம்பி....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரி: இதென்ன பிறகு பெரிய கரைச்சலாய்க் கிடக்கு.... தமிழரசி தம்பி.... உம்மடை புருஷன்ரை பெயரைச் சொல்லும்....

தமிழரசி: அவற்றை பெயர் தான் தமிழரசன்.... ஆனால் தம்பி எண்டும் சொல்லுறவை.

அதிகாரி: அது இதைவிடப் பெரிய கரைச்சலாய் வரும்.... தம்பி எண்டே பதிவம்.... ஆ.... தமிழரசி.... போய் அந்த வரிசைக் கடைசியிலை நில்லும்....

தமிழரசி: (வரிசைக் கடைசியில் போய் நிக்கிறாள்)

கந்தையா: ஐயா வயித்தோடை நிக்கிறாள் அவளுக்கு முதலிலை பாணைக் குடுப்பம்.

அதிகாரி: அப்ப வரிசை மனித உரிமை மீறல்.... அநியாயம்.... ஆ.... அதுக்கும் ஒரு வழி இருக்கு .... ஆ.... எல்லாரும் நிண்ட இடத்திலேயே மார்ச் ரைம்.... இடம்.... வலம்.... இடம்....வலம்....

ராஜன்: இடம்....வலம்....இடம்....வலம்....

அதிகாரி: எபவுட் ரேண்....
(எல்லோரும் திரும்பி நிற்கிறார்கள்) இடம் .... வலம்....இடம்....வலம்.... ஹோல்ட்
(வரிசையில் இப்போது தமிழரசி முன்னுக்கு நிற்கிறாள். கந்தையர் குடும்பம் தொடர்ந்து நிற்கிறது)

அதிகாரி: தம்பி.... இப்ப முதலிலை நிக்கிற ஆளுக்குப் பாணைக்குடும்
(தமிழரசிக்குப் பாணைக் கொடுக்கப் போகிறார்.)

இராமு: இது இப்படிச் செய்யிறது பிழை....

தருமு: இது மனித உரிமை மீறல்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரி: இது எப்படி மனித உரிமை மீறலாகும்.... எல்லாரும் வரிசையிலை வந்தியள்.... நிண்டியள்.... இப்ப முன்னுக்கு நிக்கிற ஆளுக்கு பாண் குடுக்கப் போறம்.... அதுகும்.... வாயும் வயித்தோடை நிக்கிற பெண்பிள்ளைக்கு.... அதைப் பிழையெண்டு சொன்னியள் எண்டால் பெண்ணுரிமை இயக்கம் எல்லாம் உங்களுக்கெதிராய் கொடி உயர்த்தும் சரியோ.... இப்ப என்ன செய்யப்போறியள்....

இராமு: சரி.... நாங்கள் ஒண்டு செய்யேல்லை.... நீங்கள் பாணைக் கொடுங்கோ (பாண் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படுகிறது. பாணை வாங்கி ஆவலுடன் சாப்பிடுகிறார்கள்)

(ஒளி மங்கிக் காட்சி முடிவடைகிறது)

## காட்சி 3

(மேடையின் பின் பகுதியில் வெள்ளைத் துணியால் சதுரமாக மறைத்துக் கட்டி உள்ளே வெளிச்சம் போட்டிருக்கப்படவேண்டும். உள்ளிருப்பவர்களின் நடமாட்டம் ரசிகர்களுக்கு நிழல் போல் தெரிய வேண்டும்....)

அதிகாரி: (அங்கும் இங்கும் அவசரமாக ஒடித் திரிகிறார். மேசையில் ஒரு மாலை வைக்கப்பட்டிருக்கிறது)
கந்தையா.... வெளியிலை வாரும்....

கந்தையா: என்ன ஐயா....

அதிகாரி: இஞ்சேரும் மிஸ்ரர் கந்தையா.... இப்ப இன்னும் கொஞ்ச நேரத்திலை இஞ்சை ஐயா வரப் போறார்.... சரியோ .... நீர் தான் மாலை போட்டு வரவேற்க வேணும்....

கந்தையா: ஐயா பெரிய மினிஸ்ரரே வரப்போறார்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரி: (ரகசியமாய்) எங்களுக்குப் பொறுப்பாய் இருக்கிறவர் தான் வரப்போறார். அவர் வந்த உடனை இஞ்சை எப்படி இருக்கு எண்டு கேட்பார். எல்லாம் நல்ல வசதியோடை இருக்கெண்டு சொல்ல வேணும்....

கந்தையா: எங்கை ஐயா, ஒரு நேரப் பாணோடை எங்களைச் சமாளிச்சுப் போடுறியள்.

அதிகாரி: அது மற்றவைக்கு.... உமக்கும் உம்மடை குடும்பத்திற்கும் மூண்டு நேரமும் நல்ல சாப்பாடும் நல்ல வசதிகளும் கிடைக்குதுதானை.... அதைச் சொல்ல வேணும்.... இல்லையெண்டால் அதையெல்லாம் குறைச்சுப் போடுவன்.

கந்தையா: ஐயா.... நீங்கள் சொல்லுறது எனக்கு விளங்கிது.... மற்றவைபளுக்கு கிடைக்கிதோ இல்லையோ அதைப்பற்றியேன் நான் கவலைப்படுவான்....

அதிகாரி: இப்பதான் உமக்கு விசயம் விளங்கிது.... சரி றெடியாய் நில்லும்.... எங்கை உங்கடை ஆக்கள் எல்லாரையும் கூப்பிடும்....
(மணி அடிக்கப்படுகிறது.... எல்லோரும் ஓடி வருகிறார்கள்)

இராமு: என்னடா இண்டைக்கு இரண்டாம் தரமும் மணி அடிக்கிது.... மத்தியானச் சாப்பாடு தரப்போறாங்களோ தெரியாது. எல்லாரும் ஓடி வாருங்கோ....

தருமு: சரி வா.... தாறதை வாங்கிச் சாப்பிடுவம்.... எல்லாரும் வாங்கோ வெளியிலை....

இராமு: தமிழரசி.... ஓடி வா.... எல்லாரும் போய் நிற்பம்....

தமிழரசி: (மெதுவாக நடந்து வரல்)

அதிகாரி: (ரகசியமாய்) என்னப்பா அந்த தமிழரசியும் வெளியிலை வாறாள்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தையா: ஏனய்யா அவளும் வந்து நிக்கட்டன்.... கொஞ்சம் பொலிவாய் இருக்கும்.

அதிகாரி: அவர் என்ன நினைப்பார்.... அவரோடை வெள்ளைக்காரரும் வருவாங்கள். பிறகு அவங்கள் சொல்லுவாங்கள்.... தமிழரசிக்கு வசதிகளைக் கூட்டிக் கொடு. காலையிலை அந்தச் சாப்பாடு குடு.... புரதச் சத்துள்ள சாப்பாடு குடு.... அது குடு இதுகுடு என்பாங்கள், அதெல்லாம் கரைச்சல்....

கந்தையா: இப்ப நான் இதுக்கு என்ன செய்யவேணும்....

அதிகாரி: எப்படியாவது அவளை உள்ளே போய் இருக்கச் சொல்ல வேணும்....

கந்தையா: அதை என்னட்டை விடுங்கோ ஐயா.... (தமிழரசியை நெருங்கி) பிள்ளை தமிழரசி.... நீ ஏன் இப்ப வெளியிலை வந்தனி.... உந்த வயித்தோடை நீ களைக்கப்படாது பிள்ளை....

தமிழரசி: அது பரவாயில்லை அண்ணை.... நானும் நிக்கிறன்....

கந்தையா: அது தங்கச்சி இப்ப வெளிநாட்டு ஆக்களெல்லாம் வரப் போகினம்.... நீ இப்ப வெளியிலை வந்து இந்த வயித்தோடை நிண்டால் எங்களைப் பற்றி அவையள் என்ன நினைப்பினம்....

இராமு: அவையள் ஒண்டும் பிழையாய் நினைக்காயினம்.... எங்களுக்கிருக்கிற வசதிகளைப்பற்றித் தெரிந்து கொள்ளுவினம்....

கந்தையா: எங்கடை மரியாதையெல்லே போகப் போகுது.... பொன்னம்மா இஞ்சை வா.... தங்கச்சி தமிழரசி களைக்கப் போகுது.... நீ கூட்டிக் கொண்டு போய் உள்ளை விட்டிட்டு வா....

பொன்னம்மா: நீ.... வா பிள்ளை உவையின்ரை கதையை விட்டிட்டு.... நாங்கள் உள்ளுக்கை போவம்.... பிள்ளைப் பெத்தவளுக்கெல்லோ அருமை தெரியும்.... உவையளுக்கு என்ன தெரியும்.... நீ மெதுவாய் நடந்து வா பிள்ளை....

தமிழரசி: அக்கா .... நானும் இவையளோடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னம்மா: அதெல்லாம் பிள்ளைப் பிறந்தப் பிறகு வந்து நில்லு.... இப்ப வா.... வயித்திலை இருக்கிற பிள்ளைக்காகவாவது நீ இப்ப என்னோடை வரத்தான் வேணும். வா பிள்ளை.... நான் வயசிலை மூத்தனான் சொல்லுறன்.... வா பிள்ளை.... நீ வா பிள்ளை. (தமிழரசியை மெதுவாக உள்ளே அழைத்துச் செல்கிறார். உள்ளே தமிழரசி சென்று படுப்பது நிழல் போல் தெரிய வேண்டும்)

இராமு: இது பெரிய அநியாயம்.... அவளுக்கு உரிமையிருக்கு.... தன்னுடைய குறைகளைச் சொல்வதற்கு....

தருமு: இது தனித மனித உரிமை மீறல்....

அதிகாரி: அவள் தன்ரை சுயவிருப்பத்தின் பேரிலை உள்ளுக்கை போயிருக்கிறாள். நீங்கள் ஏன் கத்துறியள்.... பேசாமல் இருங்கோ....

தருமு: அவள் எங்கை உள்ளுக்கை போனாள்.... அவள் உள்ளுக்கு கொண்டு செல்லப்பட்டாள்....

கந்தையா: அது தம்பி.... கொண்டு செல்லப்பட்டது பிரச்சினையில்லை.... அவள் போயிட்டாளே.... அதுக்குப் பிறகும் நீங்கள் நிண்டு கத்துறதிலை பிரயோசனமில்லை.... சரியோ.... வந்து சத்தம் போடாமல் எங்களோடை நில்லுங்கோ....

(இருவரும் அமைதியாக வந்து வரிசையில் நிற்கிறார்கள். முதலில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பாய்ந்து வருகிறார்கள். அதைத் தொடர்ந்து உயரதிகாரி வருகிறார். அவருடன் வேறு பலரும் வருகிறார்கள். கந்தையா முன்னுக்குச் சென்று மாலை போட்டு வரவேற்கிறார். மற்றவர்கள் முண்டியடித்துக் கொண்டு முன்னுக்கு வர முயன்றாலும் அதிகாரி அவர்களை வரவிடாமல் தடை செய்கிறார். உயரதிகாரி சுற்றிப் பார்க்கிறார்)

உயரதிகாரி: எப்படி வணக்கம். இங்கை என்ன குறைபாடு இருந்தாலும் நீங்கள் வெளிப்படையாய் சொல்ல வேணும்.... அப்பத்தான் இஞ்சை வந்திருக்கிற வெளிநாட்டு அதிகாரிகள் மேலை நாடுகளுக் கெல்லாம் சொல்லி உங்களுக்கு தேவையான எல்லாம் பெற்றுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவினம்.... நீங்கள் ஒருதரும் உண்மையைச் சொல்லுறதுக்கு தயங்க வேண்டாம்.... சரியோ.... (அதிகாரியைப் பார்த்து) இஞ்சை ஆர் நல்ல வடிவாய் தங்கடை பிரச்சினையைச் சொல்லக் கூடிய ஆள்....

அதிகாரி: (மற்றவர்கள் முண்டியடித்து வர முற்பட்டாலும்) மிஸ்ரர் கந்தையா தான் நல்லாய் விபரமாய்ச் சொல்லக்கூடிய ஆள்.... நீங்கள் முன்னுக்கு வந்து சொல்லுங்கோ.....



கந்தையா: ஐயா.... உண்மையைத்தானை சொல்ல வேணும்.... இஞ்சை எங்களுக்கெண்டால் எந்தவிதமான குறையும் இல்லை. இஞ்சை எங்களுக்கு நேரத்துக்கு நல்ல சாப்பாடு தருகினம்.... குடி தண்ணீர் பிரச்சினை ஒண்டும் இல்லை. மற்றது சுகாதார வசதிகள் எல்லாம் இங்கை இருக்கு.... நான் இங்கை வேலை செய்யிற அதிகாரிகளைப் பற்றி இரண்டு வார்த்தை சொல்ல வேணும்.... ஏனெண்டால் அவையள் எங்களைப் பாக்கிறது போலை எங்கடை சொந்தக்காரர் கூடப் பாக்கிறதில்லை. அவையள் தங்கடை கடமையை மிகவும் திறமான முறையிலை செய்யினம்.... நாங்கள் அவையளுக்கு நிறைய கடமைப்பட்டிருக்கிறம்.... அவையின்ரை மனிதாபிமான செயல்கள் எல்லாம் உலக நாடுகளுக்குத் தெரிய வேணும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இடையிடையே.... இராமுவும் மற்றவரும் கதைக்க முற்படுகிறார்கள்.... அவர்கள் தடை செய்யப்படுகிறார்கள். உயரதிகாரி தலையை மிகவும் சந்தோசமாக ஆட்டிய வண்ணம் சைகை மூலம் முன்னால் நிற்கும் கமெரா படப்பிடிப்பாளரை அழைத்து)

உயரதிகாரி: தம்பி இவரை ரிவிக்கு ஒரு பேட்டியெடுத்துப் போட வேணும்.... அப்பதானை நாங்கள் என்னென்ன சேவை செய்யிறம் எண்டு மற்றவைக்கும் தெரிய வரும்.... (மறுபக்கம் திரும்பி) நீங்கள் சொன்ன எல்லாத்தையும் கேட்டு எனக்கு மிகவும் சந்தோசம்.... நான் அடுத்த முறையும் இஞ்சை வருவன்.... உங்களுக்கு என்ன குறையிருந்தாலும் உண்மையை மறைக்காமல் சொல்ல வேணும்.... உங்கடை தேவை எல்லாத்தையும் நிறைவேற்றிறதுக்குத்தான் என்னை இஞ்சை அனுப்பியிருக்கு.... சரியோ.... அப்ப நான் போயிட்டு வரப்போறன் (உயரதிகாரி போறதுக்கு வெளிக்கிட்டு.... படப்பிடிப்பாளரை அழைத்து) அவரை பேட்டி எடுத்து, நான் இஞ்சை வந்து பார்த்ததையும், அவர் சொன்னதையும் சேர்த்து நாளைக்கு ரி.வி. செய்தியிலை போடவேணும்.... தேத்தண்ணி குடிச்சிட்டு பேட்டியை எடுங்கோ.....

இராமு: (அதிகாரியும் மற்றையோரும் வெளியே செல்கின்றனர் கந்தையரைப் பார்த்து...) நீங்கள் சொன்னது.... பொய்தானை....

கந்தையா: இஞ்சை தம்பி.... நடக்கிற உண்மைகளைச் சொன்னன்....

தருமு: இஞ்சை எல்லா வசதிகளும் இருக்கெண்டு சொன்னனீர்....

கந்தையா: ஓம் தம்பி அவங்களோடை நாங்களும் கொஞ்சம் அனுசரிச்சுப் போக வேணும்.... அப்பத்தானை எங்கடை உரிமையளை நாங்கள் பெற்றுக் கொள்ளலாம்....

இராமு: இவ்வளவு நாளும் அனுசரித்துப் போயே எங்களுக்கு ஒண்டும் கிடைக்கேல்லை....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமு: உங்களைப் போலை ஆக்கள் பொய் சொன்னதாலைதான்.... நாங்கள் இப்ப இந்தப்பாடு படுறம்....

கந்தையா: தம்பியவை எடுத்ததுக்கெல்லாம் நாங்கள் அடி பிடியெண்டு நிக்காமல் சும்மா சமாளிச்சும் போக வேணும்.

தருமு: உப்பிடியே போய்க் கொண்டிருந்தால் எங்கடை பிள்ளையளுக்கு ஒண்டும் இல்லாமல் போயிடும்....

இராமு: இதுக்குத்தான் சொல்றது.... தேவையானதை தேவையான நேரத்திலை தேவையான இடத்திலை எல்லோரும் ஒற்றுமையாய் நிண்டு கேக்க வேணுமெண்டு.

கந்தையா: எப்ப தம்பி நாங்கள் எல்லாரும் ஒற்றுமையாய் நிண்டு ஒண்டைக் கேட்டனாங்கள்.

தருமு: உங்களைப் போலையாக்கள் இருக்கும் வரைக்கும் ஒண்டும் சரி வராது.

இராமு: காலங் கடந்த பிறகு கேட்டுப் பிரயோசனமில்லை.... சரியோ. இனி இங்கை என்ன பிரச்சினை நடந்தாலும் நாங்கள் தான் எங்கடை பிரச்சினையைச் சொல்லுவம்....

தருமு: நீர் பேசாமல் இருக்க வேணும்.....

கந்தையா: தம்பி நாங்கள் அனுபவப்பட்டனாங்கள்.... எங்கடை சொல்லை நீங்கள் கேக்க வேணும்....

இராமு: மிஸ்ரர் .... கந்தையர்.... உமக்கு கடைசியாய்ச் சொல்றம். இனிமேல் நீர் பேசக்கூடாது.... சரியோ....

தருமு: அப்பிடி நீர் பேசினால் நாங்கள் பேச மாட்டம்.... சரியோ.... பேசுறதுக்கு நீர் இருக்க மாட்டீர்.... சரியே....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தையா: சரி தம்பியவை....
(பொன்னம்மா சேலைக் கூட்டினுள் இருந்து அவசரமாக வெளியே வந்து)

பொன்னம்மா: இஞ்சருங்கோ அப்பா.... ஓடி வாங்கோ.... தமிழரசிக்கு என்னவோ செய்யுது....

அதிகாரி: என்ன விசயம்.... எல்லாரும் கத்துறியள்
(பொன்னம்மா சைகை மூலம் தமிழரசிக்கு பிள்ளை பிறக்க இருப்பதைச் சொல்கிறாள். சேலைக் கூட்டினுள் வெளிச்சம் கூடிக் குறைந்து பின்னர் பெரிய வெளிச்சமாக மாற வேண்டும்.... ஒவ்வொருவரும் ஓடி ஓடித்திரிய வேண்டும். பைப்பில் தண்ணி பிடித்துச் செல்ல வேண்டும்.... மற்றவர் வெளியே சென்று வந்து டொக்ரர்மார் ஒருவரும் இல்லை என்பதைக் கூற வேண்டும்.... தமிழரசி முனகிய வண்ணம் இருந்து பின்னர் சப்தம் கூடி பிள்ளை பிறப்பதற்கான முனகலைக் காட்ட வேண்டும்.... தொடர்ந்து குழந்தை அழும் ஒலி கேட்க வேண்டும்....)

பொன்னம்மா: (வெளியே வந்து) ஆம்பிளைப்பிள்ளை பிறந்திருக்கிது....

தருமு இராமு: (இருவரும்) என்ன ஆம்பிளைப் பிள்ளையோ... (சந்தோசம்)

அதிகாரி: என்ன ஆம்பிளைப் பிள்ளையோ (வெறுப்புடன்)

கந்தையா: (அதிகாரியைப் பார்த்து தானும் வெறுப்புடன்) என்ன ஆம்பிளைப் பிள்ளையோ

தருமு: ஓம் ஆம்பிளைப் பிள்ளை. ஆம்பிளைப் பிள்ளையெண்டாலும் பொம்பிளைப் பிள்ளையெண்டாலும் எங்களுக்கு எல்லாம் ஒண்டு தான்....

இராமு: இன்னும் ஒரு உயிர் இந்த உலகில் பிறந்து விட்டது.... அதுகும் இந்த மண்ணில் கஷ்ரப்பட வந்து விட்டது....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமு: அதுகும் எங்களுடன் சேர்ந்து கஷ்ரப்படப் போகிறது....

கந்தையா: ஏன் தம்பியவை அப்பிடிச் சொல்லுறியள்.... அதுகும் இந்தப் பூமிக்கு வந்து இங்குள்ள சந்தோசங்களை அனுபவிக்கப் பிறந்துள்ளது எண்டு சொல்லுங்கோ....

தருமு: சந்தோசத்தை அனுபவிக்கவோ....

இராமு: அதுகும் எங்களைப் போலை மூச்சு விடக் கூட சுதந்திரம் இல்லாமல் கஷ்ரப்படப் போகுது....

கந்தையா: அப்பிடிச் சொல்லக்கூடாது தம்பி.... இஞ்சை எல்லாத்துக்கும் சுதந்திரம் இருக்கு. நீங்கள் கொஞ்சம் சமாளிச்சால்.... எல்லாம் கிடைக்கும்.

இராமு: எத்தினை நாளைக்கு அஜஸ்ட் பண்ண வேணும்....

தருமு: இன்னும் எத்தனை வருஷம் அஜஸ்ட் பண்ண வேணும்.... அதைச் சொல்லுங்கோ.

கந்தையா: எங்கடை உயிர் இருக்கும் வரை....

தருமு: அதுக்குப் பிறகு....

கந்தையா: என்ரை பிள்ளை....அவையின்ரை பிள்ளையள்

தருமு: அப்ப பரம்பரையே சமாளிக்க வேணும் எண்டு சொல்லுறியள்....

அதிகாரி: (சத்தமாக) இனிமேலும் இங்கை நிண்டு சத்தம் போட்டுக் கொண்டு நிண்டியள்.... உங்களை எல்லாம் பிடிச்சு உள்ளை போட்டிடுவம்.... எல்லாரும் உள்ளுக்கை போங்கோ....
(எல்லோரும் முணு முணுத்த வண்ணம் போகிறார்கள்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரி: கந்தையர் நீர் மட்டும் இஞ்சை வாரும்.... நான் அப்பவே சொன்னனான். அவள் பிள்ளைத்தாச்சி அவளை இஞ்சை சேர்க்க வேண்டாம் எண்டு....

கந்தையா: அதய்யா என்ன வரப்போகுது எண்டு பார்ப்பம்....

தருமு: (வெளியே வந்து.... சத்தமாக) பிள்ளைக்குப் பெயர் சுதந்திரதாசன் .... எண்டு வைக்கட்டாம்.

இராமு: சுதந்திரதாசன்....

தருமு: சுதந்திரதாசன் வாழ்க.... தமிழரசி சொல்லுறாள் அந்தப் பிள்ளைக்கு சுதந்திரதாசன் எண்டுதான் பெயர் வைக்க வேணுமாம்....

அதிகாரி: அப்படிப் பெயர் எல்லாம் இஞ்சை வைக்க ஏலாது....

இராமு: ஏன் வைக்க ஏலாது....

அதிகாரி: இஞ்சை நான் சொல்ற பெயர் தான் வைக்கவேணும்....

தருமு: இது தனிமனித உரிமை மீறல்.... தான் பெற்ற பிள்ளைக்குப் பெயர் வைக்கும் உரிமை பெற்ற தாய்க்கு இருக்க வேண்டும்....

இராமு: அந்த உரிமையையும் கொடுக்காவிட்டால் நாங்கள் ஆர்ப்பாட்டம் செய்வோம்....

அதிகாரி: அந்த உரிமையை உங்களுக்குத் தராவிட்டால் என்ன செய்வீர்கள்....

இராமு: இனிமேலும் பொறுக்க மாட்டோம்.... வன்முறையில் கேட்போம்....

தருமு: எங்களை வன்முறையாளர் ஆக்கிறது உங்கள் கையில் தான் இருக்கிறது....

அதிகாரி: என்ன கந்தையர் நீர் சொன்னீர் கேட்டன், இப்ப கொண்டு போய் கரைச்சலிலை விட்டிட்டுது....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தையர்: ஐயா.... என்னட்டை விடுங்கோ.... நான் ஒரு வழி செய்யுறன்....

அதிகாரி: நீர் என்னத்தையும் செய்யும்.... முதலிலை உவங்களை உள்ளுக்கை அனுப்பும்....

கந்தையர்: தம்பியவை பிள்ளைக்குப் பெயர் வைக்க வேணும்.... அதுதானை விசயம்....

இராமு: நாங்கள் சொல்லுறது.... தமிழரசி விரும்புற பெயரை வைக்க வேணும்....

கந்தையா: சரி.... சரி.... நீங்கள் சொல்லுற பெயரை வைச்சால் போச்சு

தருமு: இப்பவே வைப்பம்.... இல்லை இப்பவே வைக்க வேணும்....

கந்தையா: பெயர் வைக்க வேணும்.... ஆனால் இப்ப வைக்க இயலாது....

இராமு: அப்ப எப்ப பெயர் வைக்கப் போறியள்....

கந்தையா: நாளைக்கு காலையிலை வைக்கலாம்....

அதிகாரி: கந்தையா எப்பிடிக் காலையிலை அந்தப் பெயரை இஞ்சை வைக்கிறது....

கந்தையா: ஐயா அதை என்னட்டை விட்டிடுங்கோ.... தம்பியவை விரும்புகினம். (கண்ணைடியடித்து) அந்தப் பெயரையே வைப்பம்....

இராமு: அப்ப நாளைக் காலையிலை பெயர் வைக்கச் சம்மதிக்கிறியள்....

அதிகாரி: ஓம் சம்மதிக்கிறம் நீங்கள் பயப்படாமல் போய்ப்படுங்கோ....

தருமு: அப்ப உங்களை நம்பிப் போய் படுக்கிறம்....

கந்தையா: ஓம் தம்பி எங்களை நம்பி நீங்கள் போய்ப்படுக்கலாம்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இராமு....தருமு.... இருவரும்.... திரும்பித் திரும்பிப் பார்த்த வண்ணம் உள்ளுக்குப் போகிறார்கள்.
இரவுக்குரிய வெளிச்சம்.கந்தையரும் அதிகாரியும் இரகசியம் பேசுகிறார்கள்.
தமிழரசி பிள்ளையைத் தூங்க வைக்கத் தாலாட்டுப் பாடுகிறாள்)

தமிழரசி: சோ.... சோ.... சோ .... சோ ....
ஆராரோ.... ஆரிவரோ....ஆராரோ....ஆரிவரோ....
ஆர் அடித்து நீ அழுதாய்,
ஆராராரோ ஆரிவரோ

(ஆராரோ......)

கண்ணே, நீ கண்ணுறங்கு
அப்பா அடித்தாரோ அமுதூட்டும் கையாலே
அண்ணா அடித்தாரோ அன்பான கையாலே
ஆரடித்து நீ அழுதாய்

(ஆராரோ......)

கண்ணுறங்கும் போதினிலே
கண்கள் மூடிடட்டும்
காதுகள் திறந்திடட்டும்
காத்திட உன் உரிமையை

(ஆராரோ)

மானம் பெரிதென்பேன்
ஈனம் எமக்கில்லை
வாழ வழிவேண்டும்
வாழப் பிறந்தவனே

(ஆராரோ)

காளையாய் வந்தபின்
கண்ணுறங்க நேரமில்லை
களத்தில் இருக்கையிலே
கைகளுக்குச் சோர்வில்லை

(ஆராரோ)

(கந்தையர் உள்ளே போக அதிகாரி அவரைக் கைதட்டி திருப்பிக் கூப்பிடுகிறார்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரி: கந்தையர் இந்தப் பிள்ளை இஞ்சை இருக்கப் படாது....

கந்தையா: அதுக்கும் ஏதாவது செய்வம்....

அதிகாரி: என்ன செய்யப் போறீர்.... பிள்ளைக்கு உரிமை கொடுக்க வேண்டி வரப்போகுது. அதாலை எங்களுக்கு நிறைய கஷ்ரம் வரப்போகுது. எல்லாரும் உரிமை கேட்கப் போறாங்கள்.

கந்தையா: ஏதாவது யோசிப்பம்.... புதிய புதிய சட்ட திட்டங்களைக் கொண்டு வந்து பிள்ளையின்ரை உரிமைகளைப் பறிப்பம்....

அதிகாரி: அதென்னெண்டு உரிமைகளைப் பறிக்கிறது.

கந்தையா: எங்கடை தேவைகளுக்காக, பிள்ளையிலை எல்லாரும் உரிமை கொண்டாடுவம்.

அதிகாரி: அதெப்படி நீரும் உரிமை கொண்டாடுகிறது.... அதுக்கு தகப்பன் ஆரெண்டு தெரியாது....

கந்தையா: அது இரவிலை பிறந்த பிள்ளை.... அதாலை எல்லாரும் தகப்பனும் தாயும்தான்

அதிகாரி: அது பொதுச் சொத்தெண்டு சொல்ல வாறீர்.... அதுதானை ....அதுக்கு நான் சம்மதிக்க மாட்டன்....அது இந்த அகதி முகாமிலை பிறந்தபடியால், இந்த அகதி முகாமுக்கும் இதைக் கொண்டு நடத்துற எங்களுக்குத்தான் சொந்தம்....

கந்தையா: நாங்கள் தாயைக் கவனமாய் பார்த்து பராமரித்து, பிள்ளையைப் பிறக்க வைச்சனாங்கள்.... அதுகின்ரை தகப்பனும் தமிழ்....அதோடை அண்டைக்கு நான் தமிழரசியை இஞ்சை அகதி முகாமிலை சேர்க்க வேண்டாம் எண்டு சொல்லியிருந்தால் அவள் இஞ்சை இருந்திருக்க மாட்டாள்.... பிள்ளை சுதந்திரதாசனும் பிறந்திருக்க மாட்டான்.

அதிகாரி: நீர் அப்பிடிச் சொல்ல ஏலாது.... நாங்கள் இந்த அகதி முகாமைக் கட்டாமல் விட்டிருந்தால் நீங்கள் எங்கை போயிருப்பியள்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தையா: நீங்கள் கொஞ்சக் காலம் முந்தி வந்தபடியால் இதைக் கட்டினியள் ஆக்களும் கூடிட்டியள்.... அதுக்காக எங்கடை உதவியோடை பிறந்த சுதந்திரதாசனை உங்கடை எண்டு சொல்ல ஏலாது....

அதிகாரி: இஞ்சை பாரும் கந்தையா இப்ப நாங்கள் இப்படியே சண்டை பிடிச்சுக் கொண்டிருந்தால் உள்ளை படுத்திருக்கிற இராமுவும் தருமுவும் விழிச்சுக் கொண்டிட்டாங்கள் எண்டால் கரைச்சல்....

கந்தையா: அப்ப என்ன செய்வம்.... வேறை ஏதாவது முறை யோசிப்பம்.

அதிகாரி: இஞ்சரும் கந்தையா இதைப் பற்றி யோசிக்க என்ன இருக்கு.... நாங்கள் ஒண்டு செய்வமே.... இந்தப் பிள்ளை இஞ்சையிருந்தால் கஷ்ரம்.... இதை இல்லாமல் செய்வதுபோடுவம்.

கந்தையா: ஐயோ வேண்டாம்.... பிறகு எங்களுக்குத்தான் கஷ்ரம்.

அதிகாரி: கந்தையர் உமக்கு இஞ்சையிருக்கிற வசதிகளை கூட்டித் தாறம்....அதோடை நீரும் வைவும், பிள்ளையளையும் தேவையெண்டால் இஞ்சை கூப்பிட்டு வைச்சிரும். சகல வசதிகளும் கிடைக்கும். பிறகேன் பிள்ளை சுதந்திரதாசனைப்பற்றிக் கவலைப்படுறீர்.

கந்தையா: அப்ப எங்களுக்குத் தேவையான எல்லாம் கிடைக்கும் எண்டு சொல்லுறியள்.

அதிகாரி: அதுக்கு நான் பொறுப்பு.... என்ன தேவையோ எல்லாம் கிடைக்கும்.

கந்தையா: அப்பிடியெண்டால் நான் சம்மதிக்கிறன்.... என்ன செய்யப் போறியள் எண்டு சொல்லுங்கோ....

அதிகாரி: கிட்ட வாரும்.... ஒருதருக்கும் தெரியப்படாது.... முக்கியமாய் உள்ளை படுத்திருக்கிறாங்கள் அவங்களுக்குத் தெரியப்படாது....

கந்தையா: என்ன செய்யப் போறியள் எண்டதைச் சொல்லுங்கோ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரி: அந்தப் பிள்ளை.... அதுதான் அந்தச் சுதந்திரதாசன் விடிய இந்த முகாமிலை இருக்கமாட்டான்.

கந்தையா: என்ன கொலை செய்யப் போறியளே....

அதிகாரி: கொலை செய்தால் நாளைக்கு மனித உரிமை மீறல் அது இதெண்டு பெரிய விளக்கங்கள் வரும்.... பிறகு அவன் இவன் எல்லாம் நியாயம் பேச வருவான்.... அதாலை....

கந்தையா: அதாலை ....

அதிகாரி: அந்தப் பிள்ளை விடியறதுக்கிடையிலை இந்த முகாமிலையிருந்து வெளியேற்றப்படும்....

கந்தையா: அதாலை வேறை பிரச்சினையள் ஒண்டும் வராதோ.... பிறகு விடிய படுத்திருக்கிற பெடியள்.... என்ரை உயிரை எடுத்துப் போடுவாங்கள்....

அதிகாரி: அதுக்கும் ஒரு வழி இருக்கு....

கந்தையா: என்ன வழி .....

அதிகாரி: நீரும் நாளைக்கு அவையளோடை சேர்ந்து தேட வேணும்.... கத்த வேணும்.... குளற வேணும்.... என்னையும் வேணுமெண்டால் திட்டலாம்.... (ரகசியமாய்) என்னைக் கடுமையாய் திட்டிப் போடாதையும். கொஞ்சம் மேலோட்டமாய் திட்டும் சரியோ....

கந்தையா: ஐயா.... அது நான் நல்ல வடிவாய்ச் செய்வன்.... முந்தி அறிக்கை விட்டு நல்ல பழக்கம்....

அதிகாரி: அறிக்கைகள் விடும்.... ஆனால் ஆரும் வெள்ளைக்காரங்கள் வந்து கேட்டால் அகதி முகாம் சொந்தக்காரரிலை பிழை இல்லை எண்டு சொல்லிப்போடும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தையா: அது கொஞ்சம் கஷ்ரம்....

அதிகாரி: வெளியிலை நிண்டு கதைக்கேக்கை ஒண்டைச் சொல்லும்.... பிறகு நாங்கள் அவையளை தனிய சந்திச்சு பேசேக்கை மாத்திச் சொல்லும்....

கந்தையா: அதெல்லாம் வடிவாய்ச் செய்வன்.... நீங்கள் எங்களைக் கவனிப்பியள்தானை

அதிகாரி: நீங்கள் எங்களோடை சரிசமமாய் இருக்கலாம்.... சாப்பிடலாம்.... பாட்டியளுக்கு வரலாம்.... பேந்தென்ன குறைவே .... நீங்களும் நாங்களும் ஒண்டாயிடுவம்.... சரியோ....

கந்தையா: சரி ஐயா.... சொன்ன சொல் தப்ப மாட்டியள் தானை....

அதிகாரி: அதெல்லாம் நாங்கள் ஒரு நாளும் சொன்ன சொல் தப்ப மாட்டம்.... இப்ப நீர் போய்ப் படுக்கலாம்.... ஒ....கே....போம்.

கந்தையா: அப்ப ஐயா நானும் நாளைக்கு பொடியளோடை சேர்ந்து கத்தவேணும் நல்லாய்க் கத்துவன்.... நீங்கள் குறை நினைக்கப்படாது.... சரியோ....

அதிகாரி: அதெல்லாம் நாங்கள் பாத்துக் கொள்ளுவம் போய்ப்படும்....

(கந்தையா திரும்பித் திரும்பி பார்த்த வண்ணம் போகிறார். மேடையின் பின்புறமாகச் சென்றதும் ஒளி குறைகிறது.)
(இரவு வெளிச்சத்தில் முகமூடி அணிந்த ஒருவர் சேலை கட்டப்பட்ட கூட்டினுள் சென்று பிள்ளையைத் தூக்கிச் செல்கின்றார். இரவு வெளிச்சம் கலைந்து விடிகாலை வருகிறது. ஒவ்வொருவரும் காலைக்கடமைகளை ஆரம்பிக்கிறார்கள். இரண்டு சிறுவர்கள் ஒரு மூலையில் இருந்தவண்ணம் பார்த்து கொண்டிருக்கிறார்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழரசி: (கூண்டுக்குள்ளிருந்து வெளியே வந்து) ஐயோ என்ரை பிள்ளையைக் காணேல்லை.... ஐயோ என்ரை மகன் சுதந்திரதாசனைக் காணேல்லை.... பொன்னம்மா அக்கா நீங்கள் பிள்ளையைத் தூக்கினனீங்களே....?

பொன்னம்மா: நான் பிள்ளையைத் தூக்கேல்லை.... எங்கை பிள்ளையை படுக்க வைச்சிருந்தனீ....

தமிழரசி: ஐயோ எனக்குப் பக்கத்திலைதான் படுக்க வைச்சிருந்தனான்.... விடியப் பார்க்கப் பிள்ளையைக் காணேல்லை....

பொன்னம்மா: இவங்கள் இராமுவும் தருமுவும் தூக்கிக் கொண்டு போயிருப்பாங்களோ.

தமிழரசி: இராமுவண்ணை, தருமண்ணை.... இஞ்சாலை வாங்கோ.... என்ரை பிள்ளை சுதந்திரதாசனைக் கண்டனீங்களே....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமு: ஏன் தங்கச்சி.... பிள்ளைக்கு என்ன நடந்தது....

தமிழரசி: பிள்ளையைக் காணேல்லை அண்ணை.... (அழுகிறாள்)

தருமு: என்ன சுதந்திரதாசனைக் காணேல்லையோ

கந்தையா: (ஓடிவந்து) என்ன சுதந்திரதாசனைக் காணேல்லையோ

தமிழரசி: ஐயோ நான் இப்ப பிள்ளைக்கு பால் குடுக்கிற நேரம்.... என்னாலை தாங்கேலாது.... எப்படியாவது என்ரை பிள்ளையைத் தேடித் தாருங்கோ. ஐயோ.... நான் என்ன செய்வன்.... என்னாலை தாங்க முடியேல்லையே.



கந்தையா: இது பெரிய அநியாயம்.... பிள்ளையைத் தாயிட்டை இருந்து பிரிக்கிறது உலகிலை பெரிய கொடுமை....

இராமு: இந்த அநியாயத்தை நாங்கள் எல்லாருக்கும் சொல்ல வேணும்....

தருமு: இது மனித உரிமை மீறல்....

அதிகாரி: (வந்து கொண்டே) என்ன இங்கை சத்தம்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தையா: ஐயா தமிழரசி பெத்த சுதந்திரதாசனைக் காணேல்லையாம்....

அதிகாரி: பிள்ளையைக் காணேல்லையா.... இந்த அகதி முகாமிலை இருந்து எப்பிடிப் பிள்ளை காணாமல் போகும்.... இதுக்கு சட்டப்படி நடவடிக்கை எடுக்கப் போறன்.... இதிலையிருந்து ஒருதரும் தப்ப ஏலாது....

கந்தையா: இவ்வளவு பாதுகாப்பான இடத்திலையிலிருந்து எப்பிடி பிள்ளை காணாமல் போகும்.... அது உங்கடை பிழை.... தகுந்த பாதுகாப்பு குடுக்காதது பிழை....

அதிகாரி: (கந்தையரிடம ரகசியமாய்) ஓய் பாதுகாப்பைப் பற்றிக் கதைக்காதையும்.

கந்தையா: (ரகசியமாய்) ஓமய்யா (சத்தமாய்). இது மனித உரிமை மீறல்.... இதுக்கு எப்படியாவது நீங்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேணும்....

தமிழரசி: நீங்கள் எந்த நடவடிக்கை எடுத்தாலும் எனக்குப் பரவாயில்லை எனக்கிப்ப பிள்ளை வேணும்.... ஐயோ என்னாலை தாங்கேலாது....

இராமு: எப்படியாவது நாங்கள் சுதந்திரதாசனைக் கண்டுபிடிக்க வேணும்....

தருமு: நாங்கள் எதுக்கும் தயங்க மாட்டம்....

அதிகாரி: இஞ்சை ஒருதரும் சத்தம் போடக் கூடாது.... இந்த முகாம் எங்கடை கட்டுப்பாட்டிலைதான் இருக்கிது.... இஞ்சை என்ன விதமான சட்ட நடவடிக்கை எடுக்கிறதெண்டாலும்.... அதுக்கு நாங்கள்தான் பொறுப்பு....

கந்தையா: ஐயா நீங்கள் சொல்லுறது சரி.... நாங்கள் சட்டத்திற்கு கட்டுப்பட்டனாங்கள்.

இராமு: நாங்கள் சட்டத்திற்கு கட்டுப்பட மாட்டோம்.... எங்களுக்கு சுதந்திரதாசனைக் கண்டுபிடிக்க வேணும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமு: பிள்ளையைக் கண்டுபிடிக்க வேண்டியது எங்கடை கடமை....

அதிகாரி: நீங்கள் பேசுற மாதிரியைப் பாத்தால் எனக்கு உங்களிலைதான் சந்தேகமாய் இருக்கு.... உங்கள் இரண்டு பேரையும் உள்ளை போட்டு நாலு உதை உதைக்க எல்லாம் சரி வரும்.

தமிழரசி: ஐயோ....அவையள் சுதந்திரதாசனிலை நல்ல பாசம்.... அவையள் இதைச் செய்திருக்க மாட்டினம்.... அவையளை ஒண்டும் செய்யாதேங்கோ....

அதிகாரி: இஞ்சை ஆரைச் சந்தேகப்பட வேண்டும் எண்ட உரிமை எனக்குத்தான் இருக்கு.

தமிழரசி: ஐயா.... சுதந்திரதாசனைப் பெத்தது நான்.... எனக்குத் தெரியும் ஆர் செய்திருப்பினம் எண்டு....

அதிகாரி: அது பெறும் வரைக்கும்தான் உன்ரை பிள்ளை.... பிள்ளையைப் பெத்ததுக்குப் பிறகு அது எங்கடை சொத்து....

கந்தையா: ஓம் பிள்ளை.... நாங்கள் இஞ்சை சட்டப்படிதான் நடக்கவேணும். நீ பேசாமல் இரு.... அவையள் எப்படியாவது சுதந்திரதாசனைக் கண்டுபிடிச்சுக் குடுப்பினம்....

இராமு.... வேலியே பயிரை மேயுது....நீங்கள் என்னடாவெண்டால் சட்டம் பேசுறியள்.

தருமு: இதுக்கு சட்டப்படி நடவடிக்கை எடுக்க ஏலாது.... எங்களாலை இயண்டதைச் செய்ய வேணும்....

அதிகாரி: நீங்கள் எல்லாம் இஞ்சை பேசக்கூடாது.... நான் மட்டும் தான் பேசுவன்.

பொன்னம்மா: (கந்தையா அருகில் வந்து) என்னப்பா உங்களுக்கு எல்லாம் இருக்கெண்டியள்.... இஞ்சை போற போக்கைப் பார்த்தால் உங்களையும் உள்ளை போட்டிடுவான் போலை கிடக்கு....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தையா: நடந்தாலும் நடக்கும் போலை கிடக்கு.... பேசாமல் சமாளிச்சுப் பார்ப்பம்.

பொன்னம்மா: அந்தப் பிள்ளை, சுதந்திரதாசனைக் காணாமல் கவலைப்படுகிது ஏதாவது செய்ய முடியுமோ எண்டு பாருங்கோவன்....

கந்தையா: இப்ப என்னாலை ஒண்டும் செய்ய ஏலாது .... வேணுமெண்டால் பழைய உறவுகளைச் சொல்லி ஒருக்கா கேட்டுப் பார்க்கலாம்....

அதிகாரி: என்ன கந்தையர் உங்கை ஏதோ சொல்லிக் கொண்டிருக்கிறீர்.

கந்தையா: (அருகில் சென்று) ஐயா நாங்கள் முந்தி எவ்வளவு உறவாய் ஒற்றுமையாய் இருந்தனாங்கள்....அதாலை....

அதிகாரி: மிஸ்ரர் கந்தையா இப்ப நீர் இதைப் பற்றிக் கதைச்சால் உம்மையும் உள்ளை தூக்கிப் போட்டிடுவன்....

கந்தையா: அப்பிடியில்லை ஐயா.... முந்தி நாங்கள் ஒரு ஒப்பந்தம் செய்தம்.... அதாலைதான் வந்து கேட்டனான்....

அதிகாரி: இப்ப அது ஒண்டுக்கும் இடம் இல்லை.... பிள்ளையைக் காணேல்லை எண்டு நாங்கள் கவலைப்படுறம்.... நீர் அதுக்குள்ளை வந்து ஒப்பந்தம் பற்றிப் பேசுறீர்.... சும்மா போம் காணும்.... இப்ப எங்களுக்குப் பிள்ளை தான் அவசியம்....

கந்தையா: ஐயா.... நாங்கள் உங்களோடை.... முந்தி.... எப்பிடி எல்லாம்....

அதிகாரி: மிஸ்ரர் கந்தையா இப்ப கனக்கப் பேசினீர் எண்டால் உம்மையும்....

பொன்னம்மா: இஞ்சாலை வாருங்கோ அப்பா. பேந்து உங்களுக்கும் பிரச்சினை வந்திடும்....

அதிகாரி: இப்ப இஞ்சையிருக்கிற ஒவ்வொருவரையும் தனித்தனியாய் விசாரிக்கப் போறம். எல்லாரும்.... அப்பிடியே நில்லுங்கோ.... ஒருதரும் அசையப்படாது....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இந்த நேரத்தில் பெரிய ஒலிகளுடன் வெள்ளையர் ஒருவர் கையில் குழந்தையுடன் வருகிறார். மூலையில் இருந்த பிள்ளைகள் எட்டிப் பார்த்த வண்ணமிருக்கின்றார் எல்லோரும் அவர் பக்கம் வர ஆயத்தமாகின்றனர்.)

வெள்ளையர்: (பின்னணியில் ) எல்லாரும் நில்லுங்கோ....

எல்லோரும்: அந்தா சுதந்திரதாசன்.... அவற்றை கையிலை இருக்கிறான்.

தமிழரசி: ஐயா என்ரை பிள்ளைதான்.... அது.... தாங்கோ பால் குடுக்கப் போறன்.

அதிகாரி: பெத்த பிள்ளையை கவனமாய் பார்க்க முடியாத உனக்கு ஏன் பிள்ளை.... அப்பிடியே நில்லு.... கிட்டப் போகாதை.... (தடுக்கிறார்)

கந்தையா: ஐயா.... அந்தப் பிள்ளைப் பெறு பார்த்தது.... என்னடைய வைப் தான் அவவுக்கு பிள்ளையிலை நல்ல பாசம்.... அதாலை எங்களிட்டை தாங்கோ....

அதிகாரி: மிஸ்ரர் கந்தையா, பிள்ளை பிறந்தது.... இந்த அகதி முகாமில்தான் அதாலை பிள்ளை எங்களுக்குத்தான் சொந்தம்.... நீர் கிட்டப் போகக் கூடாது.... அப்பிடியே நில்லும்....

இராமு: ஐயா சுதந்திரதாசன் எங்களுக்குத்தான் வேணும்.... ஏனென்றால் நாங்கள் தான் இளம் சமுதாயம்.... எங்களிட்டைத் தாங்கோ....

அதிகாரி: உங்களுக்கு எப்பிடி பிள்ளை வளர்க்கிறதெண்டே தெரியாது. அதோடை உங்களுக்கு அந்த உரிமையுமில்லை.... அப்பிடியே நில்லுங்கோ....

தருமு: நாங்கள் வன்முறைக்கு இறங்க முன்னர் எங்களுக்கு சுதந்திரதாசனைத் தந்தால் பிரச்சினையிருக்காது....

அதிகாரி: நீர் கனக்க கதைச்சீரெண்டால் என்ன நடக்கும் தெரியுமே....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமு: என்ன நடக்கும்.... நாங்கள் எல்லாத்துக்கும் தயார்....

அதிகாரி: பொத்தும் வாயை.... ஆரங்கை வந்து இந்த இரண்டு பேரையும் உள்ளுக்கை தூக்கிப் போடு....
(தருமுவையும் இராமுவையும் கைது செய்ய இருவர் வருகிறார்கள். அவர்கள் துப்பாக்கி ஏந்தியவர்கள் போல நிற்கவேண்டும். கைது செய்ய வந்தவர்களுக்கும் இராமு தர்மு ஆகியோருக்குமிடையே போராட்டம் நடக்கிறது. இதற்கு நாட்டுக்கூத்து மிதிகள் பயன்படுத்தப்படவேண்டும்.)

தருமுஇராமு: தக்கச்சோம்...... தத்தரிகிட

அதிகாரி: தத்தரிகிட...... தக்கச் சோம்

தருமுஇராமு: தக்கச் சோம் தத்தரிகிட
தக்கச்சோம்...... தத்தரிகிட
தக்கச்சோம்...... தத்தரிகிட

அதிகாரி / இருவர் : தத்தரிகிட...... தக்கச் சோம்
தத்தரிகிட...... தக்கச் சோம்
தத்தரிகிட...... தக்கச் சோம்

தருமு: தக்கச் சோம் தத்தரிகிட (இராமுவைப் பார்த்து)

இராமு : தக்கச்சோம்...... தத்தரிகிட
(தருமுவும் இராமுவும் தனித்தனியே போர் செய்வது போலவும் பின்னர் அவர்கள் பிரிவதுபோலவும் காட்டப்பட வேண்டும். தாளம் வேகமாக்கப்பட்டு இரு பிரிவினரும் களைத்துப்போய் இருக்க வேண்டும். தருமு துப்பாக்கியை நீட்டிய வண்ணமும் இராமு கைக்குண்டை வாயில் வைத்த வண்ணமும் இருக்கிறார்கள் அதிகாரியும் துப்பாக்கியை நீட்டிய வண்ணம் நிற்கிறார். எல்லோரும் பயத்துடன் பார்த்த வண்ணம் இருக்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளையர்: (பின்னணியில்) நிறுத்துங்கள்.... சண்டையை நிறுத்துங்கள். எப்ப நீங்கள் பிரச்சினைகளை தீர்த்து ஒற்றுமையாய் வந்து சுதந்திரதாசனைக் கேக்கிறியளோ அப்ப நான் சுதந்திரதாசனை உங்கடை கையிலை தருவன்....

தமிழரசி: (முன்னுக்கு கைகளை நீட்டிய வண்ணம் செல்ல பொன்னம்மா அதிகாரியைக் காட்டி பின்னுக்கு அழைத்து வருகிறாள்)

கந்தையா: (கைகளை நீட்டிய வண்ணம் செல்ல இராமு முன்னே பாய்ந்து மறித்து பின்னுக்கு அழைத்து வருகிறார்)

பொன்னம்மா: (முன்னே கைகளை நீட்டிய வண்ணம் செல்ல தருமு முன்னே பாய்ந்து மறிக்க பொன்னம்மா பயந்த வண்ணம் பின்னே வருகிறாள்.)

இராமு: (முன்னே செல்ல தருமு வந்து மறிக்கிறார்.)

தருமு இராமு: (இருவரும் முன்னே செல்ல அதிகாரி பாய்ந்து சென்று மறித்து பின்னுக்கு தள்ளிவிடுகிறார். பின்னர் தருமுவும் இராமுவும் தனித்தனியே வருகிறார்கள். அதிகாரி தடுத்து நிறுத்துகிறார்)

எல்லோரும்: (கைகளை நீட்டிய வண்ணம் செல்ல அதிகாரி முன்னே வந்து துப்பாக்கியைக் காட்டுவதுபோல் சைகை செய்து மறிக்கிறார். எல்லாரும் வரிசையில் வந்து நின்றதும் அதிகாரி மறுபக்கம் செல்கிறார்.)

தருமு: சுதந்திரதாசனை மீட்க யுத்தம் அவசியம்

கந்தையா: யுத்தம் அவசியமில்லை.

இராமு: வலது பாகத்தைப் பிரி

பொன்னம்மா: இல்லைப் பிரிக்க வேண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமு: யுத்தம் அவசியம்

கந்தையா: யுத்தம் வேண்டாம்

இராமு: போராளிகளைத் திரட்டு

பொன்னம்மா: யுத்தம் வேண்டாம்

தமிழரசி: சுந்திரதாசன் வேண்டும்

இராமு: சமாதானம் வேண்டும்

தருமு: மனித உரிமையை மீறாதே

இராமு: உங்களைப் போல் எங்களையும் வாழ விடு.

தமிழரசி: எங்களுக்கு சுதந்திரதாசன் வேண்டும்.
(பிள்ளைகள் இருவரும் இருந்த இடத்தை விட்டு எழும்பி)

இருவரும்: நிறுத்துங்கள்.... சண்டையை நிறுத்துங்கள்....





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண் பிள்ளை : சமாதானம் வேண்டும்....

பெண் பிள்ளை : சண்டை வேண்டாம்....

ஆண் பிள்ளை : எங்களை நிம்மதியாக வாழ விடுங்கள்....

பெண் பிள்ளை : எங்களைப் பிரிக்காதீர்கள்....

ஆண் பிள்ளை: நாம் எல்லோரும் ஓரினம்....

பெண் பிள்ளை : எம் மத்தியில் வேற்றுமைகள் வேண்டாம்....

ஆண் பிள்ளை: எல்லோரும் ஓரினம்....

பெண் பிள்ளை: ஒற்றுமை வேண்டும்....

ஆண் பிள்ளை: ஒற்றுமை வேண்டும்....

பெண் பிள்ளை: ஒற்றுமை வேண்டும்....

இருவரும்: அவரவர் உரிமைகள் காப்பாற்றப்பட வேண்டும்....

தமிழரசி: (அவர்களுடன் சேர்ந்து) ஒற்றுமை வேண்டும்....

மூவரும்: எங்களை உரிமையுடன் நிம்மதியாக வாழவிடுங்கள்....

பொன்னம்மா: வேற்றுமை வேண்டாம்....

நால்வரும் : ஒற்றுமை வேண்டும்.

(பிள்ளைகள் முன்னே சென்று கைகளை நீட்டிய வண்ணம் நிற்கின்றனர்)

கந்தையா: ஒற்றுமை வேண்டும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(எல்லோரும் கைகளை நீட்டிய வண்ணம் பிள்ளைகளுடன் சேருகிறார்கள். ஆனால் தருமுவும் இராமுவும் தனித்தனியே பிரிந்து இராமு துப்பாக்கியை அதிகாரியின் பக்கம் நீட்டியபடியும் தருமு கைகளை கட்டியவண்ணம் தலை குனிந்து அதிகாரியுடன் சேர்ந்து நிற்பது போலவும் நிற்கவேண்டும்)



பாடல்:

விண்ணில் மனிதன் பறக்கின்றான்
விந்தை பலவும் புரிகின்றான்
பறக்கத் தெரிந்த மனிதனுக்கு
இறப்பைத் தடுக்க முடியவில்லை (விண்ணில்)

செய்மதி விதம் விதம் செய்துள்ளான்
தன்மதி இழந்து தவிக்கின்றான்
உயிரை அணுவினால் அழிக்கின்றான்
உயிரூட்ட முடியாமல் நிற்கின்றான் (விண்ணில்)

விஞ்ஞானம் வளருது மேற்கினிலே
அஞ்ஞானம் போவது அழிவினிலே
அமைதிக்குத் தூது விடுவோமா
ஆண்டவன் பாதம் பணிவோமே (விண்ணில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பாடல் முடிவில் அதிகாரி உட்பட அனைவரும் கைகளை நீட்டிய வண்ணம் நிற்கிறார்கள். வெள்ளைப் புறாவுடனும் சுதந்திர தாசனுடனும் தூரத்தில் வெள்ளையர் ஒருவர் நிற்க வேண்டும் .... சற்று நேரத்தின் பின் நடிகர்கள் வணக்கம் கூற ஒளி மங்கி காட்சி முடிவடைகிறது)

(திரை மூடப்படுகிறது)

❑❑❑

# "அகதிமுக(ா)ம்"

## இலங்கைத் தமிழ் நாடக மன்றம்/கொழும்பு அரச தமிழ் நாடக விழாவில் இறுதிப் போட்டிக்காக மேடையேற்றியது.

அரங்கு : மருதானை எல்பின்ஸ்டன் மண்டபம்
காலம் : 15.09.1998

பங்குபற்றியோர்.

| | | |
|---|---|---|
| கந்தையா | : | ஆர். யோகராஜன் |
| பொன்னம்மா | : | ஏ.எம்.சி. ஜெயஜோதி |
| அதிகாரி | : | ஏ.ஆர். வாமலோசனன் |
| தமிழரசி | : | சுதர்சினி சிவரதன் |
| தருமு | : | வை. கௌரிசங்கர் |
| இராமு | : | எம். ரவீந்திரன் |
| மேலதிகாரி | : | பெல்ப்ஸ் ஜெகநாதன் |
| முகாம் ஊழியர் | : | சுஜேன் செல்லத்துரை |
| முகாம் ஊழியர் | : | மயில்வாகனம் சர்வானந்தா |
| ராஜன் | : | ஏ.ஆர்.மயூரன் |
| பெண் குழந்தை | : | கீர்த்திகா ரஞ்சன் |

ஒப்பனை : வை. கௌரிசங்கர்

கதை வசனம், காட்சியமைப்பு, தயாரிப்பு, நெறியாள்கை
அருணா செல்லத்துரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதி முக(ா)ம் பற்றிய பிற்குறிப்பு:

இலங்கைத் தமிழ் நாடக மன்றத்தின் சார்பில் அகதி முக(ா)ம் நாடகம் 1998ம் ஆண்டு நடைபெற்ற அரச தமிழ் நாடக விழாவின் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டு மேடையேற்றப்பட்டது.

அகதிமுக(ா)ம் நாடகத்திற்கு எதுவித பரிசும் வழங்கப்படவில்லை. இறுதிப் போட்டியில் பங்குபற்றியமைக்காக சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

பரிசு கிடைக்காத நாடகமான "அகதி முக(ா)ம் நாடகத்தில் நடித்த கலைஞர்களை கௌரவிக்கும் பொருட்டு கலைஞர் கௌரவிப்பு விழா ஒன்றை இலங்கைத் தமிழ் நாடகமன்றம் நடத்தியது. விழாவில் கலைஞர்களுக்கு விருதுகளும், புரவலர் ஹாசிம் உமர் அவர்களினால் பணப் பரிசுகளும் வழங்கப்பட்டன. இலங்கை நாடக வரலாற்றில் போட்டி ஒன்றில் பங்குபற்றி பரிசு கிடைக்காத நாடகமொன்றில் நடித்த கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டமை இதுவே முதல் தடவையாகும்.

கலைஞர் கௌரவிப்பிற்காக அனுப்பப்பட்ட அழைப்பிதழும் இங்கு சேர்க்கப்பட்டுள்ளது.

## கலைஞர் கௌரவிப்பு

அரச தமிழ் நாடக விழாவில் நடுவர்களால் நிராகரிக்கப்பட்டு விருதுகள் வழங்கத் தகுதியற்றதாக்கப்பட்ட இலங்கைத் தமிழ் நாடக மன்றத்தின் அருணா செல்லத்துரையின் "அகதி முக(ா)ம்கள்" நாடகத்தில் நடித்த கலைஞர்கள் கௌரவிக்கப்படவிருக்கிறார்கள்.

| | | |
|---|---|---|
| இடம் | :- | கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி |
| காலம் | :- | 18.10.1998 ஞாயிற்றுக்கிழமை |
| நேரம் | :- | பிற்பகல் நான்கு மணி |
| தலைமை | :- | திரு. மயில்வாகனம் சர்வானந்தா (மன்றத் தலைவர்) |

கருத்துரைகள்:

திரு.வி.என்.மதியழகன், பணிப்பாளர் தமிழ்ச் சேவை
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
திரு.எஸ்.வன்னியகுலம், பணிப்பாளர், தமிழ்ச் சேவை
இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்
திரு. எஸ். எழில்வேந்தன், பணிப்பாளர் எம்.ரி.வி. (தமிழ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதியுரை:
திரு.வீ.ஏ.திருஞானசுந்தரம்
(தலைவர், தமிழ் நாடகக் குழு)

நிகழ்ச்சித் தொகுப்பு:
திரு. இளையதம்பி தயானந்தா

கலைஞர் கௌரவிப்பு

அரச தமிழ் நாடக விழாவில் எத்துறையிலும் விருதுகள் பெறுவதற்குத் தகுதியற்றதென நடுவர்களால் தீர்ப்பு வழங்கப்பட்ட நாடகம் அகதிமுக(ா)ம்கள். இந்த நாடகத்தில் நடித்த அனைத்துக் கலைஞர்களும் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படுவார்கள்.

"அகதிமுக(ா)ம்கள்" நாடகம் பற்றி ரசிகர்களின் கணிப்புகள்

- நாடகத்தின் கரு மிகவும் நல்லது – திருமதி மக்கீன்

- உங்களுடைய நாடகத்தில் ஒரு மெசேஜ் இருந்தது – திரு. ராஜ சிறீகாந்தன்

- நாடகம் முடிந்து வீட்டுக்குப் போய் நித்திரை செய்த பின், திடீரென விழித்து இந்த நாடகத்தைப் பற்றி யோசித்தேன் – திரு.மகேந்திரன்

- அகதி முக(ா)ம்கள் என்றொரு நாடகம் மேடையேற்றப்பட்டது. அந்த நாடகத்தின் ஆரம்பத்தில் போடப்பட்ட விமானங்களின் ஒலியும், வேட்டுச் சத்தங்களும் எனக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தையே நினைவூட்டியது. நாடகக் கள உணர்வை ஏற்படுத்தவில்லை. மனிதர்களின் ஓலங்களையும் போட்டிருந்தால் அதன் தாக்கம் கூடுதலாக இருந்திருக்கும் – பேராசிரியர் சிவத்தம்பி கொழும்பு பல்கலைக்கழகத்தில் டிப்ளோமா பயிலும் மாணவர்களுக்கு விரிவுரையாற்றிய போது..............

- விமானங்களின் ஒலியும் வேட்டுச் சத்தங்களும் என் அடிவயிற்றைக் கலக்கி அந்தக் களத்திற்கு என்னைக் கொண்டுபோய்விட்டது.–ரசிகர் அருணகிரிராஜா

- எப்ப தம்பி நாங்கள் ஒண்டாய் நிண்டு ஒண்டைக் கேட்டனாங்கள். இது எமக்கு மிகவும் பொருத்தமான வசனம் – மல்லிகை ஜீவா

- தம்பி இப்பிடி நாடகம் தயாரித்தால் உங்கடை உத்தியோகத்திற்கு பிரச்சினையில்லையோ. – ஒரு அபிமானி மேடையின் பின்னால் தனியாக......:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ உங்களுக்கு நிறைய கட்டுப்பாடுகள் இருந்திருக்கும். அதனால் நாடகத்தில் உயிர் இல்லாமல் போய்விட்டது. இதுதான் கலைஞர்களுக்குச் சுதந்திரம் அவசியம். நானும் சிவத்தம்பி சேரும் இதைப்பற்றி பேசினனாங்கள்.
நடுவராக அல்ல, நண்பராக நாடக விற்பன்னர்– க. சிதம்பரநாதன்– பரிசளிப்பு தினத்தன்று காலையில் இந்துக்கல்லூரி முன்னால்

☞ அண்ணை சகல சுதந்திரங்களும் இருக்கும் அமெரிக்க நாட்டில் வாழ்வதாக நினைத்துக் கொண்டு நாடகம் போடுகிறீர்கள் போலிருக்கு..............
நாடக அபிமானி ஒருவர் மேடையின் பின்னால் தனியாக.

☞ அருணா அண்ணை முன்கூட்டியே என்ரை வாழ்த்துக்கள் – ....கலைச்செல்வன்

☞ அண்ணை உங்கடை நாடகத்திற்கு என்ன நடந்தது. – நடிகர் மோகன்குமார்

☞ அண்ணை உள்ளுக்கை என்னவோ நடந்து போச்சுது போல – பத்திரிகையின் படப்பிடிப்பாளர் ஒருவர்......

☞ நடந்து முடிந்த போட்டியில் சிறந்த இசை, சிறந்த நாடகம், சிறந்த பிரதி, சிறந்த நெறியாள்கை போன்ற விருதுகள் வழங்கப்படவில்லை. சுமார் 50,000/= ரூபா இலங்கைக் கலைக் கழகத்திற்கு லாபம், இதனால் தமிழ்மேடை நாடகம் வளர்ந்துவிட்டதா?

நாமும் நமக்கோர் நலியாப் பண்புடையோம் – வித்துவ நக்கீரர்கள்

நாமும் நமக்கோர் நலியாக் கலையுடையோம் – அருணா செல்லத்துரை

☞ தங்கள் வருகை எமது நோக்கத்தை நிறைவேற்றத் தரும் ஊக்கமாகும்.

நன்றி

இலங்கைத் தமிழ் நாடகமன்றத்தினர்.

## நாடக விழாத் தேர்வு - நடுவர் அறிக்கை

நாடகம் என்பது அடிப்படையில், செய்து காட்டும் ஒரு கலை என்பதையும், அச் செய்து காட்டல் நடிப்பு காண்பிய உதவி ஆகியவற்றினாற் சில படிமங்களைத் தோற்றுவிப்பதின் மூலம் ஆற்றப்படுகின்றதென்பதையும், இந்த ஆற்றுகைக்கு நடிப்பு முதலாம் வளங்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்த வேண்டுமென்பதையும், ஆதார எடுகோள்களாகக் கொண்டு எமது பணியை மேற் கொள்கின்றோம்.

**நாடகம் என்பது சமூகப் பிரக்ஞைக்கான ஒரு கலை வடிவம் என்பதில் எமக்கு ஆழமான நம்பிக்கையுண்டு.** நாடக விழாவை ஒழுங்கு செய்த கலைக்கழகத்தையும், இந்து கலாச்சார திணைக்களத்தையும் பாராட்டுகின்றோம். இவ் விழாவிற் கலந்து கொண்ட நாடக மன்றங்களையும் கலைஞர்களையும் வாழ்த்துகின்றோம்.

**நாம் எடுக்கும் எந்த முடிவும் சமகாலத் தமிழ் நாடகத்தின் ஒட்டு மொத்தமான தரத்துக்கும் செழுமைக்கும் உதவுவதாக இருத்தல் வேண்டும் என்று கருதுகிறோம்.** நாம் எடுக்கும் இந்த முடிவு மூவரினாலும் ஏகமனதாக எடுக்கப்படுவதாகும்.
(பரிசுபெற்றோர் விபரம்)

சிறந்த இசையமைப்புக்கான பரிசில் வழங்கப்படவில்லை.

**நடுவர்களின் கணிப்பில் எந்த ஒரு நாடகமும் தனிச் சிறப்புடைய, சுய ஆக்கம் எனக் கருதப்பட முடியாதுள்ளது. இதனால், சிறந்த நாடகத்திற்கும், சிறந்த பிரதி (எழுத்துரு)க்கும், நெறியாளருக்குமான விருதுகளுக்கு எந்த ஒரு நாடகத்தையும் சிபார்சு செய்யமுடியாதுள்ளது.**

**சிறந்த நாடகம், பிரதி, நெறியாள்கை என்பன முன்னுதாரணங்களாக அமைய வேண்டியவை.**

**அத்தகைய ஒரு நிலையில் எந்த ஒரு நாடகத்திற்கும் சிறந்த நாடகம், பிரதி, நெறியாள்கை எனும் விருதுகளை வழங்க முடியாதுள்ளமைக்கு வருந்துகிறோம். ..................**

கா.சிவத்தம்பி
18.09.98 க.சிதம்பரநாதன்
கே. சிவபாலன்

இந்த அழைப்பிதழை ஏற்று ஏராளமான ரசிகர்களும் பார்வையாளர்களும் கலைஞர்களைக் கௌரவிக்க வருகை தந்திருந்தனர். பலரும் தமது கருத்துக்களை தெரிவித்ததோடு கலைஞர் கௌரவிப்பு விழா சிறப்புற நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகம் சமகாலப் பிரச்சனைகளை மையமாகக் கொண்டு எழுதப்பட்டதால் நாடகத்திற்காக பெறப்பட்ட தணிக்கை சபை அனுமதியின் பிரதியும் இணைக்கப்பட்டுள்ளது.

ප්‍රසිද්ධ රැඟුම් පාලක මණ්ඩලය

සහතික පත්‍ර අංකය: ඕ සී. № 16847

(ආකෘති පත්‍ර අංක : 3. කොළඹ ප්‍රදේශයේ චිත්‍රපට ප්‍රදර්ශන නොවන රඟ දැක්වීම් සඳහාය)

## ප්‍රසිද්ධ රැඟුම් දැක්වීම් ආඥාපනත

ප්‍රසිද්ධ රැඟුම් දැක්වීම් ආඥාපනතේ (176 වැනි පරිච්ඡේදය) 6 වැනි වගන්තිය යටතේ පනවා ඇති 1952 ප්‍රසිද්ධ රඟ දැක්වීම් නියෝග මාලාවේ 10 වන නියෝගය පරිදි [illegible] නමැති [illegible] රඟ දැක්වීම හා [illegible] හිදී මහජන ප්‍රදර්ශනය සඳහාත් සුදුසු යැයි ප්‍රසිද්ධ රඟ දැක්වීම් පාලක මණ්ඩලය විසින් සහතික කර ඇත.

[illegible]

ප්‍රසිද්ධ රඟ දැක්වීම් පාලක මණ්ඩලය වෙනුවෙන්,

සභාපති.

සෝමරත්න බාලසූරිය
සභාපති
ප්‍රසිද්ධ රැඟුම් පාලක මණ්ඩලය

19 [illegible] දින,
කොළඹ

සැළකිය යුතුයි- ප්‍රසිද්ධ රඟදැක්වීම් නියෝග මාලාවේ පහත දැක්වෙන ඡේදය අවශ්‍ය වුවහොත් බලාගැනීම සඳහාය.
"(15) කොළඹ ප්‍රදේශය පිළිබඳ කාර්ය කරන අධිකාරී මණ්ඩලයෙන් නිසියම් ප්‍රසිද්ධ රඟදැක්වීමක් සඳහා නිකුත් කරන ලද සහතිකයක්, එම රඟ දැක්වීම අන් කිසි ස්ථානයක පෙන්වීමට ඒ ස්ථානය පිළිබඳ සහතික කරන අධිකාරීන්ගේ සහතිකයක් නොමැතිව, ප්‍රමාණවත් වේ."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரை தட்டிய மீன்கள்

*மேடை / வானொலி நாடகம்*

**(திரை மூடப்பட்டுள்ளது)**

ஒலி: விமானங்கள் பறக்கும் ஒலி, குண்டுகள் பொழியப்படும் ஒலி, மக்கள் ஆரவாரம். அழுகை ஒலி, சைரன் அடிக்கும் ஒலி, இந்த ஒலிகள் குறைந்து கொண்டு செல்ல புல்லாங்குழலில் சோக இசை கலக்க வேண்டும். சிறிது நேரம் சென்ற பின், கலியாணத்திற்கான தவில் நாதஸ்வர இசையைக் கலந்து பின்னர் கலியாண இசை தனியாக ஒலிக்க வேண்டும்.

பாத்திரங்கள்: சிதம்பரம், பார்வதி, மகன் ராஜன், சின்னப்பிள்ளைகள் இருவர்.

**(திரை விலகுகிறது)**

மேடையில்: (கலியாணத்திற்கான சோடிக் கதிரை போடப்பட்டுள்ளது. அந்தக் கதிரையிலே சேலை விரிக்கப்பட்டுள்ளது. நிறைகுடம் வைக்கப்பட்டுள்ளது.)

சிறுவர்கள் : (அடிக்கடி மேடைக்குள் வந்து அலங்காரங்களைக் கவனித்த வண்ணம் இருக்கிறார்கள். மேடையில் கன்னிக்கால் கொண்டு வந்து வைக்கப்படுகிறது.)

சிதம்பரம்: அங்கை என்னப்பா செய்து கொண்டிருக்கிறியள். மாப்பிள்ளை பகுதி வரப்போகுது. அங்கை அந்த நிறைகுடத்திலை பூ வைக்கேல்லை... ராஜன் இரண்டு பூ பிடுங்கிக் கொண்டு வா....

பார்வதி: (சற்று சோகத்துடன் மேடைக்கு வந்து) இஞ்சருங்கோ அப்பா, பிள்ளையார் பிடிச்சு வைச்சிருக்கிறன். அறுகம் புல்லும் மூண்டு பிடுங்கிக் கொண்டு வரச் சொல்லுங்கோ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதம்பரம்: ராஜன் மூண்டு அறுகம்புல்லும் பிடுங்கிக் கொண்டு வா.....

பார்வதி: (புறுபுறுக்கிறாள்) எங்கடை பரம்பரையிலை, எங்கடை வம்சத்திலை நடக்காத விசயம். இந்த மனிசன் என்னெண்டால் கெடுகிறன் பிடி எண்டு நிக்கிது.... கடவுளே.

சிதம்பரம்: உங்கை என்னப்பா புறுபுறுத்துக் கொண்டு நிக்கிறாய்.... மாப்பிள்ளை பகுதி எல்லை வரப்போகினம்... போய் ஆக வேண்டியதைப் பாரன்.....

பார்வதி: இல்லையப்பா... ஊர்ச்சனமெல்லே சிரிக்கப் போகுதுகள்.....

சிதம்பரம்: இப்ப எத்தினை தரம் சொல்லிப் போட்டன்... புரோக்கர் சொன்னவர் கலியாணம் முடிஞ்சு ஆறு மாதத்துக்குள்ளை பிள்ளையை பெடியன் கூப்பிட்டுப் போடுவானாம். அவன் பச்சைப் புத்தகக்காரனாம்.

பார்வதி: இல்லையப்பா... ஒரு காலமும் இப்பிடி நடக்கேல்லை....

சிதம்பரம்: அங்கை ராஜன் புல்லும், பூவும் கொண்டு வாறான். நான் பிள்ளையாருக்கு வைக்கிறன்.... நீ உள்ளை போய் பலகாரத் தட்டுக்களை அடுக்குப் பண்ணு... போ... போ....

பார்வதி: (சோகமாகப் பார்த்து விட்டு உள்ளே போகிறாள்)

ராஜன்: அப்பா... நாதஸ்வரத்தை நிப்பாட்டிப் போட்டு சினிமாப் பாட்டு போடச் சொல்லட்டே.....

சிதம்பரம்: இஞ்சை சினிமாப் பாட்டு வேண்டாம். அக்கம் பக்கத்திலை சனம் கேட்டுது எண்டால் அது வேற பிரச்சினை. (மேடையின் மறுபக்கம் திரும்பி) தம்பி தாலி கட்டிறநேரம் போடுறதுக்கு ஏற்றமாதிரி கெட்டி மேளம் வைச்சிருக்கிறியோ... அப்ப நான் சொல்லுவன் அதை அடுக்காய் வைச்சுக்கொள்ள வேணும் சரியோ.... ராஜி ஓடிப்போய் வெளியிலை பார் கார் வருகிதோ எண்டு.

ராஜி: நான் போய்ப் பாக்கிறன்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜன்: நானும் வாறன்....

ராஜி: வரவேண்டாம்.... நீ இஞ்சையே நில்லு.....

ராஜன்: அக்கா எனக்கும் காரைப் பார்க்க ஆசை நானும் வாறன்....

சிதம்பரம்: ராஜி அவனையும் கூட்டிக் கொண்டுபோ...

ராஜன்: நீ... ஒரு நாளும் கார் பார்க்கயில்லையே.....

ராஜி: எங்கை பார்த்தனான். அண்டைக்கு ரவுணுக்குப் போகேக்கை பார்த்தனான். அது நல்லாய் புகையடிச்சுக் கொண்டு போய்ச்சுது. அதாலை காரை வடிவாய் பார்க்கேல்லை...

சிதம்பரம்: அது தங்கச்சி மண்ணெண்ணையிலை ஓயிலைக் கலந்து ஓடினால் புகைக்காமல் என்ன செய்யும். சரி அவனும் ஆசைப்படுறான் கூட்டிக் கொண்டு போவன்....

ராஜி: சரி வா... அங்கையிங்கை ஓடக்கூடாது சரியோ...
(இருவரும் போகிறார்கள்)

சிதம்பரம்: இஞ்சருமப்பா... இந்தக் குத்து விளக்கைப் பத்தவைக்க நெருப்புப் பெட்டியைக் கொண்டு வாரும்..

பார்வதி: (மேடைக்கு வந்து) இந்தாள் ஒரு வேலை செய்ய விடாது... இந்தாருங்கோ.
(சிதம்பரம் குத்துவிளக்கைப் பத்த வைக்கிறார். கார் வரும் ஒலி. கார் வந்து நிக்க பிள்ளைகள் இருவரும் உள்ளே ஓடிவந்து)

ராஜன்: அப்பா கார் வந்திட்டுது.....

சிதம்பரம்: தம்பி நீ ஏன்ரா வந்தனி.... நீயும் போய் மாப்பிள்ளையோடை வாவன்...

ராஜன்: அவை மாப்பிளையோடை வரேல்லை... ஒரு படத்தோடையெல்லோ வருகினம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதம்பரம்: அதெல்லாம் பெரியாக்களுக்குத் தெரியும்... நீ போய் அவையளோடை வா....

ராஜன்: சரியப்பா... நான் போய் அவையளோடை வாறன்...

சிதம்பரம்: உங்கையென்ன செய்யுறாய்... கெதியாய் வெளியிலை வந்து அவையளுக்கு சந்தணம் குங்குமம் குடு... முதல்லை பன்னீர் தெளிச்சப் போட்டுத்தான் சந்தணம் குடுக்க வேணும். ஆ... நான் பன்னீர் தெளிக்கிறன். நீ சந்தணம் குங்குமம் குடு... இல்லைக் குடுக்காதை நீ மாப்பிள்ளையின்ரை தாய்க்கு குங்குமத்தை வைச்சு விடு... நான் மாப்பிளையின்ரை தகப்பனுக்கு சந்தணம் வைச்சு விடுறன்... றெடியாய் நில்லு...
(மாப்பிள்ளை பகுதியினர் வருகிறார்கள். முதலில் புரோக்கர் மேடைக்கு வந்து....)

புரோக்கர்: முதல்லை வாற ஆள் வலது காலை எடுத்து வைச்சு உள்ளை வாருங்கோ... தம்பி நீதானை மாப்பிளைத் தோழன்... முதல்லை வாற ஆளின்ரை பக்கத்திலையே வா....
(ஒரு பெண் மாப்பிளையின் படத்துடன் உள்ளே வருகிறார். அவரோடு ராஜன் சேர்ந்து வருகிறான். அவரின் பின்னால் மாப்பிளையின் தகப்பன் வருகிறார். பின்னால் மற்றவர்கள் வருகிறார்கள்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதம்பரம்: வாங்கோ... வலதுகாலை வைச்சு வாங்கோ... (படத்துடன் நிற்கும் தாய்க்கு பார்வதி பன்னீரைத் தெளிக்கிறாள் குங்குமம் வைக்கிறாள். சிதம்பரப்பிள்ளையர் மாப்பிளையின் தகப்பனுக்கு சந்தணம் வைத்து வரவேற்கிறார்.)

புரோக்கர்: இனியென்ன படத்தை அந்தச் செற்றியிலை வலது பக்கத்திலை வையுங்கோ... நல்லாய் நிமித்தி வை பிள்ளை அப்பத்தான் எல்லாருக்கும் மாப்பிளையைத் தெரியும்....

சிதம்பரம்: என்ன சம்பந்தி சுப நேரத்துக்கு இன்னும் நேரம் இருக்கோ... அல்லது பலகாரத்தையெல்லாம் சாப்பிட்டிட்டு தாலியைக் கட்டுவமோ....

சம்பந்தி: அதெங்கை வெளிக்கிடக்கையே நேரம் போச்சு.... அதுக்குப் பிறகு இரண்டு செக் பொயின்ரிலையும் எல்லாரும் இறங்கி ஏறி வர நேரம் போனதே தெரியேல்லை.... இப்ப பொம்பிளையைக் கூப்பிடுங்கோ... தாலியைக் கட்டினப் பிறகு பலகாரத்தைச் சாப்பிடுவம்.

சிதம்பரம்: அப்ப கொண்டு வந்த தாலியை கும்பத்திலை எடுத்து வையுங்கோ... (பார்வதி உள்ளே போகிறார்.)

புரோக்கர்: ஐயரைக் கூப்பிடுவம் எண்டுதான் பார்த்தனாங்கள்.... ஆனால் அகதியாய் போன ஐயர் இன்னும் திரும்பி வர இல்லை... ஐயர் வரும் வரைக்கும் கலியாணத்தை ஒத்திப் போடலாமே...... அதுதான் இப்பிடி

சம்பந்தி: பெடியனுக்கும் வயது போய்க் கொண்டிருக்கு... நாங்கள் இப்படியே பாத்துக் கொண்டிருந்தால் ஒண்டும் நடக்காது.

சிதம்பரம்: எப்பிடியாவது இதுகளுக்கு ஒரு வாழ்க்கையைத் தேடிக் கொடுக்க வேண்டியது எங்கடை கடமை.

சம்பந்தி: சரி.... சரி.... நேரமாகுதெல்லே... பொம்பிளையைக் கூட்டிக் கொண்டு வாங்கோ.....

சிதம்பரம்: பார்வதி உங்கை என்ன செய்யுறியள் பிள்ளையைக் கூட்டிக் கொண்டு வாங்கோ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதுவரையும் செற்றியில் இருந்து ராஜன் எழும்பி)

ராஜன்: அப்பா நான் போய் அக்காவைக் கூட்டிக் கொண்டு வரட்டே....

சிதம்பரம்: நீ பேசாமல் உதிலையே இரு.... அக்கா போகட்டும்.
(ராஜி எழும்பி உள்ளே ஒடுகிறாள்.)

புரோக்கர்: அந்தா பிள்ளை வரப்போகுது

சம்பந்தி: இஞ்சரும் நாகம்மா.. தம்பியின்ரை படத்தை நல்லாய் நிமித்தி வையும்...

நாகம்மா: சரியப்பா... நீங்கள் செய்யுற வேலையைப் பார்க்க எனக்கு விசர் வரும் போலை கிடக்கு...

சம்பந்தி: உனக்கு எத்தினைதரம் சொல்லிப்போட்டன். நாங்களும் நாட்டு நிலைமைக்கு ஏற்றபடி விசயங்களைச் செய்ய வேணும் நாகம்மா நீ பேசாமல் இரு.....

நாகம்மா: பேசாமல் இருக்கச் சொல்லியே எல்லா விசயத்தையும் செய்து முடிச்சுப் போட்டியள்.

சம்பந்தி: அந்தா பொம்பிளை வருகுது... இனி புறு புறுக்காமல் இரு...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பார்வதியும், ராஜியும் மணப் பெண்ணைக் கூட்டிக் கொண்டு வருகிறார்கள்)

புரோக்கர்: தங்கச்சி படத்துக்கு வலப் பக்கத்திலை இரு பிள்ளை. என்ன யோசிச்சு கொண்டு நிக்கிறாய்.... இரு பிள்ளை.
(தயங்கியபடி படத்திற்கு அருகில் இருக்கிறாள் ராஜன் எழும்பி நிற்கிறான்.)

சம்பந்தி: பிள்ளை இனி நாங்கள் எல்லாத்துக்கும் இருக்கிறம்... நீ ஒண்டுக்கும் யோசியாதை.....

புரோக்கர்: சரி... சரி.. அந்த தாலியை எடுத்துக் குடுங்கோ... பிள்ளை கட்டட்டும்...

சிதம்பரம்: அது தாலியை ஒருத்தரும் எடுத்துக் கொடுக்கத் தேவையில்லை... அது பிள்ளையே எடுத்துக் கட்டட்டும். சரி பிள்ளை எடுத்துக் கட்டு...

பார்வதி: பிள்ளை நல்லாய் கடவுளைக் கும்பிட்டிட்டு தாலியை எடுத்துக் கட்டு...
(மணப்பெண் எழும்பி கும்பத்திலிருந்த தாலியை எடுத்தல்)

சிதம்பரம்: தம்பி உந்தக் கசெற்றிலை இருக்கிற கெட்டி மேளத்தை நல்ல சத்தமாய்ப் போடு....

சம்பந்தி: பிள்ளை வடிவாய் படத்தைப் பார்த்துக் கொண்டு தாலியை கட்டு.... என்ன நாகம்மா பார்த்துக் கொண்டிருக்கிறாய். பிள்ளையின்ரை தலைமயிரை ஒதுக்கி விடு... அப்பத்தான் தாலியைக் கட்டலாம்.....
(கெட்டிமேளனம் கூடுதலாய் ஒலிக்கிறது. மணப் பெண் தாலியைக் கட்டுகிறாள். அந்த வேளையில் சம்பந்தியும் புரோக்கரும் ஒரு பக்கமாக ஒதுங்கி வருகிறார்கள்)

சிதம்பரம்: பிள்ளை படத்தை எடுத்துக் கொண்டு கன்னிக்காலை சுத்தி வா... தம்பி ராஜன் நீ என்ன பார்த்துக் கொண்டிருக்கிறாய்... அக்காவுக்கு முன்னாலை போ... ராஜி நீ அக்காவுக்கு பின்னாலை போ...
(கன்னிக்காலைச் சுற்றிவருகின்றனர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வதி: உதெல்லாம் ஏனப்பா....

சிதம்பரம்: இஞ்சருமப்பா... பிறகு உந்தக் காட்சி எல்லாத்தையும் எங்களுக்குப் பார்க்க குடுத்து வைக்காது... அதாலை இப்பவே எல்லாத்தையும் செய்து பார்த்துப் போடுவம்.

பார்வதி: நான் உதெல்லாத்தையும் முறைப்படி செய்து காட்டுங்கோ எண்டு சொல்ல நீங்கள் எனக்குப் படம் காட்டுறியள்....

சிதம்பரம்: அதுக்கென்னப்பா செய்யிறது.. பெடியனுக்கு எல்லா நாட்டுக்கும் போகலாமாம்.. ஆனால் தான் பிறந்த இந்த நாட்டுக்கு மட்டும் வர ஏலாதாம்... சரி... சரி... உதென்ன புரோக்கரும் சம்பந்தியும் ஏதோ மூலைக்குள்ளை குசுகுசுக்கினம்... நீங்கள் பிள்ளையைக் கூட்டிக் கொண்டு உள்ளுக்கை போங்கோ.....
(மணப் பெண்ணும் மற்றவர்களும் உள்ளே போகிறார்கள். சிதம்பரம் புரோக்கரைப் பார்க்கிறார்)

புரோக்கர்: சிதம்பரப்பிள்ளையண்ணை இஞ்சை ஒருக்கா வாருங்கோ....

சிதம்பரம்: புரோக்கர் ஒரு நிமிசம் பொறுங்கோ.. இஞ்சேர் பார்வதி இஞ்சை நாகம்மா வெளியிலை நிக்கிறா... அவவையும் கூப்பிட்டு தேத்தண்ணி பலகாரம் எல்லாம் குடுங்கோ...(பார்வதியைப் பார்த்து) நீங்கள் என்ன புறத்தியே ... உள்ளுக்கை போங்கோ... இனி என்ன நாங்கள் புறத்தியே... போங்கோ உள்ளுக்கை....

புரோக்கர்: நீங்கள் போங்கோ நாகம்மா அவர் வருவார்... வாறதுக்கிடையிலை கதைச்சதுகளை கொஞ்சம் நேர் சீராக்கிப்போட்டு வாறம்.

சம்பந்தி: நீ உள்ளை போ நாகம்மா... நான் வாறன்... கையை மட்டும் கழுவிப்போடாதை.. நான் பேசி முடிச்சுப் போட்டு வாறன்... சரியே....

சிதம்பரம்: இனியென்ன புறத்தியே எல்லாம் ஒண்டுக்குள்ளை ஒண்டாகிட்டம்... யோசிச்சுக் கொண்டிருக்கிறியள்... என்ன சம்பந்தி.. என்ன யோசினை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தி: சிதம்பரப்பிள்ளையர் இனி எங்களுக்குள்ளை ஒண்டும் ஒழிவு மறைவு இருக்கக் கூடாது... எல்லாத்தையும் பேசினபடி செய்து முடிச்சிட்டால் பிறகு பிரச்சினைகள் ஒண்டும் வராது.. என்ன புரோக்கர் நீங்கள் சொல்லுறியள்.

புரோக்கர்: உண்மையாய் எல்லாம் தாலி கட்டி முடிக்கிறதுக்குள்ள செய்து முடிச்சிருக்க வேணும்... ஆனால் சுபநேரம் பிந்தப் போகுதெண்டு அதை முடிச்சிட்டம்... முதலிலை... சரி இனி அப்ப காசு விசயத்தைப் பார்ப்பமே...

சிதம்பரம்: புரோக்கர் நான் பேசின மாதிரி இரண்டு இலட்சம் ரூபா றெடியாய் வைச்சிருக்கிறன். மற்றதென்ன அந்தப் பிலாவடிக்காணியை... பெடியன்ரை பேரிலை எழுதவேணும்... வேறையென்ன

சம்பந்தி: அந்தக் காணியின்ரை பவர் ஒப் அற்றோணியை என்ரை பெயரிலை எழுத வேணும். நீங்கள் அதைச் சொல்லேல்லையோ புரோக்கர்.

புரோக்கர்: அது பெடியன்ரை பெயரிலை எழுதினப் பிறகு பவர் ஒவ் அற்றோணி உங்கடை பெயரிலை எழுதிறது பெரிய பிரச்சினையே... அதெல்லாம் பெரிய பிரச்சினையில்லை....

சிதம்பரம்: இனி நாங்கள் எங்கடை பிள்ளையை அவையை நம்பி ஒப்படைச்சுப் போட்டம். பிறகு இதுக்கெல்லாம் பின்னுக்கு நிக்க முடியுமே... இஞ்சேர் பார்வதி அந்த அறை அலுமாரிக்குள்ளை வைச்ச அந்தக் காசை எடுத்து தட்டிலை வைச்சுக் கொண்டு வாரும்...

சம்பந்தி: இஞ்சேர் நாகம்மா... நீரும் வெளியிலை வாரும்.... இரண்டு பேரும் ஒண்டாய் நிண்டு வாங்கினால்தான் பெடியனுக்கு கடிதம் எழுதிப் போடலாம். வாரும்....

(நாகம்மா... வெளியே வந்து சம்பந்தியுடன் நிற்க, பார்வதி தட்டில் காசை வைத்த வண்ணம் வெளியே வருகிறாள். காசைக் கொண்டு வந்து சிதம்பரப்பிள்ளையிடம் கொடுக்கிறாள். சிதம்பரப்பிள்ளையர் காசை வாங்கி சம்பந்தியிடம் கொடுக்க அவர்கள் இருவரும் வாங்கிக் கொள்கிறார்கள்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தி: இஞ்சேர் நாகம்மா காசு சரியாய் இருக்கோ எண்டு எண்ணிப்பார்... (நாகம்மா திரும்பி நின்று எண்ணுகிறாள்)

புரோக்கர்: அது சரியாய்த்தான் இருக்கும்.... எதுக்கும் ஒருக்கா எண்ணிப் பாத்தால் நல்லது. பிறகு ஒரு பிரச்சினையும் வரக்கூடாது பாருங்கோ... சரி நீங்கள் எண்ணிப் பாருங்கோ....

சம்பந்தி: அது நாகம்மா எண்ணுவாள்.. நாங்கள் அப்ப அந்தக் காணிப் பிரச்சினையைப் பற்றியும், பிள்ளை எப்பிடி வெளிநாடு போறது எண்டதைப்பற்றியும் கதைப்பமே....

புரோக்கர்: அதுதான் அப்பவே சொல்லிப் போட்டேனே.. பிள்ளையின்ரை ஏசன்சிச் செலவு எவ்வளவு வருகிதெண்டு சொன்னியள் எண்டால் சிதம்பரப்பிள்ளையண்ணை தருவார்.

சம்பந்தி: அது வந்து... பிள்ளையைக் கொண்டுபோய் கொழும்பிலை கொஞ்ச நாளைக்கு வைச்சிருக்க வேணும். பிறகு (பாஸ்போட்டிலை) தலையை மாத்தித்தான் அனுப்புவாங்கள்..

பார்வதி: என்ன தலையை மாத்திறதோ....

சிதம்பரம்: அது வேறை சங்கதியப்பா... நீ பேசாமல் இரு....

புரோக்கர்: அப்ப ஆர் வந்து கூட்டிக் கொண்டு போறது...

சம்பந்தி: தம்பிக்குத் தெரிஞ்ச பெடியன் வந்து தன்ரை மனிசியெண்டு சொல்லிக் கூட்டிக் கொண்டு போவான்..

பார்வதி: என்னது... படத்தை வைச்சு தாலியை கட்டிறியள்... பிறகு இன்னொருதன்ரை பெஞ்சாதியெண்டு வெளியிலை அனுப்புறதோ....

சிதம்பரம்: அது இப்பிடித்தான் எல்லாம் நடக்கிதப்பா.... உங்கை ஆறுமுகத்தாற்றை பெட்டை பாங்கொக்கிலை ஆறு மாதம் அந்த ஏசன்சிப் பெடியனோடை நிண்டு, பிறகு ஏதோவொரு ஆபிரிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டிலை ஆறு மாதம் போய் நிண்டுதான் பிறகு ஜேர்மனி போய் சேர்ந்தவளாம்.

பார்வதி: அப்ப மாப்பிளைக்கு இன்னொருத்தன் ஒரு வருசம் கழிச்சி பொம்பிளையைக் கொண்டுபோய்ச் சேர்க்கப் போறான்... என்ரை கடவுளே... அதுவரைக்கும் ஏசன்சிக்காரரோடை அலைஞ்சு திரிய வேணும் ஒரு வருசமாய்.... நான் சம்மதிக்கமாட்டன் உதுக்கு...

சிதம்பரம்: இஞ்சேர் பார்வதி... இது இப்ப சர்வ சாதாரணமப்பா... நாட்டு நிலையைப் பொறுத்து நாங்களும் கொஞ்சம் அஜஸ்ட் பண்ண வேணும் கண்டியோ...

பார்வதி: அதுக்கு கலியாணம் பேசின பொம்பிளையை இன்னொருத்தன் தன்ரை பெஞ்சாதியெண்டு பதிஞ்சு கூட்டிக் கொண்டு போறதெண்டால்... என்ரை கடவுளே.....

புரோக்கர்: அது முந்தின காலம் தான் அக்கா... கலியாணம் முடிஞ்ச உடனை மாப்பிளை முன்னுக்குப் போக பொம்பிளை பின்னுக்கு போறது... இப்ப அப்படியில்லை.

சம்பந்தி: அது வந்து பாருங்கோ... மகனுக்கு தெரிஞ்ச பொடியன்தான் வந்து கூட்டிக் கொண்டு போகும்...

சிதம்பரம்: அதுதானை... பெடியனே சம்மதிச்சிட்டானாம் பிறகென்னப்பா..

பார்வதி: பிள்ளை பெடியன்ரை கையிலை போய்ச் சேரும்வரை அது எங்கடை பொறுப்பெல்லேயப்பா...

சிதம்பரம்: பெடியன் ஓமெண்டு சொல்லுறான்... பெடியன்ரை தாய் தகப்பன் ஓமெண்டு சொல்லுகினம்.. பிறகேன் நீ நிண்டு குதிக்கிறாய்....

நாகம்மா: எங்கடை மகனுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைச்சுக் கொடுக்க வேண்டியது எங்கடை கடமையெல்லே... அதோடை அங்கை பெடியனுக்கு வயசும் போகுது... அப்ப நாங்கள் உதெல்லாத்தையும் கணக்குப் பார்த்துக் கொண்டு நிக்கேலாது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தி: இனியென்ன நாங்கள் எங்கடை பிள்ளையாய் ஏற்றுக் கொண்டிட்டம்...அதை எங்கடை பொறுப்பிலை விட்டிடுங்கோ... நாகம்மா நீ காசை சரியாய் எண்ணிப் பாத்தியே... பிறகு எங்களுக்குள்ள ஒரு மனக்கசப்பும் வரக்கூடாது பார்த்தியளோ...

நாகம்மா: காசு சரியாய் இருக்கப்பா... அவையளுக்கு பிறகு சமசியம் வரக்கூடாது பாருங்கோ... அதுதான் அந்த ஏஜென்சிக்கு எவ்வளவு காசு முடியும், கொழும்பிலை போய் நிக்கிறதுக்கு எவ்வளவு காசு முடியும் எண்டது எல்லாத்தையும் வடிவாய் சொல்லிப் போடுங்கோ... நான் இந்தக் காசு முழுவதையும் என்ரை கடைசியின்ரை பெயரிலை போட்டிடுவன்...பிறகு அதுக்கு கலியாணம் காட்சியெண்டு வரேக்கை நான் எங்கை போவன் காசுக்கு...

பார்வதி: அப்ப இந்தக் காசு தங்கடை பிள்ளையின்ரை கலியாணத்திற்கு இப்பவே சேர்க்கினம்... என்ன.. என்ரை பிள்ளை இன்னும் மாப்பிளைபோடை போய்ச் சேரேல்லை.. அதுக்கிடையிலை தங்கடை மகளின்ரை வாழ்க்கையைப் பற்றி பேசுகினம்....

சிதம்பரம்: பார்வதி நீ பேசாமல் இரு... கலியாணம் நடந்த முதல் நாளே அவையளோடை மனஸ்தாபத்தை ஏற்படுத்தாதை.. பேசாமல் இரு...

பார்வதி: (புறுபுறுக்கிறாள்) கண்டறியாத கலியாணம்....

சிதம்பரம்: சரி இனியென்ன செய்யிறது நாட்டு நிலை இப்பிடியாய்ப் போச்சு... நாங்கள் என்ன செய்யிறது...

புரோக்கர்: அப்ப என்ரை விசயத்தையும் பேசி முடிச்சிட்டியள் எண்டால் உறுதி எழுத றிஜிஸ்ரார் வரக்கிடையிலை எல்லாம் முடிஞ்சு போகும்....

சம்பந்தி: அதென்ன முந்தின மாதிரி 5 வீதம் காசுக்கு கொமிசனும், காணிப் பெறுமதிக்கு மூண்டு வீதம் கொமிசனும் தானை...அதை அவையள் தருவினம் தானை....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரோக்கர்: நாடு இருக்கிற நிலைமையிலை நாங்களும் கொஞ்சம் றேற்றை கூட்டிப் போட்டம்... இப்ப நீங்கள் யோசிச்சுப் பாருங்கோ... பெடியள் வெளிநாடு வேறை... அங்கையிங்கை எண்டு போயிட்டுதுகள்... பெட்டையளும் அப்பிடித்தான். இப்ப ஒரு பொம்பிளைக்கு கலியாணம் பேசுறதெண்டால் நாயாய் அலைய வேணும்... நீங்களே யோசிச்சுப் பாருங்கோ எத்தினை தரம் சிதம்பரப்பிள்ளையண்ணை வீட்டை வந்து போயிருப்பன். இப்ப என்ன பஸ் ஓடுதே... சைக்கிளிலை இல்லாட்டி மண்ணெண்ணயிலை ஓடுறமோட்டச் சைக்கிளிலை வரவேணும்...

சம்பந்தி: சரி புரோக்கர் இப்ப உங்கடை றேற்றைச் சொல்லுங்கோ.... நாங்கள் றேற் பேசாமல் கலியாணம் பேச விட்டது எங்கடை பிழை...

பார்வதி: பெடியனுக்கு வயது போகுதெண்ட அவசரம்... அதிலை றேற் பேச மறந்து போனியளாக்கும்....

சிதம்பரம்: நீ பேசாமல் இரப்பா... நீங்கள் சொல்லுங்கோ புரோக்கர்.

புரோக்கர்: குடுத்த காசிலை 5 வீதம் எனக்கு கொமிசனாய் தரவேணும். காணிப் பெறுமதிக்கு 3 வீதம் தரவேணும்... நான் ஆகவும் கூடுதலாய் கேட்கயில்லை....

சிதம்பர: காணிக்கு எவ்வளவு பெறுமதி போடுறியள்...

புரோக்கர்: என்ன பெறுமதியான காணி தெரியுமே....நாட்டு நிலைமை சரியாய் வந்தால் அந்தக் காணியின்ரை பெறுமதி 20 இலட்சம் பெறும். இப்பத்தை பெறுமதி ஆகக் குறைஞ்சது ஒரு பத்தாவது பெறும்... அப்ப அதுக்கேற்ற மாதிரி கொமிசனைப் போடுங்கோவன்...

பார்வதி: (புறுபுறுக்கிறாள்) எங்கடை காணிக்கு புரோக்கர் பெறுமதி சொல்லுறார்.

சிதம்பரம்: பார்வதி நீ பேசாமல் இரு... சரி புரோக்கர் இப்பத்தைப் பெறுமதி நீங்கள் சொன்ன மாதிரி பத்து லட்சம் பெறாது. ஒரு ஆறு லட்சம் பெறும்... அந்த றோட்டாலை பஸ்சும் ஓடுறதில்லை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகம்மா: என்னப்பா நீங்கள் சொன்னியள் காணி நல்ல பெறுமதியான காணி, மெயின் றோட்டுக் கரையோடை எண்டியள்.... இப்ப இவர் சொல்லுறார் பஸ்ஸும் போறதில்லையெண்டு....

சம்பந்தி: (ரகசியமாய்) அதப்பா... புரோக்கர் கறக்கிறதுக்கு நிக்கிறார். அதுதான் சம்பந்தி விலையைக் குறைச்சுச் சொல்லுறார்... நீ பேசாமல் இரு...

சிதம்பரம்: என்ன புரோக்கர் நான் சொல்லுறது சரிதானை... இப்ப நாட்டு நிலைமை சரியெண்டால் நாங்களெல்லாம் இப்பிடியே கலியாணம் நடத்துவம். இந்த ஊர் எடுபடும்.. சரி... இப்ப ஒரு ஆறு லட்சம் பெறுமதி போட்டால் உம்மடை கொமிசன் எவ்வளவு வரும் எண்டு சொல்லுமன்...

புரோக்கர்: இப்பத்தை காலத்திலை பாருங்கோ எங்கடை தொழில் பாக்கிறது சரியான கஸ்ரம்... ஏனெண்டால் விலைவாசி ஏறிப் போச்சுது...

சம்பந்தி: அது சரி உங்களுக்கு மட்டுமே ஏறினது... எங்களுக்கும் தானை... நீர் உம்மடை கொமிசன் எவ்வளவு எண்டு சொல்லும்....

புரோக்கர்: காசுக்கு அஞ்சு வீதக் கொமிசன் எண்டால் அதுக்கு ஒரு பத்தாயிரம். காணிக்கு நீங்கள் சொல்லுற பெறுமதியைப் போட்டுப் பாத்தாலும் அதுக்கொரு 18 ஆயிரம், மொத்தம் இருபத்தியெட்டாயிரம் வரும். இரண்டு பகுதியுமாய் பிரிச்சுத் தாருங்கோவன்...

சம்பந்தி: நான் அப்பவே சொன்னனான். இவ்வளவு குறைஞ்ச சீதனத்துக்கு ஒமெண்டு செல்லேக்கை முழுக் கொமிசனையும் பொம்பிளை பகுதியிட்டை வாங்க வேணுமெண்டு....

புரோக்கர்: அது நீங்கள் ஒண்டுக்கையொண்டு... நீங்கள் பேசி முடிவெடுங்கோ...

பார்வதி: இஞ்சருங்கோ நீங்கள்தான் கொமிசன் காசும் கொடுக்க வேணும் போலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதம்பரம்: பார்வதி நீ பேசாமல் இரு... சரி சரி.... இது ஒண்டுக்குள்ளை யொண்டு உதுகளையெல்லாம் கணக்குப் பார்க்கேலாது... என்ரை பிள்ளையைக் கரைசேர்க்க நான்தானை செலவழிக்க வேணும். நான் தாறன்.. இனியும் பேசிக் கொண்டு நிக்க வேண்டாம். றிஜிஸ்ரார் வரப்போறார், வாங்கோ நாங்கள் எல்லாரும் போய்ச் சாப்பிடுவம். (ரகசியமாய்) புரோக்கர் சம்பந்தி கறுவல் ஏதும் எடுப்பாரோ...

புரோக்கர்: சும்மா குடுத்தால் கறுவல் என்ன வெள்ளையும் எடுப்பார்....

சிதம்பரம்: பார்வதி நீங்கள் போய் சாப்பாட்டை அடுக்குப் பண்ணுங்கோ... நாங்கள் ஒருக்கா முன்னறைப் பக்கம் போயிட்டு வாறம்...

பார்வதி: (நாகம்மாவைப் பார்த்து) நீங்கள் வாங்கோ நாங்கள் போவம் உள்ளுக்கை....

சம்பந்தி: புரோக்கர் நான் எண்டால் கனக்க எடுக்க மாட்டன் தெரியும் தானை

புரோக்கர்: அது தொடங்கீட்டால் அளவு தெரியும் வாருங்கோ...

சிதம்பரம்: என்ன கடிக்கிறதுக்கெண்டால் ஒண்டும் இல்லை. வாழைக்காய்ப் பொரியலும் மிளகாயும்தான் இருக்கு... கொண்டரட்டோ...

புரோக்கர்: முன்னுக்கு அது பரவாயில்லை...

சிதம்பரம்: இஞ்சை பார்வதி... கொஞ்ச வாழைக்காய் பொரியல் அனுப்பும்

(மூவரும் மறு பக்கம் போக ஒளி மங்கி காட்சி முடிவடைகிறது)

காட்சி முடிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி :2

(திரை மூடப்பட்டுள்ளது)

ஒலி : காட்சி மாற்ற இசை. பலர் கொழும்பில் வந்து இறங்குவதற்கான ஒலிகள். கொழும்பு நகரை வெளிக்காட்டுவதற்காக பஸ், கார் ஓடும் ஒலி, விமானங்கள் ஓடும் ஒலி

(திரை விலகுகிறது.)

மேடை : (மேடையின் ஒரு பக்கத்தில் முகவர் தபால் நிலையம் / மறுபக்கத்தில் ஒளிவட்டத்துள் வெளிநாட்டுப் பாணியில் செற்றி ஒன்று போடப்பட்டு ரெலிபோன் வைக்கப்பட்டிருக்கிறது. முகவர் தபால் நிலையத்துள் சிதம்பரம், பார்வதி, ராஜி, ராஜன் ஆகியோர் உள்ளே வர வேண்டும். சிதம்பரம் குடும்பத்தினரின் ஆடையில் எதுவித மாற்றமுமில்லை. ஆனால் வெளிநாட்டில் இருக்கும் அவர்களுடைய மகளின் தோற்றத்தில் மாற்றம் தெரிய வேண்டும்.)



சிதம்பரம் : தங்கச்சி, பிள்ளைக்கு ஒரு கோல் எடுக்க வேணும்.

பெண் பணியாளர்: பிள்ளை எங்கை இருக்கிறா அங்கிள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதம்பரம்: ஜேர்மனியிலை

பெண் பணியாளர்: நம்பர் கொண்டு வந்தனீங்களே.

சிதம்பரம்: கொண்டு வராமல் வருவனே... இஞ்சை பார்வதி பிள்ளையின்ரை நம்பர் துண்டு உம்மடை பாக்குக்குள்ளை தான் வைச்சனான் பார்த்து எடுத்துக் குடும். தம்பி ராஜன் அங்காலை இங்காலை ஓடுறதில்லை உதிலை உந்த கதிரையிலை இரு...

பார்வதி: இதுக்குள்ளைதான் வைச்சனான் அப்பா... கொஞ்சம் பொறுங்கோ...

சிதம்பரம்: புறம்பாய் எடுத்து வைக்கத் தெரியாதே. எல்லாத்தையும் ஒண்டாய் வைச்சுப் போட்டு பேந்து நிண்டு கிண்டிறது. இஞ்சை கொண்டுவா பாக்கை நான் பாக்கிறன்.

பார்வதி: ஆ... இஞ்சை கிடக்கு... இந்தாங்கோ....

சிதம்பரம்: கொண்டு வா... இங்கை... தங்கச்சி இந்த நம்பருக்கு கோல் ஒண்டு எடுத்து நாங்கள் வந்து நிக்கிறமெண்டு உடனை கோல் எடுக்கச் சொல்லும்.

பணியாளர்: அங்கிள் உங்கடை பெயரென்ன

சிதம்பரம்: ம்...ம்... இஞ்சை என்ரை பெயர் தெரியாது... கொடிகாமத்துச் சந்தியிலை வந்து வெள்ளையன் சிதம்பரம் எண்டு சொன்னால் இருக்கிறவன் எழும்பி நிண்டுதான் மறுமொழி சொல்லுவான்.

பணியாளர்: அப்ப அங்கிள் வெள்ளையன் சிதம்பரம் வந்து நிக்கிறார் எண்டு சொல்லட்டே

சிதம்பரம்: ஓம்பிள்ளை அப்படியே சொல்லு...

பார்வதி: இஞ்சேருங்கோ தப்பித் தவறி மருமோன் எடுத்திட்டால் என்ன நினைப்பார். அப்பிடியே சொல்றது பேசாமல் அப்பா அம்மா வந்து நிக்கினம் எண்டு சொல்லச் சொல்லுங்கோ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதம்பரம்: ஓமப்பா நீர் சொல்றதும் சரிதான்... பிள்ளை மருமோன் எடுத்தாலும் குறை நினைப்பார். ஆரும் ஆம்பிளைக் குரல் கதைச்சுது எண்டால் கௌரியின்ரை அப்பா அம்மா வந்து நிக்கினம் எண்டு சொல்லும். பொம்பிளைக் குரல் எண்டால் அம்மாவும் அப்பாவும் வந்து நிக்கினம் எண்டு சொல்லும். சரியாய் சொல்ல வேணும்.

பணியாள்: சரி அங்கிள் நீங்கள் அதிலை போய் இருங்கோ.. கோல் வரக் கூப்பிடுறன்.

பார்வதி: (இருக்கையை நோக்கிப் போய்க் கொண்டு) என்னப்பா சரியாய் எடுத்துச் சொல்லுமோ, பெட்டையின்ரை கதை ஒரு மாதிரிக் கிடக்கு...

சிதம்பரம்: அதுகள் இதைத்தானையப்பா தொழிலாய் செய்யுதுகள்... சரியாய் சொல்லுங்கள் நீ பேசாமல் இரு...

பார்வதி: அவவின்ரை சட்டையின்ரை அளவைப்பார்.... முழங்கால் மட்டத்தோடை சட்டை போட்டிருக்கிறாள்... வேலை செய்யற இடமெண்டால் ஒரு மரியாதையாய் கால் முட்டப் பாவாடை போட வேணும். இல்லையெண்டால் சாறி உடுத்த வேணும்..

ராஜி: ஓமம்மா அப்போதை நாங்கள் வரேக்கை ஒருத்தி போனா அவவின்ரை சட்டையைப் பாத்தனீங்களே....

பார்வதி: உதுதான் கொழும்பு நாகரீகம்... கொழும்பிலை உப்பிடித்தானை பெட்டையள் கெட்டுப் போறது.. நான் எண்டால் உதுகளின்ரை காலை அடிச்சு முறிச்சுப் போட்டு பேசாமல் வீட்டுக்கை கிடவுங்கடி எண்டு சொல்லிப் போடுவன்...

சிதம்பரம்: (மகன் எழும்பிப் போகிறான்) தம்பி உனக்கு எத்தினை தரம் சொல்லுறது அங்கையிங்கை போகாதையெண்டு. பேசாமல் ஒரு இடத்திலை இரடா..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜன்: அப்பா... உதிலை வெளியிலை போற காரைப் பார்க்கிறன்...

சிதம்பரம்: காரும் கத்தரிக்காயும் பேசாமல் இரடா...

பார்வதி: இப்பதானையப்பா இவ்வளவு கார்களை ஒண்டாய் பார்க்கிறான்... பார்க்கட்டும் விடுங்கோ... தம்பி வெளியிலை போறதில்லை.. உதிலை நிண்டே பார்க்க வேணும்...

ராஜி: அம்மா... எங்கடை பக்கத்து றூம் அக்காவின்ரை சட்டையைப் பார்த்தனீங்களே... அவ நேற்றைக்குத்தான் வாங்கினவாம்..

பார்வதி: அதென்ன சட்டையே.. பின்னாலை பெரிய வெட்டொண்டு... இடுப்பு எல்லாம் சரியான இறுக்கம்...

சிதம்பரம்: அதுகள் யாழ்ப்பாணத்திலையிலிருந்து வந்து கொழும்பிலை கனகாலமாய் இருக்குதுகள்... அப்ப நாகரீகம் மாறத்தானை வேணும்...

பார்வதி: அதுக்காக எங்கடை மானம் மரியாதையை விக்க வேணுமே...

பணியாளர்: அங்கிள் உங்கடை கோல் வந்திட்டுது... அந்த முதலாம் நம்பர் கூட்டுக்குள்ளை போங்கோ....

சிதம்பரம: (எழும்பிக் கூடுகளைப் பார்க்கிறார்)


பார்வதி: இஞ்சருங்கோ.... நீங்கள் முதல்லை கதையுங்கோ... எனக்கு சதிரமெல்லாம் நடுங்கிது....

சிதம்பரம்: கண்டறியாத பயம்... இஞ்சை விடு நான் கதைக்கிறன்... (கூட்டுக்குள் செல்கிறார். தொலைபேசியை எடுத்து மறுபக்கமாக பிடித்துக் கொண்டு)

சிதம்பரம்: ஆர் தங்கச்சியே கதைக்கிறது.. (திரும்பிப் பணியாளரைப் பார்த்து) என்ன பிள்ளை ஒண்டும் கேட்கயில்லை.... ஆர் பிள்ளை ஆம்பிளையோ பொம்பிளையோ கதைக்கிறது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பணியாளர்: ரெலிபோனை மற்றப் பக்கமாய் திருப்பிப் பிடிச்சுக் கதையுங்கோ... அப்பதான் அவையள் கதைக்கிறது கேட்கும்...

சிதம்பரம்: எனக்குத் தெரியாதே... (ரெலிபோனை மாற்றிப் பிடிக்கிறார்.... மறுபக்க ஒளி வட்டத்துள் இருக்கும் தொலைபேசி மணி அடிக்கிறது. கௌரி ஒளி வட்டத்துள் வந்து தொலைபேசியை எடுக்கிறாள்)

சிதம்பரம்: ஹலோ... ஹலோ...

கௌரி: ஹலோ ஆர் பேசுறது...

சிதம்பரம்: ஹலோ சரியாய் கேட்கேல்லை கொஞ்சம் பெலத்துக் கதையுங்கோ

கௌரி: ஹலோ நான் கௌரி பேசுறன்...

சிதம்பரம்: ஹலோ... ஆர் பிள்ளையே பேசுறது...
(கூண்டு வாசலில் நின்ற வண்ணம்)

பார்வதி: ஆரப்பா பிள்ளையே பேசுறது... என்னர பிள்ளையாரே.. என்ரை பிள்ளையின்ரை குரலைக் கேட்டு எத்தினை நாள்.... கடவுளே எனக்கு சதிரெமல்லாம் நடுங்கிது... இஞ்சருங்கோ அப்பா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதம்பரம்: கொஞ்சம் பொறுமனப்பா.. அவள் கதைக்கிறதே சரியாய் கேட்கிதில்லை...அதுக்குள்ளை நீரும் நிண்டு கத்திக் கொண்டு நிண்டால்..... பேசாமல் நில்லும்... இல்லாட்டில் நீர் முதல்லை கதையும்... இந்தாரும் புடியும்...

பார்வதி: நீங்கள் கதையுங்கோ அப்பா... எனக்கு நடுங்குது ... நீங்கள் கதையுங்கோ

சிதம்பரம்: ஹலோ ... பிள்ளை எப்பிடி சுகமாய் இருக்கிறியே....

கௌரி: ஓமப்பா... நாங்கள் சுகமாய் இருக்கிறம்... அப்பா அம்மாவும் வந்தவவே....

சிதம்பரம்: ஓம்பிள்ளை வந்தவ... இஞ்சை வெளியிலை நிண்டு அழுது கொண்டு நிக்கிறா...

கௌரி: அவவிட்டை குடுங்கோ அப்பா நான் கதைக்கிறன்...

சிதம்பரம்: இஞ்சருமப்பா... பிள்ளை உம்மைத்தான் கூப்பிடுது... வந்து கதையுமன்...

பார்வதி: என்ரை கடவுளே... என்ரை பிள்ளையின்ரை குரலைக் கேட்டு எத்தினை நாள்... என்னென்டு கதைக்கப் போறனோ... கடவுளே.

சிதம்பரம்: வாருமனப்பா பிள்ளையெல்லே காத்துக் கொண்டு நிக்கிது...

பார்வதி: (கூண்டுக்குள்ளே வந்து.. ரெலிபோனை வாங்குகிறாள்)
சிதம்பரம்: இந்தா இதைப்பிடி... உதென்ன கையெல்லாம் நடுங்கிது...

பார்வதி: இஞ்சருங்கோ வெளியிலை போகாதையுங்கோ... உள்ளுக்கையே நில்லுங்கோ... எனக்கு நடுங்குது...

கௌரி: அம்மா.... ஹலோ அம்மா....

பார்வதி: இஞ்சருங்கோ... என்ரை பிள்ளை கூப்பிடுது... கடவுளே பிள்ளையின்ரை குரலைக் கேட்டு எத்தினை நாள் கடவுளே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதம்பரம்: சரியப்பா.... ஹலோ எண்டு சொல்லுமன்...

பார்வதி: ஹலோ....... பிள்ளை........

கௌரி: எப்படியம்மா சுகமாய் இருக்கிறியே...

பார்வதி: ஓமம்மா... எனக்கென்ன சுகமாய் இருக்கிறன்... நீ எப்படி சுகமாய் இருக்கிறியே...

கௌரி: (பெருமூச்சு விடுறாள்)

பார்வதி: இஞ்சருங்கோ எப்படி சுகமாய் இருக்கிறியே எண்டு கேட்கிறன். பிள்ளை பெருமூச்சு விடுகிது... ஏனப்பா மாப்பிள்ளையைப் பிடிக்கேல்லையோ தெரியாது....

சிதம்பரம்: அது அப்பிடியில்லையப்பா... கன நாளைக்குப் பிறகு உன்ரை குரலைக் கேட்ட கவலை போலை. நீ கதையன் அப்பா....

பார்வதி: ஏன் பிள்ளை பெருமூச்சு விடுறாய் ஏன்... மாப்பிளையை பிடிக்கேல்லையே பிள்ளை...

கௌரி: இனி மாப்பிளையைப் பிடிக்கேல்லை எண்டு சொல்ல ஏலாதுதானை அம்மா.

பார்வதி: ஏன் பிள்ளை என்ன நடந்தது....

கௌரி: (அழுகிறாள்)

பார்வதி: (அழுகிறாள்)

சிதம்பரம்: ஏனப்பா அழுறாய்...

பார்வதி: ஏன் பிள்ளை.... என்னத்துக்கு அழுறாய்...

கௌரி: அம்மா எனக்கு உன்னைப் பார்க்க வேணும் போலை யிருக்கு....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வதி: அதுக்கு என்ன பிள்ளை செய்யிறது...

கௌரி: அம்மா.... எனக்கு... எனக்கு...

பார்வதி: என்ன பிள்ளை....

கௌரி: அம்மா... உன்ரை கையாலை சமைச்சு சாப்பிட வேணும் போலை இருக்கு...

பார்வதி: ஏன் பிள்ளை... சாப்பாடு சரியில்லையே...

கௌரி: இஞ்சத்தை சாப்பாட்டைப் பார்க்க வயித்தைப் பிரட்டிக் கொண்டு வருகிது.

பார்வதி: (அழுதுகொண்டு) இப்ப நான் என்ன செய்யிறது பிள்ளை... (கூண்டுக்கு வெளியே நின்ற வண்ணம்)

சிதம்பரம்: என்னப்பா பேந்தும் அழுறாய்..

பார்வதி: என்ரை பிள்ளையின்ரை ஏக்கத்தை ஆரிட்டைச் சொல்றது...

சிதம்பரம்: இஞ்சை தா... ரெலிபோனை... நான் கதைக்கிறன். ஹலோ ... ஹலோ... என்ன பிள்ளை கொம்மா ஒரேயடியாய் அழுறா...

கௌரி: அப்பா எனக்கு அம்மா சமைச்ச சாப்பாடு சாப்பிடவேணும் போலையிருக்கு.

சிதம்பரம்: அதுக்கு என்ன செய்யிறது பிள்ளை... கொம்மா உங்களையெல்லாம் மடிக்குள்ளை வைச்சு வளர்த்துப் போட்டா... அது தான் உங்களுக்கு பிரிஞ்சு இருக்க ஒரு மாதிரியாய் இருக்கு...

கௌரி: உங்களையெல்லாம் எப்ப பார்ப்பன் எண்டிருக்கு... பார்க்க முடியுமோ தெரியாது. அதை நினைக்க அழுகை அழுகையாய் வருகிது...

சிதம்பரம்: ஏன் பிள்ளை எங்களையெல்லாம் இப்பிடிப் போட்டு கலக்கிறாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜன்: அப்பா... என்னட்டை ஒருக்காத் தாருங்கோ... நானும் ஒருக்கா அக்காவோடை கதைக்க வேணும்.

சிதம்பரம்: பிள்ளை என்னாலையும் கதைக்க ஏலாமல் கிடக்கு.... இந்தா தம்பி கதைக்கப் போறானாம் கதை... இந்தா ராஜன்.... வந்து கதை...கவனமாய்ப் பிடி. (ரீசீவரைக் கொடுத்து) ஹலோ எண்டு சொல்லன் தம்பி.... அப்பத்தானை அவளும் கதைப்பாள்.

ராஜன்: ஹலோ அக்கா... எப்பிடி சுகமாய் இருக்கிறியே...

கௌரி: நான் சுகமாய் இருக்கிறன் நீ... எப்பிடி சுகமாய் இருக்கிறியே...

ராஜன்: நான் நல்ல சுகமாய் இருக்கிறன்... அக்கா ஜிம்மி நாய்க்குட்டி நல்ல பெரிசாய் வளந்திட்டுது.

கௌரி: ராஜன்... அதை நல்ல கவனமாய் பார்த்துக் கொள்.. ஒவ்வொரு நாளும் குளிப்பாட்டிறனியே..

ராஜன்: ஓமக்கா.. நாங்கள் அகதிகளாய் போகேக்கை வீட்டை விட்டிட்டுத்தான் போனனாங்கள், நாங்கள் பிறகு திரும்பிப் போகேக்கை... எங்களைக் கண்ட உடனை கத்திக் குழறி வாலையாட்டிக் கொண்டு ஓடிவந்து கால் எல்லாத்தையும் நக்கிச்சிதக்கா..

கௌரி: நன்றியுள்ள மிருகம்தானே தம்பி. மனிசரைப் போலையில்லை. அதுக்குப் பிறகு ஒவ்வொரு நாளும் குளிப்பாட்டிறனியே...

ராஜன்: ஓமக்கா ஒவ்வொரு நாளும் குளிப்பாட்டிறனான்... ஆனால் இப்ப கொழும்புக்கு வந்திட்டன்தானை... பக்கத்து வீட்டு மாமியவையிட்டை சொல்லிப்போட்டு வந்தனான்.. அவையள் சாப்பாடு வைப்பினம்..

கௌரி: கட்டாயம் சாப்பாடு வைப்பினமே தம்பி...(அழுகிறாள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜன்: ஏனக்கா அழுறாய்... ஏன் அழுறாய்... அவையள் ஜிம்மியை கவனமாய் பார்ப்பினம் அக்கா...

கௌரி: இல்லைத்தம்பி... உங்களையெல்லாம் விட்டிட்டு வந்த துக்கம்.. என்னாலை பொறுத்துக் கொள்ள முடியேல்லை..

ராஜன்: கவலைப்படாதையக்கா...

கௌரி: தம்பி உனக்கென்ன வேணும் சொல்லு... வாங்கி அனுப்புறன்..

ராஜன்: எனக்கக்கா... எனக்கு... நல்ல விளையாட்டுச் சாமான்கள் வாங்கி அனுப்பு.... நல்ல கால்சட்டை ஐஞ்சு வாங்கி அனுப்பு... அக்கா நான் ஒண்டு கேக்கிறன் கட்டாயம் வாங்கி அனுப்ப வேணும்....

கௌரி: என்னெண்டு சொல்லன்...

ராஜன்: மெசின் கண் ஒண்டு வாங்கி அனுப்பு....

கௌரி: மெசின் கண்ணோ... என்ன உண்மையானதோ...

ராஜன்: இல்லையக்கா... உண்மையானது மாதிரி இருக்க வேணும். ஆனால் பிளாஸ்ரிக்கிலை செய்தது... பற்றி போட்டு வெடிக்க வைக்கக் கூடியதாய் இருக்க வேணும்... சரியே.... இஞ்சை எல்லாரும் உதுகளோடைதான் திரியிறவை.....

சிதம்பரம்: சரி.... இஞ்சை தம்பி ராஜியிட்டையும் குடு... அவளும் ஒருக்கா கதைக்கட்டும்...

ராஜன்: இந்தா ராஜி உள்ளை வா... இந்தப் பக்கமாய் பிடி.... இதை காதுக் குள்ளை வை... ஹலோ எண்டு சொல்லு....

ராஜி: ஹலோ... அக்கா...

கௌரி: ஆர் ராஜியே கதைக்கிறது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜி: ஹலோ... அக்கா..

கௌரி: ராஜியே கதைக்கிறது..

ராஜி: (மறுபக்கமாய் திரும்பி) ஐயோ அக்கா கதைக்கிறா....

ராஜன்: நீயும் கதை ராஜி அப்பதான் அக்கா கதைப்பா...

சிதம்பரம்: சுறுக்கா கதைச்சு முடிச்சிட்டுத் தாங்கோ... நாங்களும் கதைக்க வேணும்...

ராஜி: அக்கா... நீ... வைச்ச சிவப்பு ரோஜாச் செடி பூக்கத் தொடங்கிட்டுது.. நல்ல வடிவான பூ...

கௌரி: நல்ல சிவப்பே...

ராஜி: ஓமக்கா நல்ல சிவப்பு... நாங்கள் வீட்டை விட்டிட்டு போய் திரும்பி வந்து பார்க்கேக்கை நல்லாய் வாடிப் போய் நிண்டுது... பேந்து நல்லாய் தண்ணி ஊத்தினன்... ஒரு மாதிரி துளிர் வந்து ஒண்டு இரண்டு பூக்கள் வந்திட்டுது... பேந்து கொழும்புக்கு வரேக்கை பக்கத்துவீட்டு மோகன் அண்ணையிட்டை சொல்லிப் போட்டு வந்தனான்...

கௌரி: என்ன சொல்லிப் போட்டு வந்தனி...

ராஜி: இது கௌரி அக்காவுக்கு விருப்பமான ரோசா, அதாலை மறக்காமல் தண்ணி ஊத்துங்கோ எண்டு சொன்னனான்...

கௌரி: என்ன சொன்னவர்..

ராஜி: கௌரி அக்காவிட்டைச் சொல்லுங்கோ... உன்ரை ஞாபகமாய் பூ மரத்துக்கு மறக்காமல் தண்ணி ஊத்திறன் எண்டு... தன்னை மறக்க வேண்டாம் எண்டு சொல்லச் சொன்னவர்...

கௌரி: ராஜி... இனி அவரைக் கண்டால் ... நான் வளர்த்த வெள்ளை ரோஜாச் செடி வாடிப் போயிட்டுது எண்டு சொல்ல வேணும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜி: நீ எங்கையக்கா வெள்ளை ரோஜாச் செடி வளர்த்தனி...

கௌரி: நீ அவரிட்டைச் சொல்லன்... அவருக்கு விளங்கும்...அது... சரி உனக்கென்ன வேணும்.

ராஜி: எனக்கு நல்ல சட்டையள் வாங்கி அனுப்பு...அக்கா எனக்கும் நல்ல உயரமான செருப்பு போட ஆசை... தலைக்கு நல்ல வடிவான வூல் .... எனக்கு சங்கிலியுமில்லை...

கௌரி: சரி... சரி ... நான் அம்மாவோடை கதைக்க வேணும் இப்ப ரெலிபோனை குடுங்கோ... நான் பிள்ளைக்குத் தேவையான எல்லாம் வாங்கி அனுப்பிறன்...

ராஜி: அம்மா... அம்மா... உங்களோடை அக்கா கதைக்கப் போறாவாம் வாங்கோ... உள்ளுக்குள்ளை...

பார்வதி: (கண்ணைத் துடைச்சபடி) ஹலோ... பிள்ளை என்னம்மா சொல்லு...

கௌரி: எப்பம்மா கொழும்புக்கு வந்தனீங்கள்....

பார்வதி: இண்டைக்கு காலமைதான் வந்தனாங்கள் பிள்ளை... வந்த உடனை சாமான்களையெல்லாம் நீங்கள் கடிதத்திலை எழுதின. லொட்ஜிலை கொண்டு போய் வைச்சுப் போட்டு நேரை வந்து உடனை கோல் எடுத்தனாங்கள்...

கௌரி: உங்கடை கோல் எப்ப வரும் நான் எல்லாத்தையும் சொல்லி அழவேணும் எண்டு எத்தினை நாள் பார்த்துக் கொண்டு இருந்தனான்.

பார்வதி: ஏன் பிள்ளை உனக்கு என்ன நடந்தது...உண்மையைச் சொல்லு.

கௌரி: நான் என்னத்தையம்மா சொல்லுறது..

பார்வதி: ஏன் பிள்ளை உனக்கு மாப்பிள்ளையைப் பிடிக்கேல்லையே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரி: இனிப் பிடிச்சென்ன பிடிக்கா விட்டால் என்னம்மா செய்யிறது.

பார்வதி: படத்திலை பார்க்கேக்கை நல்ல வாட்ட சாட்டமாய்த்தானே இருந்திது...

கௌரி: அவர் படத்திலை பார்த்தது போலை இல்லையம்மா... தலையிலை ஒரு மயிருமில்லை...

பார்வதி: அப்ப படத்திலை நல்ல சுருள் சுருளாய் மயிரிருந்திது பிள்ளை....

கௌரி: அது முந்தி எடுத்த படமாம்...அதைத்தான் இப்ப எடுத்த படம் எண்டு அனுப்பியிருக்கினம்.

பார்வதி: அப்ப பிள்ளை நீயென்ன சந்தோசமில்லாமலேயே இருக்கிறாய். இந்த மனிசன் அந்த நேரம் சன்னதம் ஆடிக் கொண்டு இருந்திது, அதுதான் நான் ஓமெண்டு சொன்னனான். கடவுளே... அப்ப நீ விருப்பமில்லாமலே குடும்பம் நடத்திக் கொண்டிருக்கிறாய்...

கௌரி: அவையின்ரை வீட்டுக்காரரும் அடிக்கடி காசுக்கு எழுதினபடி ... அதாலை நான் கொண்டு வந்த சீதனம் காணாதாம் அம்மா...

பார்வதி: கடவுளே... ஏனிந்தச் சிக்கலுக்கை எங்களைக் கொண்டு வந்து விட்டிருக்கிறாய் (அழுகிறாள்)

சிதம்பரம்: ஏனப்பா பேந்தும் அழுகிறாய்.. என்னவாம் பிள்ளை...

பார்வதி: பிள்ளைக்கு கதைச்ச உடனை தாங்க முடியேல்லையாம்.. அவர் சீதனம் காணாது எண்டு சொன்னவராம்...

சிதம்பரம்: இஞ்சை கொண்டு வா... உவங்கள் வெளிநாட்டிலை லட்சக் கணக்கிலை உழைக்கிறம் எண்டு தம்பட்டம் அடிப்பாங்கள். பிறகு இஞ்சை கஷ்டப்படுற சனத்திட்டை சீதனம் கேப்பாங்கள்.. இந்த லட்சணத்திலை அவையளுக்கு சீதனமும் கூடுதலாய் வேணும்.. இஞ்சை விடு நாலு கேள்வி கேட்டுப் போட்டு விடுறன்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வதி: இஞ்சருங்கோ.. சும்மா சத்தம் போட்டுக் கதைச்சுப் பிள்ளையை பேந்தும் கவலைப்படுத்தாதேங்கோ... சும்மா சாடைமாடையாச் சொல்லுங்கோ...

சிதம்பரம்: (ரெலிபோனை வாங்கி) பிள்ளை நாங்களும் நல்லாய் நொந்து போய் இருக்கிறம்... எங்களிட்டை இப்ப கனக்க கதைக்க காசும் இல்லை. ஊரிலை பயிர் பச்சடி ஒண்டும் செய்ய ஏலாமல் இருக்கு... அதாலை இப்ப வருமானமும் இல்லை...

கௌரி: அப்பா... நான் அவரிடடைச்சொல்லி உங்களுக்கு கொஞ்சம் காசு அனுப்பச் சொல்றன்...

சிதம்பரம்: பிள்ளை அவர் எங்களுக்கு காசு அனுப்ப விடுவாரே...

கௌரி: எனக்கு இஞ்சை டோல் மணி கிடைக்குதுதானை...

சிதம்பரம்: அதென்ன பிள்ளை டோல் மணியெண்டால்...

கௌரி: அதப்பா.. டோல் மணியெண்டால் எனக்கொரு வேலை கிடைக்கும்வரை அரசாங்கம் என்ரை செலவுக்கு காசு தரும்... அந்தக் காசிலை கொஞ்சத்தை அனுப்பச் சொல்றன்...

சிதம்பரம்: இஞ்சருமப்பா... காசு கொஞ்சம் அனுப்பட்டோ எண்டு கேட்குது பிள்ளை.

பார்வதி: பிரச்சனையொண்டும் வேண்டாம்... அவன் பெடியன் சீதனம் காணாது எண்டு சொல்றானாப்... பேந்தேன் அதுகளின்ரை வாழ்க்கைக்கை நாங்கள் பிரச்சனை ஏற்படுத்துவான்... வேண்டாம் எண்டு சொல்லுங்கோ...

சிதம்பரம்: இந்தா நீ தான் வந்து சொல்லு...

பார்வதி: (ரெலிபோனை வாங்கி) இஞ்சை பிள்ளை.... காசனுப்பியேன் அவரோடை தேவையில்லாத பிரச்சனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரி : அம்மா உங்கடை குரலைக் கேட்டால் தான் நிம்மதி.. அதாலை நீங்கள் இப்போதைக்கு யாழ்ப்பாணம் போக வேண்டாம்... இங்கேயே நில்லுங்கோ...

பார்வதி: அங்கை வீட்டை போட்டது போட்டபடி விட்டிட்டு வந்தனாங்கள்... நாங்கள் ஒரு கிழமைக்கை திரும்பிப் போகவேணும்... இல்லாட்டி பிணை வைச்ச ஆளைத்தான் பிடிப்பாங்கள்...

கௌரி: அதுக்கென்ன அம்மா... கொஞ்ச நாளைக்கு நிண்டிட்டுப் போங்கோ.. நான் அதுவரைக்கும் நிம்மதியாய் இருப்பன்...

பார்வதி: சரி பிள்ளை ஒரு கிழமை நிண்டிட்டுப் போறன்...

கௌரி: அம்மா... உங்கடை விலாசத்திற்கு ஒராள் காசு கொண்டு வந்து தரும்...

பார்வதி: எப்ப பிள்ளை கொண்டு வந்து தருவினம்...

கௌரி: நாளைக்கே கொண்டு வந்து தருவினம்... தம்பி கேட்ட சாமான்கள் எல்லாம் வாங்கிக் குடுங்கோ... தங்கச்சிக்கும் கேட்ட சாமான்கள் எல்லாம் வாங்கிக் குடுங்கோ... கொழும்பிலை நிக்கிறது.. அப்பாவை வேட்டியோடை திரியவேண்டாம் எண்டு சொல்லுங்கோ.. கால்சட்டை தைச்சுப் போடச் சொல்லுங்கோ.... நீங்கள் நல்ல சாறி வாங்கிக் கட்டுங்கோ...

பார்வதி: எங்கை பிள்ளை உன்ரை அவர்....

கௌரி: அவர் இப்ப வேலைக்குப் போயிட்டார்.. இனி நாளைக்குத்தான் வருவார்.

பார்வதி: அவரின்ரை குரலையும் ஒருக்கா கேட்க ஆசையாய் இருக்கு பிள்ளை...

கௌரி: நாளைக்கு கதைக்கேக்கை அவரோடையும் கதைக்கலாம் தானை.. இப்ப தம்பியிட்டை குடுங்கோ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வதி: ராஜன் இஞ்சை வா... அக்கா கதைக்கப் போறாவாம்...

ராஜன்: (ரெலிபோனை வாங்கி) அக்கா... ஹலோ அக்கா...

கௌரி: ராஜன் அப்பாவுக்கு கொஞ்சம் காசு அனுப்புறன். அதிலை தேவையான சாமான் எல்லாம் வாங்கு என்ன...

ராஜன்: அப்பாவிட்டை சொல்லக்கா அந்த துவக்கும் வாங்கித் தரச் சொல்லி.. அங்கை எல்லாரும் துவக்கோடை தான் திரியிறவை... எனக்கும் ஆசையக்கா...

கௌரி: நான் அப்பாவிட்டைச் சொல்றன்... நீ இப்ப அப்பாவிட்டைக் குடு..

ராஜன்: அப்பா அக்கா கதைக்கப் போறாவாம்.. வாங்கோ...

சிதம்பரம்: (ரெலிபோனைவாங்கி) சரி பிள்ளை இனியென்ன பேந்து நாளைக்கு கதைக்கிறம்...

கௌரி: நாளைக்கு சரியாய் பின்னேரம் அஞ்சு மணிக்கு இந்த ரெலிபோன் நம்பரிலிலை வந்து நில்லுங்கோ மறக்க வேண்டாம். அவரும் நிற்பார்.. நீங்கள் கதைச்சாத்தான் எனக்குச் சாப்பிட மனம் வரும்... நான் இப்ப ரெலிபோனை வைக்கிறன் அப்பா (அழுதுகொண்டு ரெலிபோனை வைக்கிறாள்)

சிதம்பரம்: (கண்ணைத் துவாயால் துடைச்சுக் கொண்டு கூண்டுக்கு வெளியே வந்து) உமக்கென்ன சொன்னவள்...

பார்வதி: காசு அனுப்புறாளாம்.. எங்களைக் கொழும்பிலை கொஞ்ச நாளைக்கு நிக்கட்டாம்...

சிதம்பரம் : (பணியாளரை நெருங்கி... ) இப்ப எவ்வளவு பிள்ளை காசு...

பெண் பணியாளர்:கொஞ்சம் பொறுங்கோ அங்கிள்... ம்...ம்.. அங்கிள் முதல்லை கோல் அடிச்சதுக்கு 125ரூபா... பிறகு நீங்கள் கதைச்சதுக்கு 600ரூபாய்... ஜிஎஸ்ரி.. எண்பத்தைந்து ரூபாய்.. டி ரக்ஸ் 86 ரூபாய்.. எல்லாமாய் எண்ணூற்றி தொண்ணூற்றியாறு ரூபா.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதம்பரம்: மெய்ய பிள்ளை முதல்லை நாங்கள் கோல் எடுத்த காசு 125 ரூபாய் சரி.. பிறகு பிள்ளை தானை கோல் எடுத்தது.. அதுக்கேன் பிள்ளை காசு....

பணியாளர்: அது அங்கிள் எங்கடை ரெலிபோன் லைனைத்தானே பாவிச்சனீங்கள். அதுக்கு நிமிசத்துக்கு 8 ரூபாப்படி சாச் பண்ணுறம்... நீங்கள் கதைச்ச நேரத்தைவிட அழுத நேரம்தான் கூடுதல். அதனாலைதான் இவ்வளவு காசு....

சிதம்பரம்: எங்கடை கவலை உங்களுக்க கெங்கை விளங்கப்போகுது.... அது சரி பிள்ளை மற்றதுகள் என்ன...

பணியாளர்: ஒண்டு ஜிஎஸ்ரிரக்ஸ்.. புதுசாய் வந்திருக்கு... மற்றது யுத்தத்திற்கு வரி...

சிதம்பரம்: நாங்கள் யுத்தம் நடக்கிற இடத்திலையிருந்துதானை பிள்ளை தப்பி ஓடி வந்திருக்கிறம்.. பிறகென்ன ...வரி...

பணியாளர்: அதுக்கு நாங்கள் ஒண்டு செய்ய ஏலாது அங்கிள்...

சிதம்பரம்: அப்ப பிள்ளை அங்கையிருந்து தங்கச்சி எடுத்த கோலுக்கும் நாங்கள் வரி கட்ட வேணுமே பிள்ளை...

பணியாளர்: ஓமங்கிள்....

சிதம்பரம்: எங்கடை காசு என்னென்ன விதத்திலை போகுது எண்டதைப் பார்க்க வயித்தைப் பத்தி எரியுது.. இந்தா பிள்ளை... நாங்கள் வாறம்... நாங்கள் தொடர்ச்சியாய் இஞ்சைதான் வருவம்... குறைச்சுக்கிறைச்சுப் போடப்பாருங்கோ.. அப்ப நாங்கள் வாறம் பிள்ளை...

(மேடையை விட்டு அகல ஒளிமங்கி காட்சி முடிவடைகிறது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி 3

(முகவர் தபால் நிலையம்: ஒளி மங்கி பின்னர் கூட வேண்டும். வயோதிபப் பெண்மணி முகவர் நிலையத்துக்குள் வருகிறார்.)

இராசம்மா: தங்கச்சி....

பணியாளர்: யேஸ் பிளீஸ்....

இராசம்மா: எனக்கு ஒரு கோல் எடுக்க வேணும் தங்கச்சி....

பணியாளர்: எந்த நாட்டுக்கு அன்ரி.

இராசம்மா: சுவிசுக்குப் பிள்ளை....

பணியாளர்: ரெலிபோன் இலக்கம் இருக்கோ அன்ரி....

இராசம்மா: இந்த பாக்குக்குள்ளைதான் வைச்சனான். எல்லாப் பாஸ்களும் ஐடன்ரிக் காட்டுகளும், கடிதங்களும் அதுகும் இதுகும் எண்டு வைச்சு பாக் நிறைஞ்சு போச்சு.... ஆ.... இஞ்சை கிடக்கு.... இந்தாரும் பிள்ளை....

பணியாளர்: ஒரு நிமிசமோ.... இல்லாட்டி மூண்டு நிமிசமோ அன்ரி....

இராசம்மா: பிள்ளை நீரே எடுத்துச் சொல்லும். இவன் கண்ணன்தான் எடுப்பான். கதைச்சான் எண்டால் உடனை என்னோடை கதைக்கச் சொல்லும்....

பணியாளர்: கண்ணன் எண்டால்.... அவற்றை முழுப்பெயர் என்ன அன்ரி....

இராசம்மா: இளையதம்பி கண்ணன்.... அவன் தான் இஞ்சையிருந்து கோல் போன உடனை எடுப்பான்.... உங்கடை நம்பரைக் கொடுத்து அம்மா இஞ்சை வந்து நிக்கிறா பேச வேணுமாம்.... உடனை கோல் எடுக்கச் சொல்லும் பிள்ளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாளர்: (ரெலிபோனை டயல் செய்தல்)

இராசம்மா: (முன் கதிரையில் வந்து இருத்தல்) கடவுளே என்னெண்டு சொல்லப்போறன்....

பணியாளர்: ஹலோ... ஹலோ ஆர் மிஸ்ரர் கண்ணனே.... பேசுறது.... உங்கடை அம்மா வந்து நிக்கிறா.... உங்களோடை பேச வேணுமாம். இந்த நம்பரை குறிச்சு வைச்சுக் கொள்ளிறியளே... 01 658341 ஓகே ... பை.......

இராசம்மா: என்ன பிள்ளை கண்ணன் நிக்கிறானே. அவனே கதைச்சது.. அவன்ரை குரலைக் கேட்டு எவ்வளவு காலம். பிள்ளை வடிவாய் சொன்னனீர்தானை.. இளையதம்பி கண்ணனின்ரை தாய் எண்டு....

பணியாளர்: ஓம் அன்ரி நல்ல விபரமாய்ச் சொல்லியிருக்கு... 125 ரூபா கட்டவேணும்,.இப்ப கட்டிறியளோ அல்லது கோல் வந்து பேசினப் பிறகு கட்டப் போறியளோ..

இராசம்மா: இப்ப கட்டிகிலும் கட்டலாம்... பேந்து தம்பியோடை பேசினப் பிறகும் கட்டலாம். மெய்ய பிள்ளை அங்கையிருந்து கோல் வந்து பேசினாலும் காசு கட்ட வேணுமோ...

பணியாளர்: ஓமன்ரி... அதுக்கு றேற் குறைவு....
(ரெலிபோன் மணியடித்தல்.)
ஹலோ.... ஹலோ... கொஞ்சம் பொறுங்கோ...
அன்ரி உங்கடை சுவிஸ் கோல் வந்திருக்கு... அந்த முதலாம் கூட்டுக்கை போங்கோ...

(இராசம்மா எழும்பிச் சென்று கதவை உள்ளுக்கை தள்ளுகிறாள்)

பணியாளர்: அன்ரி கதவை வெளியிலை இழுங்கோ...

இராசம்மா: (உள்ளே வந்து ரெலிபோனை எடுத்து) ஹலோ.... ஹலோ....

கண்ணன்: (மறுபக்கத்தில்) ஹலோ அம்மாவே பேசுறது....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசம்மா: ஓம் தம்பி....

கண்ணன்: ஹலோ அம்மா....

இராசம்மா: (அழுகிறாள்)

கண்ணன்: ஹலோ அம்மா ஏன் அழுறியள். அப்பாவும் வந்தவரே....

இராசம்மா: அப்பாவோ... (பெலத்து அழுறாள்)

கண்ணன்: ஏனம்மா அழுறியள்.... அப்பாவுக்கு ஏதும் சுகமில்லையே....

இராசம்மா: அவர் எங்களையெல்லாம் விட்டிட்டுப் போயிட்டார் (அழுகிறாள்)

கண்ணன்: போயிட்டாரோ... என்னம்மா நடந்தது....

இராசம்மா: (அழுகிறாள்) ஒரு நாள் மேலாலை வந்து அடிச்சாங்கள்.... எல்லாரும் வெளிக்கிட்டு ஓடினம்....

கண்ணன்: வெளிக்கிட்டு ஓடேக்கை என்னம்மா நடந்தது.

இராசம்மா: என்னை முதல்லை ஓடச் சொல்லிப் போட்டு தான் கதவைப் பூட்டிப் போட்டு வாறன் எண்டார். நான் முன்னுக்கு ஓடிட்டன். எங்கள் இரண்டு பேருக்கும் இடையிலை பெரிய புகை மண்டலம், அப்பா மற்றப் பக்கமாய் ஓடுறது தெரிஞ்சிது.... நான் ஊர்ச் சனத்தோடை சேர்ந்து ஓடிப் போயிட்டன்.

கண்ணன்: பிறகு என்னம்மா நடந்தது....

இராசம்மா: அவர் வருவார் வருவாரெண்டு அகதி முகாமிலையிருந்து பாத்துக் கொண்டு இருந்தன். வரவேயில்லை ஒரு கிழமைக்குப் பிறகு ஊருக்கை போய் பாக்க விட்டாங்கள்...

கண்ணன்: போய்ப் பாத்தனீங்களே அம்மா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசம்மா: (அழுகிறாள்) நான் எங்கை போய் பார்த்தது.... போய் பார்த்தவை வந்து சொல்லிச்சினம்.... அடையாளம் காண முடியேல்லையாம்.... மிஞ்சினதை எடுத்துப் போட்டு எரிச்சுப் போட்டு வந்தினம்..... (அழுகிறாள்)

கண்ணன்: (அழுகிறான்) அப்ப அப்பா எப்ப செத்தவர் எண்டு தெரியாதே...

இராசம்மா: அவர் எப்ப செத்தவர் என்ன நடந்தது எண்டு ஒண்டும் தெரியாது...

கண்ணன்: அப்ப எப்பிடியம்மா.... அப்பாவெண்டு....

இராசம்மா: அவர் உடுத்திருந்த .... சாறம் சேட்டு இதுகளை வைச்சுத்தான் அடையாளம் கண்டனாங்கள்.

கண்ணன்: (கொஞ்ச நேரம் பொறுத்து பெருமூச்சு விட்டு) அம்மா.... எப்பிடி கொழும்புக்கு வந்தனீங்கள்....

இராசம்மா: அதையேன் தம்பி கேக்கிறாய்.... கால்நடை, சைக்கிள், மாட்டு வண்டில், டிரக்ரர், பஸ், கார், சைக்கிள்...ரெயின் இப்பிடி ஏறாத வாகனங்கள் இல்லை... எல்லா வாகனத்திலையும் ஏறித்தான் இஞ்சை வந்து சேர்ந்தனான்....

கண்ணன்: அப்பாவின்ரை செத்த வீட்டுக்கு ஆராரெல்லாம் வந்தவை....

இராசம்மா: ஆர் தம்பி செத்த வீடு நடத்தினது.... ஒரு எட்டுப் பத்துப்பேராய் சேர்ந்து போய் மிஞ்சினதை எடுத்துப் போட்டு எரிச்சுப் போட்டு வந்தவை....

கண்ணன்: அப்ப அம்மா.... நீங்களும் இனி எங்களோடை வந்து இருங்கோவன்......

இராசம்மா: நான் எங்கை தம்பி உங்கை வந்திருக்கிறது....

கண்ணன்: ஏனம்மா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசம்மா: இஞ்சை கிடக்கிறதெல்லாத்தையும் ஆர் தம்பி பார்க்கிறது....

கண்ணன்: அப்பிடியில்லாவிட்டால் தம்பியோடை போய் இந்தியாவிலை இருங்கோவன்.... நாங்கள் காசு அனுப்புறம்....

இராசம்மா: எங்கையிருந்தாலும் என்ரை மண்ணிலை இருக்குமாப்போலை வருமே தம்பி....

கண்ணன்: நாங்கள் ஒருதரும் உங்கையில்லை.... நீங்கள் மட்டும் தனிய இருந்து கஷ்டப்படப்போறியள்....

இராசம்மா: நான் செத்தாலும் என்ரை இந்த மண்ணிலைதான் சாகவேணும்....

கண்ணன்: நாங்கள் ஒருதரும் உங்கையில்லாமல் கஷ்டப்படப்போறியள்....

இராசம்மா: நான் ஒண்டும் கஷ்டப்படமாட்டன்.... நீங்கள் உங்களைக் கவனமாய் பார்த்துக் கொள்ளுங்கோ தம்பி....

கண்ணன்: அப்பிடியெண்டால் அம்மா உங்களுக்கு செலவுக்கு காசு அனுப்புறம்.... கொழும்பிலையே இருக்கப் பாருங்கோ.... அது சரி.... இப்ப ஆரோடை நிக்கிறியள்....

இராசம்மா: தம்பி உனக்குத் தெரியுந்தானை.... பொன்னையற்றை மகன்... செந்தில் அவற்றை வீட்டிலைதான்....

கண்ணன்: அவையின்ரை வீட்டிலை ரெலிபோன் இல்லையோ அம்மா....

இராசம்மா: செந்தில் இருக்கிற வீட்டுக்காறரிட்டை ரெலிபோன் இருக்குது.... ஆனால் அவையள் ரெலிபோன் கதைக்க விடாயினம்

கண்ணன்: அப்பிடியெண்டால் செந்திலிட்டை சொல்லி உங்கை ஒரு றூம் எடுக்கப் பாருங்கோவன்....

இராசம்மா: இப்ப கொழும்பிலை இருக்கிறதெண்டால் பொலிசிலை எல்லாம் பதிஞ்சுதான் நிக்க வேணுமாம்.... அதுதான் செந்திலும் யோசிக்குது....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணன்: ஏனம்மா வயது போன ஆக்கள்தானை சொல்லிப் போட்டு நிக்க ஏலாதே....

இராசம்மா: இப்ப கொழும்பிலை வயசு போனவை, வயது குறைஞ்சவை எண்ட வித்தியாசமில்லை.... எல்லாரையுந்தான் சந்தேகத்திலை பிடிக்கிறாங்கள்....

கண்ணன்: அப்பிடியெண்டால் லொட்ஜ் ஒண்டிலை றூம் எடுத்து நில்லுங்கோவன்....

இராசம்மா: அது நான் தனிய றூம் எடுத்து நிக்க ஏலாது தம்பி....

கண்ணன்: அப்ப என்னம்மா செய்யப் போறிள்....

இராசம்மா: நான் என்ன கஷ்டப்பட்டாவது யாழ்ப்பாணத்திலைதான் போய் இருக்கப் போறன்...

கண்ணன்: அப்ப கொஞ்சக் காசு அனுப்புறன்... உடனை....

இராசம்மா: அண்ணாவும் தம்பியும் கிட்டடியிலை கதைச்சவையே.... அவங்களோடையும் கதைச்சிட்டுத்தான் போவன்....

கண்ணன்: தம்பி இப்ப அவுஸ்திரேலியாவிலையிருந்து மற்ற அண்ணையிட்டை கனடாவுக்குப் போயிருக்கிறான்....

இராசம்மா: என்ன அண்ணையிட்டை போயிருக்கிறானோ.... ஏன் போனவன்....

கண்ணன்: அது இப்ப அவனுக்கு கொலிடே கிடைச்சிருக்காம். அதுதான் போனவன்....

இராசம்மா: அப்ப அவையளுக்கு ஒருக்கா கோல் எடுத்து கதைக்கச் சொல்லிறியே....

கண்ணன்: நான் இப்ப உடனை அடிச்சு அவையளுக்குச் சொல்லுறன்.... இந்த நம்பரிலையே.... நில்லுங்கோ.... நீங்கள் ஒண்டுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோசிக்காதையுங்கோ அம்மா.... எல்லாத்துக்கும் நாங்கள் இருக்கிறம்....

இராசம்மா: தம்பி.... நீ சுவிஸிலை.... தம்பி அவுஸ்திரேலியாவிலை.... அண்ணர் கனடாவிலை.... மற்றவன் இந்தியாவிலை....... நீங்கள் எல்லாம் இருக்கிறியள்.... அப்பாவின்ரை சிதைக்கு ஆர் கொள்ளி வைச்சதெண்டே தெரியாது.... (அழுகிறாள்)

கண்ணன்: ஏனம்மா அப்பிடிச் சொல்லுறியள்....

இராசம்மா: இப்பிடி இருக்கேக்கை எனக்கேதாவது எண்டால் நீங்கள் எல்லாம் எங்கை வரப்போறியள்.... (அழுகிறாள்)

கண்ணன்: அதுதான் எங்களோடை வந்து இருங்கோவன் எண்டு சொன்னாலும் வந்திருக்க மாட்டன் எண்டு சொல்லுறியள்....

இராசம்மா: அதுதானை தம்பி சொல்லிப்போட்டன் அது என்ரை மண்ணிலை. காலாற நடந்து திரிஞ்சாவது என்ரை மனத்தை ஆத்திக் கொள்ளுறன்....

கண்ணன்: சரியம்மா.... உங்களை மாத்த ஏலாது.... உந்த நம்பரிலை இருங்கோ.... இப்ப கொஞ்சம் செல்ல அண்ணரவை கோல் எடுப்பினம்.... சரியே....

இராசம்மா: சரி தம்பி....

(ரெலிபோனை வைத்து விட்டு முகத்தை துடைத்தவண்ணம் வெளியே வருகிறாள்)

(ஒளி மங்கி காட்சி முடிவடைகின்றது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி . 4

(மேடையின் ஒரு புறத்தில் சிதம்பரம், பார்வதி ராஜன், ராஜி, ஆகியோர் இருக்கும் அறை. குக்கரில் பார்வதி நின்று சமைத்துக் கொண்டிருக்கிறாள். சிதம்பரம் விருந்து ஒன்று வைப்பதற்கு ஆயத்தங்கள் செய்த வண்ணம் இருக்கின்றார்.)

பார்வதி: இஞ்சருங்கோ ஆறுமுகத்தார் எப்ப வெளிநாட்டிலை இருந்து வந்தவராம்.

சிதம்பரம்: அந்தாள் அங்கை போய் இரண்டு வருஷம் இருந்திட்டு வந்திருக்குது, பேந்தும் திரும்பிப் போகப் போறாராம்.

பார்வதி: அப்ப ஏன் திரும்பி வந்தவராம்....

சிதம்பரம்: இஞ்சை ஏதோ குடுக்கல் வாங்கல் இருக்குதாம்.... அதுகளை செற்றில் பண்ணிப் போட்டு போகப்போறார் போலை.... கனக்க கதைக்க நேரம் கிடைக்கேல்லை....

பார்வதி: ஏன் எங்கையோ அவசரமாய் போய்க் கொண்டு இருந்தவரே....

சிதம்பரம்: இல்லையப்பா.... ஆளைப் பார்த்த உடனை எனக்கு ஒரு மாதிரியாய் போச்சுது. ஆளே முழுக்க மாறிப் போயிட்டுது.... ஆளிப்ப நல்ல நிறம்.... கால்சட்டையும் போட்டு கூலிங் கிளாசும் போட்டு இப்ப வெள்ளைக்காரன் போலையெல்லோ மாறிட்டுது....

பார்வதி: என்னப்பா.... யாழ்ப்பாணத்திலை இருக்கும் வரைக்கும் வெள்ளை வேட்டியும் நாசனலும் மாத்த மாட்டார்.... கேட்டால் எங்கடை கலாசாரத்தை மாத்தவோ எண்டெல்லாம் பெரிசாய் பேசுவார்....

சிதம்பரம்: அதப்பா... இடத்திற்கேத்த மாதிரி.... நாங்களும் கொஞ்சம் மாற வேணும். நெடுக எங்கடை கலாசாரம் எண்டுசொல்லிக் கொண்டிருந்தால் நாங்கள் முன்னேற வேண்டாமே.... அது சரி ராஜன் எங்கை....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வதி: பக்கத்து வீட்டுப் பொடியன் ஏதோ காதுக்குள்ளை போட்டு பாட்டுக் கேக்கிற மெசின் ஒண்டு வைச்சிருக்கிறானாம்.... அது போலை ஒண்டு வாங்க வேணும் எண்டு அடம் பிடிச்சுக் கொண்டு நிண்டான்.... ஆய்க்கினை தாங்கேலாமல் காசைக் குடுத்து விட்டன்...

சிதம்பரம்: அப்ப இவள் ராஜி....

பார்வதி: அது அவளும் ஏதோ லெட் ஒண்டு வந்திருக்கிதாம்.... அது ஏதோ புதுச்சாதியாம், அங்கை வெள்ளவத்தை பாசன் வீட்டிலைதான் கிடக்குதாம்.... அதுதான் வாங்கப் போயிட்டாள்....

சிதம்பரம்: எவ்வளவு காசு குடுத்து விட்டனி....

பார்வதி: நான் நாலாயிரம் ரூபா குடுத்தன்.... அது காணாது எண்டு எட்டாயிரம் வாங்கிக் கொண்டு போகுதுகள்....

சிதம்பரம்: நாங்கள் கொழும்பிலை இருந்தால் அதுக்கேத்த மாதிரித்தான் இருக்க வேணும்.... சரி.... சரி.... முட்டை பொரிச்சிட்டியே....

பார்வதி: ஓம்.... ஓம்.... இரண்டு பொரிச்சு வைச்சிருக்கு.... காணுமோ....

சிதம்பரம்: அது காணும்.... அந்தக் கடலையையும் ஒரு டிஸ்ஸிலை போட்டு வை....

பார்வதி: சரியப்பா....
(ஆறுமுகத்தார் கறுப்புக் கண்ணாடியுடன் வரவேண்டும்.)

ஆறுமுகம்: சிதம்பரம்.... சிதம்பரம்....

சிதம்பரம்: வாங்கோ ஆறுமுகம் அண்ணை....

பார்வதி: இதென்னப்பா இந்தாள் இப்பிடி மாறியிருக்கு.... வெள்ளைக்காரன் மாதிரியெல்லோ இருக்கு.... வாங்கோ ஆறுமுகம் அண்ணை.... இதிலை இருங்கோ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகம்: இப்ப கொழும்பிலை சரியான வெக்கை.... இந்த வெதருக்குள்ளை மனிசன் இருக்கிறது சரியான கஷ்ரம் அப்பா....

சிதம்பரம்: ஓமண்ணை.... நீங்கள் அந்தக் குளிரான சுவாத்தியத்திலை இருந்த உங்களுக்கு இது ஒத்து வராதுதான்....

பார்வதி: (இரகசியமாய், கணவன் அருகில் வந்து) அது சரியப்பா இப்ப உவர் வெளிநாடு போய் எவ்வளவு காலம் இருக்கும்

சிதம்பரம்: ஒரு இரண்டு வருஷம்தான் இருக்கும்....

பார்வதி: அதுவரைக்கும் யாழ்ப்பாணத்திலை உந்த வெயிலுக்கைதானை திரிஞ்சவர்....

சிதம்பரம்: அது உனக்குத் தெரியாதப்பா அங்கை போய் இருந்தால் உப்பிடித்தான்....

ஆறுமுகம்: அதுசரி .... பார்வதி அக்கா என்னவோ ரகசியம் சொல்லுறா...

சிதம்பரம்: அது ஒண்டுமில்லையண்ணை.... இல்லை உங்களைப் பார்க்க வெள்ளைக்காரன் மாதிரி இருக்காம்.... அதைத்தான் பார்வதி சொல்லுறா....

ஆறுமுகம்: அது அங்கை போய் இருந்தால் தான் தெரியும்.... பார்வதி.... அங்கை சும்மா கடைக்குப் போறதெண்டாலும் கால்சட்டை போட்டு, ரை கட்டித்தான் போறது....

சிதம்பரம்: (குனிந்து தனது வேட்டியைப் பார்த்து).... அப்ப அண்ணை ஆக்கள் ஒருதரும் வேட்டி கட்ட மாட்டினமோ....

ஆறுமுகம்: அங்கை வேட்டி கட்டின ஆக்களைப் பாத்தால் சிரிப்பினம்....

சிதம்பரம்: அது சரிதான் அண்ணை.... அந்தந்த நாட்டிற்குப் போனால் நாங்கள் அதுக்கு ஏத்த மாதிரி மாற வேணும்.... பாம்பு தின்னுற நாட்டுக்குப் போனால் நடு முறி எனக்கு.... சரியண்ணை என்னமாதிரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகம்: பார்வதி அக்கா உனக்கு சொன்னால் என்ன... என்ரை பேரப்பிள்ளையளுக்கு தமிழ் தெரியாது....

சிதம்பரம்: அண்ணை கதைக்குள்ளை கதை.... என்னமாதிரி வெள்ளையன்ரை என்னவும் பாவிப்பியளோ....

ஆறுமுகம்: சும்மா உந்தக் கறுப்பன் வெள்ளையெண்டு விலை குறைஞ்சதுகள் ஒண்டும் பாவிக்க ஏலாது....

சிதம்பரம்: ஓமண்ணை.... வெளிநாட்டிலை இருந்தால் அந்த நாட்டுக்கு ஏற்றமாதிரி மாறவேணும்....

ஆறுமுகம்: நீயும் இப்ப கொழும்பிலை வந்து இருக்கிறபடியால் உன்ரை பிள்ளையும் வெளிநாட்டிலை இருக்கிறதாலை நீயும் இனி வெள்ளைக்காரனைப் போலைத்தானை வாழப் பழக வேணும்....

சிதம்பரம்: ஓமண்ணை.... கொஞ்சம் விலை கூடின சாமான்தான் வாங்கினனான்.... இருங்கோ.... முதலிலை எடுங்கோ...பிறகு பேசுவம்....
(இருவரும் கிளாசில் விட்டு குடிக்கத் தொடங்குகிறார்கள்.)



ஆறுமுகம்: (கொஞ்சம் செருமி) சிதம்பரம் .... அங்கை வெள்ளைக்காரன் சாப்பிட்டிட்டுத்தான் குடிக்கத் தொடங்குவான்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதம்பரம்: அண்ணை வெள்ளைக்காரன் எண்டால் எல்லாம் முறைப்படி தான் செய்வான்....

ஆறுமுகம்: நாங்களும் இப்ப வெள்ளைக்காரர்கள் தான்.... இப்ப நாங்கள் என்ன வெள்ளைக்காரரோடை சீவிக்கேல்லையே.... அவையளோடை பழகேல்லையே....

சிதம்பரம்: அவங்கள் எங்களையெல்லாம் பார்த்துக் கதைப்பாங்களே....

ஆறுமுகம்: அதையேன் கேக்கிறாய் சிதம்பரம்.... அவங்களுக்கு எங்கடை பெடியளைக் கண்டால் பயம்....

சிதம்பரம்: ஏனண்ணை பயப்படுறாங்கள்....

ஆறுமுகம்: எங்கடை பெடியளின்ரை மூளைக்கு கிட்ட நிக்க மாட்டாங்கள்.... அவங்கள் வெள்ளைக்காரங்களைச் சுத்திப் போடுவாங்களப்பா....

சிதம்பரம்: அவ்வளவு கெட்டிக்காரங்களோ அண்ணை....

ஆறுமுகம்: அது.... சிதம்பரம்.... எங்கடை பெடியள்....காசுக்காக தாய் தகப்பன் வைச்ச பெயரையே மாத்தி.... தகப்பன்ரை பெயரை மாத்தி தாய்க்கு வைச்சு தாயின்ரை பெயரை மாத்தி தகப்பனுக்கு வைச்சு.... இரண்டு மூண்டு இடத்திலை டோல் மணி எடுத்துப் போடுவாங்கள்....

பார்வதி: என்ன தகப்பன்ரை தாயின்ரை பெயரை மாத்திப் போடுவாங்களோ....

ஆறுமுகம்: அது என்னெண்டால் பார்வதி அக்கா இப்ப சிதம்பரம் எண்டிருக்கெல்லோ.... ஒரு இடத்திலை கொம்பியூட்டரிலை.... சிதம்பரம் தாயின்ரை பேரெண்டு பதிஞ்சால் மற்ற இடத்திற்குப் போய் சிதம்பரம் தகப்பன்ரை பெயரெண்டு பதிஞ்சு விட்டால் கொம்பியுட்டராலை கண்டுபிடிக்க ஏலாது....

பார்வதி: அப்ப அந்த நாட்டிலை இருக்கிற கொம்பியுட்டர் எல்லாம் எங்கடை கச்சேரி மாதிரியெண்டு சொல்லுங்கோ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதம்பரம்: ஏனப்படிச் சொல்லுறாய் பார்வதி....

பார்வதி: எங்கடை ஊரிலை அகதிச் சாமான் குடுக்கேக்குள்ளை செத்தவயின்ரை பெயரைப் பதிஞ்சுபோட்டு, விதானைமாரும், கச்சேரிக்காரரும் சேர்ந்து தாங்களும் அகதிச் சாமான் எடுக்கிறவையெல்லே.... அதைச் சொன்னன்....

சிதம்பரம்: அங்கை அப்பிடியில்லை பார்வதி.... எல்லாம் கொம்பியுட்டரிலை பதிஞ்சிடும்

பார்வதி: எல்லாம் கொம்பியுட்டர் பதியும்தான். ஆனால் ஆளின்ரை பெயரை மாறிப் பதிஞ்சால் எப்படிக் கொம்பியுட்டர் கண்டு பிடிக்கும்....

சிதம்பரம்: அப்ப ஆறுமுகம் அண்ணை.... அப்ப உப்பிடியான கள்ளங்களை கொம்பியுட்டர் கண்டு பிடிக்காதோ....

ஆறுமுகம்: அதுக்கும் இனி எங்கடை பெடியள் தான் ஏதாவது செய்ய வேணும்....

பார்வதி: காலம் காலமாய் களவெடுக்கிற கச்சேரிக்காறரையே பிடிக்கேலாமல் கிடக்குது... பேந்தெங்கை கொம்பியுட்டர் கள்ளம் பிடிக்கிறது....

ஆறுமுகம்: எங்கடை பெடியள் இந்தக் கச்சேரி சிஸ்ரத்திலை தான் வளந்தவங்கள்.... அப்ப அவங்களுக்கு கொம்பியுட்டரை ஏமாத்திறது சும்மா தண்ணி பட்ட பாடு....

பார்வதி: அப்ப நீங்கள் சொல்லுற மாதிரியைப் பாத்தால்.... உந்த நாடுகளிலை எங்கடை பிள்ளையள் ஒண்டும் எங்கடை பிள்ளையளாய் இல்லையெண்டு சொல்லுறியள்....

ஆறுமுகம்: அங்கை பெயர் மாத்தாத பிள்ளையள் குறைவு பார்வதி அக்கா....

பார்வதி: அப்ப நாங்கள் நாள் பார்த்து நட்சத்திரம் பார்த்து வைச்ச பெயரெல்லாத்தையும் அங்கை கொம்பியுட்டர் மாத்திப் போட்டுது எண்டு சொல்லுங்கோ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகம்: அது அந்த நேரத்துக்கு ஏத்தமாதிரி பிள்ளையள் தங்களுக்கு பெயர் மாத்திப் போடுங்கள்....

சிதம்பரம்: அது அந்தந்த நாட்டுக்கு ஏத்தமாதிரி நாங்கள் மாறிக் கொள்ள வேணும் கண்டியோ....

பார்வதி: அப்ப எங்கடை பிள்ளையளின்ரை பெயரெல்லாம் கொம்பியுட்டரைப் பொறுத்ததுதான் எண்டு சொல்லுங்கோ....
(ராஜன் வோர்க் மன் போட்டபடியும், ராஜி கியுலேற் போட்டபடியும் வரவேண்டும்)

பார்வதி: என்ன பிள்ளை போட்டுக் கொண்டு போன கவுணைக் காணேல்லை....

ராஜி: அதம்மா.... இதைப் போட்டுப் பார்க்கச் சொல்லி அறைக்குள்ளை விட்டவை.... போட்டுப் பார்த்தன்.... வடிவாய் இருந்தது.... பின்னைக் களட்டேல்லை.... அப்பிடியோ வந்திட்டன்.... வடிவாயில்லையே அம்மா....

பார்வதி: அப்ப போட்டுக் கொண்டு போன பாவாடையும் சட்டையும் எங்கை....

ராஜி: இஞ்சை பாக்குக்குள்ளை வைச்சிருக்கிறன்....

ராஜன்: (காதில் வோர்க் மன் போட்டுப் பாட்டுக் கேட்ட வண்ணம் நின்று டான்ஸ் ஆடுகிறான்....)

பார்வதி: ராஜன்.... நீ பாட்டுக் கேக்கிற மெசின் வாங்கப் போறன் எண்டாய். (பெலத்து) ராஜன்....

ராஜன்: (சைகை செய்கிறான்.... சொற்ப நேரத்தின் பின் களட்டி) என்னம்மா கேட்டனீங்கள்....

பார்வதி: பாட்டுக் கேக்கிற மெசின் வாங்கப் போறன் எண்டாய்.... எங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜன்: இந்தா இதுதான் அம்மா....

பார்வதி: எங்கை பாட்டுக் கேக்கயில்லை....

ராஜன்: இந்தா இதைக் காதிலை போட்டுக் கேளுங்கோ.... (தாயின் காதில் போட்டு விடுகிறான்)

பார்வதி: (காதிலை போட்ட பின்) களட்டடா.... இதை.... காது கன்னமெல்லாம் கிளிக்கிது.... சும்மா ஒரு ரேடியோவை வாங்கியிருந்தால் எல்லாரும் ஒண்டாய் இருந்து கேட்டிருக்கலாம்....

சிதம்பரம்: அது அந்தந்த நாட்டுக்குப் போனால் அந்தந்த இடத்திற்கு ஏத்த மாதிரித்தான் சீவிக்க வேணும்.... நீர் விடுமப்பா பிள்ளையை....

ராஜி: இஞ்சருங்கோ அம்மா உங்களுக்கும் ஒரு வ்றக்கும் ஒரு ரி சேட்டும் வாங்கி வந்தனான்....
(எடுத்துக் காட்டுகிறாள்)

பார்வதி: ஐயோ உதுகள் எல்லாம் ஏன் எனக்கு வாங்கி வந்தனி....

ஆறுமுகம்: (கொஞ்சம் வெறியுடன்) பார்வதி எங்கடை ஆக்கள் எல்லாம் எப்ப மாறப் போறியள்.... அங்கை பொம்பிளையள் எல்லாம் ஆம்பிளையளுக்குச் சரிசமனாய் நிக்குதுகள்.... நீங்கள் என்னெண்டால் இப்பவும் பன்னிரண்டு முழுச் சாறியைச் சுத்திச் சுத்திக் கட்டத்தான் நிக்கிறியள்....

சிதம்பரம்: ஓம் அப்பா நாங்கள் மாறத்தான் வேணும்.... இனி பிள்ளையும் வெளிநாட்டிலை இருக்குது.... பேந்து அதுகளுக்கு மதிப்பில்லைக் கண்டியோ

ஆறுமுகம்: அதுதானை சொன்னன் சிதம்பரம். என்ரை பேரப்பிள்ளையன் ஜேர்மன் பாஷையைத் தவிர வேறை ஒண்டும் பேசாதுகள்.... அதோடை இங்கிலீசு நல்லாப் பேசுங்கள்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வதி: அப்ப தமிழ்....

ஆறுமுகம்: அதுகள் என்னெண்டு தமிழ் பேசுங்கள்.... என்ரை மருமோள் சொல்லுறா.... மூண்டு பிள்ளையளும் பிறக்கேக்கையே மம்மி எண்டு சொல்லிக் கொண்டு தான் பிறந்ததுகளாம்.... அப்ப என்னெண்டு தமிழ் பேசுங்கள்....

சிதம்பரம்: (வெறியுடன்) அப்ப நீங்கள் என்னணண்டு சமாளிச்சியள் அண்ணை....

ஆறுமுகம்: நான் அதுகளிட்டை கேட்டுக்கேட்டு ஒரு மாதிரி இங்கிலிசு கதைக்கப் பழகிட்டன்....

பார்வதி: அப்ப நீங்கள் பேரப்பிள்ளையளிட்டை இங்கிலிசு கேட்டுப் படிச்சனிங்கள் எண்டு சொல்லுங்கோ....

ஆறுமுகம்: அதெங்கை பார்வதி மூண்டு பிள்ளையளையும் என்ரை பொறுப்பிலை விட்டிட்டு மகனும் மருமோளும், ஆளுக்கொரு காரிலை வேலைக்குப் போயிடுவினம். பின்ன நான்தான் பிள்ளையளைப் பார்த்தது....

சிதம்பரம்: பேரப்பிள்ளையள் இங்கிலீசு பேசினால் அது ஒரு சந்தோசம் தானையண்ணை.... அதைக் கேட்டுக் கொண்டே இருந்திடலாம்....

ஆறுமுகம்: ஓம் சிதம்பரம்.... குழல் இனிது யாழ் இனிது என்பர் தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்.... அதைப்போலை குழல் இனிது யாழ் இனிது என்பர் தன் பேரப்பிள்ளையள் இங்கிலீசு கேளாதவர்....

சிதம்பரம்: அதெண்டால் சரியாய்ச் சொன்னியள் அண்ணை....

பார்வதி: ஏன் இனி நிப்பாட்டிறதில்லையே.... சாப்பிட வேண்டாமே....

சிதம்பரம்: அண்ணை.... நீங்களும் இண்டைக்கு எங்களோடைதான் சாப்பிட வேணும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகம்: எனக்கு இப்ப இந்த யாழ்ப்பாணத்துச் சாப்பாடெல்லாம் பிடிக்காது சிதம்பரம் (கதவு தட்டும் சத்தம்)

சிதம்பரம்: அதார் இந்த நேரத்திலை....

பார்வதி: கதவு தட்டுற சத்தத்தைப் பார்த்தால் அவங்கள்தான் வந்திட்டாங்கள் போலை

ஆறுமுகம்: அதார்....... அவங்கள்...... எண்டால்.....

பார்வதி: அடிக்கடி இஞ்சை வந்து செக் பண்ணுறவங்கள்.... அவங்கள்தான் உப்பிடிச் சத்தமாய் தட்டுறாவங்கள்....

சிதம்பரம்: (கொஞ்சம் பயத்துடன்) பார்வதி உவன் சின்னவனை கட்டிலுக்கு கீழே போய் ஒழிக்கச் சொல்லு.... நீ சீலையை வடிவாய்க் கட்டிக் கொள்ளு.... சிலவேளை கமெராவோடையும் வருவாங்கள்....

ஆறுமுகம்: உந்த விசயம் எனக்குத் தெரியாமல் போச்சு....

பார்வதி: ஆறுமுகம் அண்ணை ஐடென்ரி காாட் கொண்டு வந்தனீங்களோ....

ஆறுமுகம்: என்னட்டை எங்காலை பிள்ளை ஐடென்ரி காட்.... பாஸ்போட் தான் வைச்சிருக்கிறன்....

ராஜி: அங்கிள் பொலிஸ் றிப்போட் வைச்சிருக்கிறியளோ....

ஆறுமுகம்: பொலிஸ் றிப்போட் கிடக்குது....

சிதம்பரம்: இஞ்சருமப்பா.... உவள் ராஜியையும் நல்ல சட்டை போட்டுக்கொண்டு நிக்கச் சொல்லும்....

பார்வதி: அது படம் பிடிக்கிறதெண்டால் விடியப்பறம் தான் வருவாங்கள் அப்பா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜி: அதேன் அப்பிடி விடியப்பறம் வாறவங்கள் அம்மா......

பார்வதி: அப்பதானை பொம்பிளையளை நைற்றியோடை படம் பிடிக்கலாம்....

ஆறுமுகம்: இதுகள் எல்லாம் கியுமன் றைற் வயலேசன் இதுக்கெல்லாம் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேணும்... ஐ.நா.சபையிலை முறையிட வேணும்

பார்வதி: என்னத்தையண்ணை சட்டப்படி..... நடவடிக்கை எடுக்கிறது. எல்லாம் படம்பிடிச்சு முடிஞ்சப்பிறகோ.... இஞ்சருங்கோ அவங்கள் வெளியிலை வரச் சொன்னாங்கள் எண்டால் நீங்கள் ஒண்டும் கதைக்கிறதில்லை.... நான் கதைப்பன்....

சிதம்பரம்: அது நான் கதைப்பன் அப்பா....

பார்வதி: வாயைத் திறந்த உடனை பிடிச்சிடுவாங்கள்.... நல்லாய் அடிச்சிட்டுத்தான் நிக்கிறார் எண்டு.....

ராஜி: ஓமம்மா.... அண்டைக்கு பேப்பரிலையும் வந்தது.... இப்ப யாழ்ப்பாணத்திலையிருந்து ஆக்கள் வந்த பிறகு குடிக்கிற ஆக்களின்ரை தொகை கொழும்பிலை கூடிப் போச்சுதாம்....

பார்வதி: நீ பேசாமல் இரு....

சிதம்பரம்: நீ உவன் சின்னவனை ஒழிக்கச் சொல்லன் அப்பா....

பார்வதி: அதப்பா.... யாழ்ப்பாணத்திலைதான் எல்லாத்துக்கும் பயந்து ஒழிக்கிறது....
இஞ்சை ஒழிக்கேலாது.... எல்லாற்றை பெயர்களும் பதிஞ்சிருக்கு.... பெயரைப்பாத்திட்டு எங்கை ராஜன் எண்டு கேட்டால் என்ன சொல்லுறது....

சிதம்பரம்: நீ என்னெண்டாலும் செய்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வதி: தம்பி ராஜன் உந்தக் காதிலை போட்டிருக்கிறதை களட்டி வைச்சிட்டு வா.... உதுகளைக் கண்டால் தான் அவங்களுக்கு ஏறுறது....

குரல் எல்லாரும் வெளியிலை வாருங்கோ.... நூம் எல்லாம் செக் பண்ணப் போறம்.

பார்வதி: இஞ்சை விடுங்கோ.... எல்லாத்தையும் ஒரு ஒதுக்குப் புறமாய் வைச்சிட்டுப் போவம்.... பிறகு அவங்கள் உள்ளை வந்து உதுகளைக் கண்டாங்கள் எண்டால் இன்னும் ஏறும்....

ராஜி: அம்மா நான் வெளியிலை போகட்டே....

பார்வதி: நீ தம்பியையும் கூட்டிக் கொண்டு போய் அங்கை மனேஜரின்ரை மேசைக்குப் பக்கத்திலை நில்லு....

சிதம்பரம்: அந்தப் போத்தலிலை மிஞ்சிக் கிடக்கிறதை ஊத்திப் போடாதை....

பார்வதி: சரி.... சரி.... நீங்கள் ஆறுமுகம் அண்ணையைக் கூட்டிக் கொண்டு வெளியிலை போங்கோ....

(சிதம்பரமும் ஆறுமுகம் வெளியில் போக .... சூட்கேசைத் திறந்து நகைகளை எடுத்துக் கொண்டு திரும்பிப் பார்த்த வண்ணம் பார்வதியும் வெளியே போகிறாள்.)

(ஒளி மங்கி காட்சி முடிவடைகிறது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி 5

(முகவர் தபால் நிலையம் மூன்று பேர் ஒன்றின்பின் ஒருவராக வந்து தொலைபேசி அழைப்பு எடுத்துவிட்டு செல்கிறார்கள். சிதம்பரம் கால்சட்டை போட்டு கண்ணாடியுடனும், பார்வதி அரைப் பாவாடை கட்டி மேற்சட்டையுடனும், ராஜி ஜீன்ஸ் கண்ணாடி, ராஜன் ரீசேர்ட் தலையில் வோர்க்மன் தொங்க முகவர் தபால் நிலையத்துள் நுழைகிறார்கள். சிதம்பரம் சாடையான வெறியில் வருகிறார்.)

பணியாளர்: (சிரித்த வண்ணம்) ஆ.... சிதம்பரம் அங்கிள் இல்லை வெள்ளைச் சிதம்பரம் அங்கிள் வாங்கோ.... என்ன மகளுக்கு கோல் எடுக்க வேணுமோ....

சிதம்பர: ஓம் பிள்ளை.... பார்த்தியே பார்வதி.... நான் வரவே பிள்ளையளுக்குத் தெரியும் மகளுக்குத்தான் கோல் எடுக்க வாறன் எண்டு....

பார்வதி: (கண்ணாடியைக் களட்டி....) ஓ இப்ப எத்தினை தரம் கோல் எடுத்துப் போட்டியள்.... பின்னை சிரிப்பாளவைதானை.... எவ்வளவு காசை ரெலிபோனுக்கெண்டு கொட்டிப் போட்டு நிக்கிறியள்....

சிதம்பரம்: ஏதோ நீ உழைச்ச காசு மாதிரி கத்திறாய்.... அவள் பெடிச்சி உழைச்சு அனுப்புறாள்.... தாய் தகப்பன் சந்தோசமாய் இருக்கட்டுமெண்டு, சும்மாயிரப்பா....

பார்வதி: முந்திபெண்டால் இரவிலைதான் எடுத்துப் போட்டு வருவியள்.... இப்ப என்னடாவெண்டால் எந்த நேரமும் வெறிதான்.... அதுகளுக்குக் கிட்ட போகாதேங்கோ.... மணக்கப் போகுது....

ராஜன்: (தலையில் வோக்மன் போட்டிருப்பதால் இவையொன்றையும் கவனிக்காமல் பாட்டைக் கேட்ட வண்ணம் டான்ஸ் ஆடிக் கொணடிருக்கிறான்)

ராஜி: (ஹான்ட்பாக்கில் இருந்து கண்ணாடியை எடுத்துப் பார்த்து லிப்ஸ்டிக் பூசிக் கொண்டிருக்கிறாள். ராஜன் அவள் அருகில் சென்று கண்ணாடியை வாங்கிப் பார்க்கிறான். அவள் சிணுங்குகிறாள்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வதி: ராஜன் சும்மாயிருக்க மாட்டியே.... தங்கச்சி இங்கை எயர் கொண்டிசன் வேலை செய்யிறதில்லையே.... சரியாய் வேர்க்குது....

ராஜி: அம்மா.... எயர் கொண்டிசன் உடைஞ்சு போச்சுது போலை.... அதுதான் இந்த வெயிலுக்குள்ளாலை வெளியிலை வராமல் அங்கையே ஹோட்டலிலையே கோல் எடுப்பம் எண்டு சொன்னன்.... கேட்டியளே....

பார்வதி: அங்கை சரியான றேற் பிள்ளை....

ராஜி: என்ன றேற் .... ஒரு நிமிசத்துக்கு ஆகக் கூட ஒரு நூறு ரூபா தானை....

பார்வதி: நூறு ரூபா எண்டாலும் காசெல்லே....

ராஜி: உனக்கென்னம்மா.... விசரே.... அக்கா காசனுப்புறா.... எங்களை கவலைப்படாமல் சந்தோசமாய் இருக்கச் சொல்லி.... நீ.... சும்மாய் எப்பவும் மூக்காலை அழுதபடி.... பேசாமல் இரம்மா.... (லிப்ஸ்ரிக்கை எடுத்து பின்னரும் கண்ணாடியைப் பார்த்துப் பூசுகிறாள். இந்த நேரம் இராசம்மா உள்ளுக்குள் வருகிறார்)

பணியாளர்: யேஸ் அன்ரி....

இராசம்மா: இந்தா பிள்ளை.... இந்த நம்பருக்கு ஒரு கோல் எடுத்துச் சொல்லி விடு.... அம்மா வந்து நிக்கிறா எண்டு....

பணியாளர்: சரியன்ரி.... நீங்கள் அதிலை போய் இருங்கோ.... (இராசம்மா பார்வதிக்குப் பக்கத்தில் வந்து உட்காருகிறாள்.... பார்வதி சற்று வெறுப்பாக பார்த்து தள்ளி உட்காருகிறாள்.)

ராஜி: அம்மா தள்ளி இருங்கோ.... இதேன் இந்தக் கிழடுகள் எல்லாம் கொழும்புக்கு வந்து எங்கடை மானத்தை வாங்குதுகளோ தெரியேல்லை.... பாரன் பிளவுசையும் சாறியையும்....

பார்வதி: (ஆளையாள் பார்த்து இராசம்மாவையும் பார்க்கிறார்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசம்மா: பிள்ளை நீங்கள் யாழ்ப்பாணமோ....

பார்வதி: ஓம் அன்ரி....

இராசம்மா: யாழ்ப்பாணம் எவ்விடம் பிள்ளை....

பார்வதி: கொடிகாமம்....

இராசம்மா: கொடிகாமத்திலை எவ்விடம்....

பார்வதி: சந்தைக்கு பின்னாலை போற றோட்டிலை கொஞ்ச தூரம் போக வேணும்.

இராசம்மா: கன தூரமோ....

பார்வதி: இல்லை ஒரு கிலோ மீற்றர் வரையிலை போகவேணும்.

இராசம்மா: அப்ப அந்த பிலாமரத்தடிச் சந்திக்கு கிட்டவோ....

பார்வதி: அந்தச் சந்தியிலை வாற முதல் வீடுதான் எங்கடை வீடு.... அந்த இடம் உங்களுக்கென்னெண்டு தெரியும்.... நீங்கள் எவ்விடம்.

இராசம்மா: நாங்கள் நல்லூரடி....

பார்வதி: நல்லூரடியிலை எவ்விடம்

இராசம்மா: சட்டநாதர் றோட்டாலை உள்ளுக்கை போகவேணும்

பார்வதி: கனதூரமோ....

இராசம்மா: கொஞ்சதூரம் போக வேணும்.... அதாலை போக ஒரு பிள்ளையார் கோயில் சந்தி வருகிது.... அதிலையிருந்து மூன்றாவது வீடு....

பார்வதி: அதுக்குள்ளை எங்கடையாக்களும் கலியாணம் முடிச்சிருக்கினம்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசம்மா: என்ரை அவரும் கொடிகாமந்தான்.... ஆனால் அவர் கொடிகாமம் கிழக்கு இளையதம்பி எண்டு பேர்....

பார்வதி: இப்ப ஏன் கொழும்புக்கு வந்தனீங்கள்....

இராசம்மா: என்ரை அவர் செத்துப் போனார்.... அதை பிள்ளையளுக்கு சொல்லிப்போட்டு போக வந்தனான்....

பார்வதி: சொல்லிப் போட்டியளே....

இராசம்மா: சொல்லிப்போட்டன்.... இப்ப பிளேனுக்கு ரிக்கற் புக் பண்ணி வைச்சிருந்தனான்.... நேற்றைப் பேப்பரிலை என்ரை பெயரும் வந்திருக்கிது.... அதுதான் பிள்ளையளுக்கு சொல்லிப் போட்டுப் போக வந்தனான்...

பார்வதி: ஊரிலை பிள்ளையள் ஒண்டும் இல்லையோ....

இராசம்மா: எல்லாப் பிள்ளையளும் வெளியிலை.... நான் மட்டும் தான் தனிய....

பார்வதி: அப்ப அங்கை போய் என்ன செய்ய போறியள்.... பேசாமல் இங்கேயே இருங்கோவன்....

இராசம்மா: எனக்கு இங்கை இருக்கேலாது பிள்ளை.... என்ரை மண்ணிலை போய் நடந்து திரிய வேணும்.... அப்பத்தான் என்ரை மனம் ஆறும்....

பார்வதி: ஏதோ என்ரை பிள்ளையின்ரை ஆறுதலுக்காக எங்களுக்கு பிணைக்கு கையெழுத்து வைச்ச ஆக்களையும் மறந்து போட்டு நாங்கள் இப்ப இங்கை வந்து ஒரு வருஷமாச்சு.... எனக்கெண்டால் இனி அங்கை போய் இருக்கேலாது....

ராஜி: அம்மா உங்களுக்கு வேணும் எண்டால் நீங்கள் அங்கை போய் இருங்கோ.... நான் இங்கையிருப்பன், இல்லாட்டில் அக்காவோடை அங்கை போயிருப்பன்.... எனக்கெண்டால் யாழ்ப்பாணம் போய் இருக்கேலாது....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜன்: அம்மா நானும் இனி யாழ்ப்பாணம் போக மாட்டன்....

சிதம்பரம்: இனி என்னெண்டப்பா அங்கைபோய் இருக்கிறது.... பேசாமல் இங்கையே இருப்பம்....

பார்வதி: நீங்களும் பேசாமல் இங்கையே இருக்கப் பாருங்கோ....

இராசம்மா: ஆர் என்னத்தைச் சொன்னாலும் எனக்கு அங்கையிருக்கிற நிம்மதி, சுதந்திரம் இங்கையில்லை.... அதுதான் அங்கை போகப் போறன்....

பணியாளர்: அன்ரி உங்கடை மகனின்ரை கோல் வந்திருக்கு முதலாம் நம்பர் கூட்டுக்குள்ளை போங்கோ....

இராசம்மா: சரி பிள்ளை.... (எழும்பிப் போகிறார்)

பார்வதி: பாத்தியளேயப்பா இந்த வயசு போன காலத்திலையும் அங்கை போயிருக்கத்தான் சனம் விரும்புது....

சிதம்பரம்: சும்மா மனத்தை அலை பாய விடாதை.... அங்கை போய் என்ன செய்யிறது....

பார்வதி: அதெண்டால் சரி.... இஞ்சை காலமையும் பின்னேரமும் மூக்கு முட்ட குடிச்சுப் போட்டு அந்த றூம் வழிய இருக்கிற ஆக்களோடை கும்மாளம் போடலாம்தானை.... உங்களுக்கு ஒரு குமர்ப்பிள்ளை இருக்குது எண்டதையும் மறந்து போனியள்....

சிதம்பரம்: இஞ்சை சன்னதம் ஆடாதை எல்லாம் அவள் பார்த்துக் கொள்ளுவாள்....
(இப்போது இராசம்மா கதைக்கும் ஒலி வரவேண்டும். மறுமுனையில் கண்ணன்)

இராசம்மா: தம்பி எனக்கு பிளேனிலை போறதுக்கு பெயர் பேப்பரிலை வந்திருக்கு .... நாளைக்கு போய் ரிக்கற் எடுத்துக் கொண்டு போயிடுவன்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணன்: அம்மா கவனமாய் போய்ச் சேருங்கோ.... கடிதம் போடுங்கோ.

இராசம்மா: கடிதம் போட்டாலும் வருமோ தெரியாது தம்பி.... எதுக்கும் நீங்கள் சுகமாய் இருந்தால் காணும்.....

கண்ணன்: உங்களுக்குத் தேவையெண்டால் இன்னும் கொஞ்சம் காசு அனுப்புறன்.

இராசம்மா: எனக்கு இப்ப அனுப்பின காசு போதும் தம்பி.... அப்ப நான் போயிட்டு வாறன்....

கண்ணன்: சரியம்மா....

(இராசம்மா ரெலிபோனை வைத்துவிட்டு வெளியே வருகிறாள்)

பணியாளர்: அம்மா.... எல்லாமாய் 250 ரூபா....

இராசம்மா: இந்தாரும்பிள்ளை.... அப்ப நான் போயிடடு வரட்டே .... பிறகு யாழ்ப்பாணம் வந்தால் சந்திப்பம்.....

பார்வதி: நாங்கள் இனியெங்கை யாழ்ப்பாணம் வரப்போறம்.... சுகமாய் போயிட்டு வாங்கோ அன்ரி....

பணியாளர்: அன்ரி உங்கடை கோல் வந்திருக்கு.... அந்தக் கூண்டுக்குள்ளை போங்கோ

பார்வதி: (கண்ணாடியைக் களட்டிக் கொண்டு கூட்டுக்குள் போகிறாள் ரெலிபோன் மறுபகுதியில் மகள் அழுது கொண்டிருக்கிறாள்)

பார்வதி: ஹலோ.... ஹலோ .... (வெளியே திரும்பி) என்னப்பா ஒரு சத்தத்தையும் காணேல்லை....

சிதம்பரம்: இஞ்சை கொண்டு வா.... நான் கதைக்கிறன்.... ஹலோ .... ஹலோ....

கௌரி: அப்பா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதம்பரம்: ஹலோ.... கெளரியே பேசுறது.... என்ன சத்தம் ஒண்டையும் காணேல்லை....



கௌரி: (அழுகிறாள்)

சிதம்பரம்: ஏன் பிள்ளை அழுகிறாய்....

கௌரி: (அழுகிறாள்)

சிதம்பரம்: இஞ்சருமப்பா.... பிள்ளை அழுற சத்தந்தான் கேட்குது.... ஒண்டும் பேசுறாள் இல்லை....

பார்வதி: இஞ்சை கொண்டு வாங்கோ நான் பேசுறன்.... கௌரி.... பிள்ளை ஏன் பிள்ளை அழுறாய்....

கௌரி: அதை என்னண்டு அம்மா சொல்லுவன்....

பார்வதி: என்னண்டாலும் சொல்லு பிள்ளை.... ஏன் அவர் பேசினவரே....

கௌரி: ஓமம்மா.... சேர்த்த காசெல்லாத்தையும் நான் உங்களுக்கும், அவர் தன்ரை தகப்பனுக்கும் அனுப்பிப்போட்டு இப்ப செலவுக்கு காசில்லாமல் கஷ்டப்படப்போறமாம்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வதி: ஏன் பிள்ளை என்ன நடந்தது....

கௌரி: அதம்மா.... எங்கடை விசாவை அவங்கள் எக்ஸ்ரண்ட் பண்ணேல்லையாம்.... எங்களையெல்லாம் ஸ்ரீ லங்காவுக்கு திருப்பி அனுப்பப் போறாங்களாம்....

பார்வதி: என்ன .... திருப்பி அனுப்பப் போறாங்களாமோ....

கௌரி: ஓமம்மா....

பார்வதி: எப்பவாம் பிள்ளை....

கௌரி: அம்மா எங்கடை வழக்கு நடந்து கொண்டிருந்தது .... அதுக்கு நேற்றைக்குத்தான் தீர்ப்புச் சொல்லியிருக்கிறாங்கள்....

பார்வதி.... நீ என்ன பிள்ளை குண்டை தூக்கிப் போடுறாய்.... இஞ்சருங்கோ அப்பா.... பிள்ளையை திருப்பி அனுப்பப் போறாங்களாம்....

சிதம்பரம்.... என்ன திருப்பி அனுப்பப் போகினமாமோ.... அவையளாலை அது முடியுமோ.... இஞ்சை கொண்டு வா ரெலிபோனை.... ஹலோ பிள்ளை அப்பீல் பண்ணிப் பார்க்க முடியாதோ....

கௌரி: மூண்டு தரம் அப்பீல் பண்ணிப் பார்த்திட்டம்.... ஒண்டும் சரி வரேல்லை. அவங்கள் உடனடியாய் நாட்டை விட்டுப் போகச் சொல்லி நிக்கிறாங்கள்....

சிதம்பரம்: போக மாட்டம் எண்டால் என்ன செய்வினம் பிள்ளை....

கௌரி: இந்த நாட்டுச் சட்டத்தின்படி நாங்கள் போகாட்டில் எங்களை மறியலிலை போட்டிடுவாங்கள் அப்பா....

சிதம்பரம்: மறியலிலை.... அப்பிடியே பிள்ளை....

பார்வதி: (கூண்டுக்கு வெளியேயிருந்து) என்னவாமப்பா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதம்பரம்: நாட்டை விட்டுப் போகாட்டில் அதுகளைத் தூக்கி மறியலிலை போட்டிடுவாங்களாம்....

பார்வதி: இஞ்சை தாங்கோ.... நான் ஒருக்காப் பிள்ளையோடை கதைக்கிறன்.... ஹலோ.... பிள்ளை.... அப்பா சொல்றதெல்லாம் உண்மையே பிள்ளை....

கௌரி: ஓமம்மா.... எனக்கு என்ன செய்யிறதெண்டே தெரியேல்லை....

பார்வதி: அப்ப நாங்கள் இனி என்ன செய்கிறது பிள்ளை

கௌரி: அம்மா.... நாங்கள் என்ன செய்யிறதெண்டு தெரியாமல் நிக்கிறம்.... நீங்கள் என்னைக் கேட்டால்....

பார்வதி: அதுதானை பிள்ளை இருக்கிறதையும் விட்டிட்டு கொழும்புக்கு வந்தம்.... இப்ப என்ன செய்யிறது எண்டு தெரியாமல் திணறிறம்.... இஞ்சருங்கோ அப்பா நீங்கள் தான் கதைச்சு ஏதாவது ஒரு முடிவு எடுங்கோ....

சிதம்பரம்: (ரெலிபோனை வாங்கி) ஹலோ.... எங்களை இப்ப என்ன செய்யச் சொல்லுறாய் பிள்ளை....

கௌரி: அப்பா.... இவர் சொல்லுறார் உங்களை யாழ்ப்பாணம் போய் இருக்கட்டாம்.

சிதம்பரம்: என்ன எங்களை யாழ்ப்பாணம் போயிருக்கட்டாமோ....

ராஜி: (வெளியில் நின்று) அம்மா.... என்னவாம் அக்கா....

பார்வதி: அக்காவைத் திருப்பி அனுப்பப் போறாங்களாம்....

ராஜி: அப்ப நாங்கள்....

ராஜன்: அப்ப நாங்கள் என்ன செய்யிறதம்மா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வதி: கொஞ்சம் பொறு. அப்பா அக்காவோடை கதைக்கிறார் என்னெண்டு கேட்பம்....

சிதம்பரம்: அப்ப பிள்ளை கடைசியாய் உன்ரை அவர் என்ன சொன்னவர்....

கௌரி: உங்களை யாழ்ப்பாணம் போயிருக்கட்டாம்.... நாங்கள் வேறை நாட்டுக்கு எங்கையாவது போக முடிஞ்சால் போறம்.... இல்லையெண்டால் எங்கையாவது ஒரு அகதி முகாமிலை தஞ்சம் கோருவம் எண்டு சொன்னார்....

சிதம்பரம்: அப்ப நீங்களும் வேறையொரு நாட்டுக்கு அகதியாய் போகப் போறியளே....

கௌரி: ஓமப்பா....

சிதம்பரம்: அப்ப பிள்ளை நான் வைக்கட்டே.....

கௌரி: சரியப்பா.... அம்மாவிட்டையும் சொல்லுங்கோ.... தம்பி ராஜன், தங்கச்சி ராஜியிட்டையும் சொல்லுங்கோ....

சிதம்பரம்: ஓம் பிள்ளை .... (ரெலிபோனை வைத்து விட்டு வெளியே வருகிறார்)

பார்வதி: என்னவாம் அப்பா....

சிதம்பரம்: எங்களை யாழ்ப்பாணம் போகட்டாம்....

மூவரும்: என்ன யாழ்ப்பாணம் போகட்டாமோ....
(அனைவரும் திகைத்து நிற்க....)

பணியாளர்: அங்கிள் எல்லாமாய் 500/= ரூபா காசு கட்ட வேணும்....
(ஒருவரும் பேசாமல் நிற்க) அங்கிள் 500/= ரூபா கட்ட வேணும்....

சிதம்பரம்: (திடுக்கிட்டு திரும்பி) என்ன பிள்ளை சொன்னனி....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாளர்: 500/= ரூபா கட்ட வேணும்....

சிதம்பரம்: இந்தா பிள்ளை.... வாருங்கோ போவம்....

ராஜி: (சிணுங்கலுடன்) அம்மா நான் கொழும்பிலை தான்....இருக்கப் போறன்....

பார்வதி: (சத்தமாய்) பொத்தடி வாயை. இனி நீங்களெல்லாம் வாய் திறக்கப்படாது.... யாழ்ப்பாணம் வந்துதான் வாய் திறக்க வேணும்.

ராஜன்: அப்பா நான்.... அக்காவிட்டை....

சிதம்பரம்: பேசாமல் வாடா .... இனி அக்காவிட்டை போறதில்லை.... அதுகளே அங்கை அகதி வாழ்க்கை வாழுதுகள்....

பார்வதி: வாடா.... நீயும் யாழ்ப்பாணம் போகும் வரைக்கும் வாய் திறக்கப்படாது....
(மூவரும் வெளியேறுவதுபோல சிலையாய் நிற்க ஒளி மங்குகிறது)

**குரல்: இந்தத் தரை தட்டிய மீன்கள் எப்போது சுதந்திரமாகத் தண்ணீரில் நீந்தப் போகின்றன!**

குறிப்பு: கலைஞர்களின் தொகையைப் பொறுத்து வேறும் சிலரை முகவர் தபால் நிலையத்திற்கு வந்து போகச் செய்யலாம்.... )

முற்றும்

## "தரை தட்டிய மீன்கள்"

இலங்கைத் தமிழ் நாடக மன்றம்.
யாழ் / இந்து மகளிர் கல்லூரி அபிவிருத்தி நிதிக்காக மேடையேற்றப்பட்டது.

இடம்: கொழும்பு / சரஸ்வதி மண்டபம்

காலம்: 30.06.1998



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

<u>பங்குபற்றியோர்</u>

| | | | |
|---|---|---|---|
| சிதம்பரம் | : ஆர். யோகராஜன் | பார்வதி | : ஏ.எம்.சி.ஜெயஜோதி |
| நாகம்மா | : சுதர்சினி சிவரதன் | இராசம்மா | : விஜயாள் பீற்றர் |
| சம்பந்தி | : பெல்ப்ஸ் ஜெகநாதன் | புரோக்கர் | : ஆர். ரவீந்திரன் |
| கௌரி | : சத்திய செல்வி | கண்ணன் | : ஏ.ஆர். வாமலோசனன் |
| ஆறுமுகம் | : அருணா செல்லத்துரை | ராஜி | : கோபிகா சுவாமிநாதன் |
| ராஜன் | : ஏ.ஆர்.மயூரன் | தபால் நிலைய ஊழியர் | : வி.வினோபா |

மேடையமைப்பு : திரு. கே. கதிர்காமத்தம்பி (தம்பி)

நெறியாள்கை : அருணா செல்லத்துரை

26–06–1998 வீரகேசரிப் பத்திரிகையில் வெளிவந்த "தரை தட்டிய மீன்கள்" நாடகம் பற்றிய கருத்து

## தரை தட்டிய மீன்கள் (நாடகம்)

யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கக் கொழும்புக்கிளை, கல்லூரி அபிவிருத்திக்கென தரைதட்டிய மீன்கள் என்னும் சமூகநாடகத்தை 30.6.98 அன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் மேடையேற்றினார்கள்.

கலைஞரும் எழுத்தாளருமான அருணா செல்லத்துரையின் கதை வசனம், நெறியாள்கையில் மேடையேறிய இந்நாடகம் யாழ் மக்களின் இன்றைய அவலங்களை தொட்டுக் காட்டுபவையாக அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இளைஞர்கள் வெளிநாடுகளுக்கு இடம் பெயர்ந்துவிட்ட நிலையில் மணமகளை அங்கு மாப்பிள்ளையிடம் அனுப்பும் ஒருகட்டமாக சீதனப் பணத்தை எண்ணி வாங்கிக் கொண்டு மணமகனில்லாமல் மணமகள் தாலி கட்டிக் கொள்வது, பெண்ணை வெளிநாட்டுக்கு அனுப்புவது, யாழ்ப்பாணப் பெற்றோர் கொழும்பில் வந்து லொட்ஜில் தங்கியிருப்பது, தொடர்பைக் கொண்டிருக்கும் வகையில் தினமும் பிள்ளைகளுடன் தொலைபேசியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசிக் கொள்வது, வெளிநாட்டில் இருந்து வரும் பணத்தை ஆடம்பரமாகச் செலவழிப்பதுடன் நாகரீக மோகத்துக்கும் ஆட்படுவது பின்னர் ஏமாற்றத்துடன் வீடு திரும்புவது, பிரிவுத் துயரங்கள் போன்ற பல்வேறு பிரச்சினைகளையும் இந்நாடகம் பிரதிபலிக்கின்றபோது கூடவே பொருத்தமாக நகைச் சுவை உணர்வையும் வெளிப்படுத்தியது இதன் சிறப்பம்சமாகும்.

"உவ்விடம் (யாழ்ப்பாணத்தில்) உங்களுக்கு ஒருவரும் இல்லைத் தானேயம்மா. அப்பாவும் போயிட்டார். நீங்கள் இனி இஞ்சை வாருங்கோ" என்று வெளிநாட்டிலிருந்து அழைக்கும் மகனுக்கு கொம்யுனிக்கேஷனில் ஒரு வயோதிபத் தாய் "ராசா எங்கடை மண்ணைவிட்டு நான் எங்கையும் வரமாட்டன்" என்கிற வார்த்தைகள் ஞாபகத்தில் நிற்கக்கூடியவை. பிரபல வானொலி நடிகர்களான ஆர்.யோகராஜன், ஏ.எம்.சி.ஜெயஜோதி, அருணா செல்லத்துரை, ரவீந்திரன், விஜயாள் பீற்றர் ஆகியோர் பங்கு கொண்டு தத்தம் பாத்திரங்களை உணர்ந்து நடித்தார்கள். மிகையில்லாத நடிப்பு ரசிக்கும்படியாக இருந்தது.

கொம்யூனிக்கேஷனை மேடையமைப்புக் கலைஞர் கதிர்காமத்தம்பி மேடைக்கே கொண்டு வந்து விட்டார் சபாஷ்.

மொத்தத்தில் ரசிக்கும்படியான நாடகம் "தரை தட்டிய மீன்கள்"

"லக்ஷ்மி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன நாரதர்

(மேடை / வானொலி நாடகம்)

(திரை மூடப்பட்டுள்ளது)

ஒலி: வெடிச் சத்தங்கள் கேட்ட வண்ணம் இருக்கின்றன. விமானங்கள் பறக்கும் ஒலி, மனித ஓலங்கள் ஆகியன கேட்க வேண்டும். பின்னர் இந்த ஒலிகள் குறைய சோக இசை தொடர வேண்டும். வாகனங்கள் ஒலியும், நகர நெரிசல்களை வெளிக்காட்டு ஒலிகளும் சேரவேண்டும்.

(திரை விலகுகிறது)

மேடையில்: (நாரதரும் சித்திர குப்தரும் தேவலோக மற்றும் நாகரீக உடைகளுடன் கொழும்பு வீதியில் நடந்து வரல்.... கார்கள் வாகனங்கள் அவர்களை விலத்திச் செல்வது போல் பாவனை செய்ய வேண்டும். பின்னர் ஒரு பக்கமாக வந்து நின்று....)

நாரதர்: சித்திர குப்தா....

சித்திர: நாரதரே....

நாரதர்: சித்திர குப்தா உம்மிடம் இருக்கும் குறிப்புப் புத்தகத்திலுள்ள இடத்திற்குத்தான் வந்திருக்கிறோமா அல்லது வேறு ஏதாவது இயந்திர நாட்டிற்கு வந்திருக்கிறோமா.....

சித்திரகுப்தர்: நாரதரே நாங்கள் இப்போது பூலோகத்திற்குத்தான் வந்திருக்கிறோம்.... நான் வரும்போதே சொன்னேன்.... நாங்கள் மனிதரைப் போலல்லாமல் வேறுவடிவத்தில் மறைந்திருந்து இங்கு நடப்பவற்றை பார்ப்போம் எனக் கூறினேன் நீங்கள் கேட்கவில்லை.... நீங்கள் மனிதரைப் போல் வேடமணிந்துதான் வரவேண்டும் எனக் கூறினீர்கள்.... அதனால் தான் இவ்வளவு சிக்கலும்.... நான் சொன்னதைக் கேட்டிருந்தால் இவ்வளவு வாகனங்களுக்குள் நாம் சிக்கியிருக்க வேண்டிய தேவையில்லை....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாரதர்: சரி.... சரி.... இனி வந்தாயிற்று .... யமனுடன் பந்தயம் போட்டு விட்டு வந்திருக்கிறேன்....

சித்திரகுப்தர்: என்ன பந்தயம் போட்டிருக்கிறீர்கள் பிரபு....

நாரதர்: பூலோகத்தில் இவ்வளவு தொகை தொகையாக மனிதர்களின் உயிர்களை யமனால் கொண்டு வர முடிகிறதே.... அது எந்த நாட்டில் என்று வரிசைப்படுத்திக் கூறு என்று கேட்டேன்....

சித்திரகுப்தார்: வரிசைப்படுத்திக் கூறியிருப்பாரே....

நாரதர்: ஆமாம் முதலில் நிற்பது இலங்கைதான் என்று கூறினார்... அதனால் நான் இலங்கை சென்று அங்கு எப்படி உயிரழிவைக் குறைக்கலாம் என்பதைப் பார்த்து வருவதாக கூறினேன்.... போறதுதான் போகிறீர்கள்....
சித்திர குப்தரையும் அழைத்துச் செல்லுங்கள், அவர் புத்தகத்தைப் பார்த்துச் சொல்லுவார்.... முடியுமென்றால் அவர் சொல்லும் உயிர்களையும் உங்களோடு.... அழைத்து வாருங்கள் எனக் கூறினார்....
(இடை இடையே வாகனங்களுக்கு விலத்துவது போலவும் மனிதர்களுடன் இடிபடுவது போலவும் பாவனை செய்ய வேண்டும்....)

சித்திரகுப்தர்: நாரதரே நீங்கள் அப்படியா செய்யப் போகிறீர்கள்....

நாரதர்: என்னை என்ன யமன் என்றா நினைத்துக் கொண்டீர்.... நான் உயிர்களை பலி எடுப்பவனல்ல.... அவர்களுக்கு நல்ல அறிவுரைகள் சொல்லி.... அவர்களைத் திருத்தி விட்டு நீண்டகாலம் ஒற்றுமையாய் சந்தோஷமாய் உயிர் வாழ வழி செய்யப் போகிறேன்.

சித்திர குப்தர்: அதற்காகத்தான் ஏடுகளையும் கொண்டு போகும்படி யமன் என்னிடம் கூறியிருக்கிறார் என்று நினைக்கிறேன்....

நாரதர்: அது.... அந்த ஏடுகளையும் கொண்டு வந்திருக்கிறீரா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திர குப்தர்: நாரதரே நான் மறப்பேனா.... அந்த ஏட்டுப் பிரதிகளை அப்படியே கொண்டு வந்தால் இங்கே மனிதர்கள் பறித்து விட்டார்களென்றால் பிறகு நான் என்ன செய்வது.... அதனால் அந்த ஏட்டிலுள்ள பெயர்களையெல்லாம் போட்டோக் கொப்பி எடுத்துக் கொண்டு வந்துள்ளேன்....
(கொப்பியை எடுத்துக் காட்டுகிறார்.... நாரதர் அந்தக் கொப்பியை வாங்கிப் பார்த்துவிட்டு....)

நாரதர்: அதோ அதில் ஒரு மனிதன் தாடி வளர்த்து, தலைமுடியை பின்னால் முடிந்த வண்ணம் வருகிறாரே.... அவரின் பெயர் என்ன விபரத்தைப் பார்த்து அவரின்ரை பலனைச் சொல்லும் பார்ப்போம் (கொப்பியைக் கொடுக்கிறார்)

சித்திரகுப்தர்: நாரதரே அவர்தான் மைனர்.... சங்கர்....

நாரதர்: அவர் தொழில்....

சித்திர குப்தர்: பெண்களைப் பார்த்து சைற் அடிப்பது.... பிற்பொக்கற் அடிப்பது.

நாரதர்: அதென்ன சைற் அடிப்பது எண்டால்.... பிற்பொக்கற் அடிப்பது என்றால்

சித்திர குப்தர்: பள்ளிக் கூடம் விட்டு பெட்டையள் போகேக்கை.... றோட்டுக்குப் பக்கத்திலை நிண்டு பெட்டையளைப் பார்த்து கண்ணடிக்கிறது.... (மைனர்.... மேடையின் அருகில் வந்து நிற்றல்)....

நாரதர்: அதுக்குப் பேர் சைற் அடிக்கிறது.... அது சரி பிற்பொக்கற் அடிக்கிறது என்டால் அதெப்படி....

சித்திரகுப்தர்: அது கொஞ்ச நேரம் நிண்டு பார்த்தியள் எண்டால் தெரியும்....

நாரதர்: அதென்ன ஏதாவது கரணம் அடிக்கப் போறாரா....

சித்திரகுப்தர்: உங்கடை காற்சட்டைப் பொக்கற்றுக்குள்ளை இருக்கிற காசை உங்களுக்குத் தெரியாமல் எடுக்கிற வித்தை....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாரதர்: அப்பிடியொரு வித்தையும் இங்கையிருக்கோ....
(மைனர் வந்து நாரதரை இடித்து விலத்திக் கொண்டு செல்கிறார். பின்னர் பேர்சை ஒன்றை பார்த்த வண்ணம் செல்ல)

நாரதர்: என்ன இவன் என்னை இடித்துக் கொண்டு போறான்....

சித்திரகுப்தர்: (அருகில் வந்து).... உங்களுடைய காற்சட்டைப் பொக்கற்றுக்குள்ளை இருந்த பேர்சை அவன் எடுத்துப் போட்டான்....

நாரதர்: என்ன எடுத்துப் போட்டனோ.... (திரும்பிப் பார்க்கிறார் அவன் காசு எண்ணிய வண்ணம் நிக்கிறான்)

நாரதர்: (அருகில் சென்று) .... தம்பி இது என்ரை பேர்ஸ்....

மைனர் சங்கர்:இது உங்கடை பேர்ஸ்.... ஆ....ஆ....(சிரித்தல்) இது உங்கடை பேர்ஸ்....ஆ.... (காசை எடுத்துவிட்டு பேர்சைக் கொடுக்கிறான்.)

நாரதர்: அந்தக் காசும் என்ரை காசுதான்....

மைனர் சங்கர்: (துள்ளிக் குதித்து) என்ன உம்மடை பேர்ஸ் எண்டீர், தந்தன்.... பிறகு பார்த்தால்.... உம்மடை காசெண்டு சொல்லுறீர் அது சரியில்லை மச்சான்.... சரியோ....

நாரதர்: காசை என்ரை பேர்சுக்குள்ளை இருந்துதானை எடுத்தனீர்....

மைனர் மச்சான்: ஒ.... உம்மடை பேர்சுக்குள்ளை இருந்துதான் எடுத்தனான் .... நீர் உம்மடை பேர்ஸ் எண்டு மட்டும் தானை முதலிலை சொன்னனீர்....

நாரதர்: அது தம்பி.... பேர்ஸ் என்ரை எண்டுதான் சொன்னனான்.... நான் நினைச்சன்.... பேர்ஸ் எண்டால் காசையும் சேத்துத்தானாக்கும் எண்டு....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைனர் மச்சான்: ஆ....ஆ....(சிரித்தல்) அதெல்லாம் வேறை இடத்திலைதான் உந்தக் கதையைவிட வேணும்.... இந்த மைனர் மச்சான் ஒருக்காச் சொன்னால் அது நூறு தரம் சொன்னதுக்குச் சரி....

நாரதர்: இதென்னப்பா சித்திரகுப்தா.... ஒருக்காச் சொன்னால் நூறுதரம் சொன்னதுக்குச் சரியெண்டு சொல்லுறான் அப்பிடியொண்டு இங்கையிருக்கோ....

சித்திரகுப்தர்: நாரதரே நாங்கள் பிழையான ஆளிலை அகப்பட்டுப் போனம் போலை கிடக்கு தப்பிப் போயிடுவம்....

மைனர் மச்சான்: (கவனமாகப் பார்த்து விட்டு கண்ணடிக்கிறான்).... அது சரி உங்களைப் பார்த்தால் ரவுணுக்குப் புதுசு போலை கிடக்கு.... எங்கை உங்கடை ஐடென்ரிக் கார்ட்டையும் பொலிஸ் பதிவையும் எடுங்கோ பார்ப்பம்.

நாரதர்: இதென்னடா புதுக் கரைச்சலாய்க் கிடக்கு.... சித்திர குப்தரே உந்தக் கொப்பியைத்தான் கேட்கிறான் போலை கிடக்கு குடும் என்ன செய்யிறான் எண்டு பார்ப்பம்....
(சித்திர குப்தர் கொப்பியைக் குடுக்க மைனர் மச்சான் வாங்கி விரித்துப் பார்க்கிறான்)

மைனர் மச்சான்: இதென்னடா ஐடென்ரிக் காட்டைக் கேட்க கொப்பியைத் தாறாங்கள். சிலவேளை வெசாக்கிற்கு காசு சேக்கிறவங்களோ தெரியேல்லை.... அப்பிடியெண்டால் உவங்கள் ஏதாவதொரு வத்தையைச் சேர்ந்தவங்களாய்த்தான் இருக்கும்.... பேசாமல் மாற வேணும்....

நாரதர்: தம்பி நாங்கள் மேலை இருந்து....

சித்திர குப்தர்:நாரதரே அதைச் சொல்ல வேண்டாம்....

மைனர் மச்சான்: அதென்ன மேலை இருந்து வந்தது எண்டு சொல்லுறியள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாரதர்: தம்பி.... அதையேன் உனக்கு .... முதலிலை அவரின்ரை பேர்சுக்குள்ளையிருந்து எடுத்த காசைத் தாரும்....

மைனர் மச்சான்: என்ன காசைத் தாறதோ.... என்ரை வழியே தனி வழி அதிலை ஆரும் குறுக்கிடுறதை நான் விரும்ப மாட்டன்....

நாரதர்: தம்பி.... எங்கடை வழியும் வேறை.... அதனாலை காசைத்தாரும் நாங்கள் போயிடுவம்....

சித்திரகுப்தர்: நாரதரே இங்கை இனி ஒண்டும் செய்ய ஏலாது போலை கிடக்கு வாரும் விட்டிட்டு போவம்....

நாரதர்: சித்திர குப்தரே.... என்ரை காசு.... அவன் என்ரை பேர்சுக்குள்ளை இருந்து காசை எடுத்ததை நான் என்ரை கண்ணாலை பார்த்தனான். அதை விட்டிட்டு போவம் எண்டு சொல்லுறீர்....

மைனர் மச்சான்: என்ன அங்கை கதை.... நிப்பாட்டிப்போட்டு பேசாமல் போங்கோ.... இல்லை உங்களை கொட்டி எண்டு சொல்லி பிடிச்சுக் குடுத்திடுவன்....

நாரதர்: அதென்னப்பா கொட்டி எண்டு சொல்லுறான்....

சித்திர குப்தர்: அது நாரதரே புலி எண்டு சொல்லுறான்....

நாரதர்: ஆ ....அது புலி.... அதுக்கு நான் பயமே.... எங்கடை சிவபெருமான் அதை உரித்து தோலாய் உடுத்தவர் தெரியுமே.... அவரிட்டை ஒரு வார்த்தை சொன்னால் போதும். இவையள் எல்லாரையும் அங்கை கொண்டு வரச்சொல்லி ஓடர் போட்டிடுவார். தெரியுமே.... இவையளுக்கு எங்கடை விசயம் விளங்கேல்லை....

சித்திர குப்தர்: இங்கை நாரதரே.... நீங்கள் சொல்லுறது காட்டிலை இருக்கிற புலியை.... இஞ்சை இவை சொல்லுறது வேறை.... அதாலை நாங்கள் பேசாமல் விட்டிட்டு போயிடுவம்.... வாருங்கோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாரதர்: நான் என்ரை காசை விட்டிட்டு வர மாட்டன்.... இது பெரிய அநியாயம்.... அக்கிரமம்.... எல்லாரையும் கூப்பிட்டுச் சொல்லப் போறன்....

சித்திர குப்தர்: நாரதர் உதொண்டும் வேண்டாம். நாங்கள் பேசாமல் விட்டிட்டுப் போயிடுவம்....

நாரதர் : எனக்கு காசில்லை நீதிதான் முக்கியம். கொஞ்சம் பொறும் வாறன்.... (மைனர் மச்சான் அருகில் சென்று காசைத் தரச் சொல்லி கேட்டு கையில் பிடிக்கிறார். இழுபறிப்பட்ட பின் நாரதர் மைனர் மச்சானைக் கட்டிப்பிடிக்கிறார்)

மைனர் மச்சான்: இஞ்சை ஓடி வாருங்கோ.... இஞ்சை என்ரை காசைப் பறிக்கப் பார்க்கினம்.... ஓடிவாருங்கோ.... ஐயோ.... ஓடிவாருங்கோ.... கொட்டியள் என்னட்டை காசைப் பறிக்க பார்க்கினம்.... ஓடி வாருங்கோ....

(பின்னணியில் பலர்.... ஓடி வருவதற்கான ஒலிகள்.... பிடி....... கொட்டி எங்கை..... கொட்டி வந்திட்டுதாம்)

சித்திர குப்தர்: நாரதரே ஓடி வாரும்.... எங்களைப் பிடிக்கப் போகினம்....

நாரதர்: அப்ப என்ரை காசு....

சித்திர குப்தர்: அதொண்டும் வேண்டாம்.... விட்டிட்டு ஓடிவாரும்.

(பிடி.... ஆளைப் பிடி எண்ட சத்தங்களுடன் ஆட்கள் ஓடி வரும் ஒலி.... தொடர்கிறது..)

நாரதர்: இப்ப என்ன செய்வம்.... சித்திரகுப்தரே....

சித்திர குப்தர்: ஓடி வாரும் நாரதரே....ஓடித் தப்புவம்.... (ஓடுகிறார்கள்)

இருவர்: எங்கை கள்ளன்.... கொட்டி எங்கை .... சொல்லுமன்.... என்ன நடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைனர் மச்சான்: (கவலையுடன்) அண்ணை நான் இதாலை போக வந்தனான். அம்மாவுக்கு மருந்து வாங்கச் சொல்லி காசு தந்துவிட்டவை.... அதைப் பொக்கற்றுக்குள்ளை வைச்சுக் கொண்டு வரேக்கை.... இரண்டு பேர் வந்து என்ரை காசை பறிக்கப் பார்த்தவங்கள்....

ஒருவர்: அவங்களைத் தெரியுமோ தம்பி....

மைனர் மச்சான்: அவங்களை எனக்குத் தெரியாது அண்ணை.... ஆனால் ஆக்களைப் பார்த்தால் மற்றவை போல தெரியுது....

ஒருவர்: அப்பிடியே.... அப்ப உவையளைப் பிடிச்சு நாலு சாத்து சாத்திப் போட்டு பொலிசிலை பிடிச்சுக் குடுக்க வேணும.... எங்கை ஆக்கள்....

மைனர் மச்சான்: உந்தா உந்தப் பக்கத்தாலைதான் என்ரை காசையும் பறிச்சுக் கொண்டு ஓடுறாங்கள்....

மற்றவர்: என்ன தம்பி காசைப் பறிச்சுப் போட்டாங்களோ....

மைனர்: இல்லையண்ணை.... என்னட்டையாவது உவையள் காசைப் பறிக்கிறதாவது.... இஞ்சை வைச்சிருக்கிறன் காசு....

ஒருவர்: அப்பிடியே தம்பி.... தம்பிக்கு அடியொண்டும் படேல்லைத் தானை....

மைனர்: இல்லையண்ணை.... நான் கராட்டி எல்லாம் படிச்சிருக்கிறன்.... எனக்குத் தெரியும் என்ன செய்ய வேணும் எண்டு....

ஒருவர்: (போவது போல் நடித்து) தம்பி இப்ப உவங்களைப் பிடிச்சு பொலிசிலை குடுக்க வேணும்.... அதுக்கு கொஞ்சம் செலவாகும் நீர்தான் பார்த்துக் கவனிக்கவேணும்....

மைனர்: அண்ணை....இது அம்மாவுக்கு மருந்து வாங்கத் தந்த காசு.... என்னட்டைக் காசு கேக்காதையுங்கோ அண்ணை.... மருந்துக்கு காசு காணாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர்: தம்பி.... அம்மாவின்ரை மருந்தை விட இது முக்கியம்.... இது ஒரு நாட்டுப் பிரச்சினை....

மற்றவர்: ஒரு சமூகப் பிரச்சினை.... இதுக்குப் போய் முடிவு காணாட்டில்.... நாடே கெட்டுப் போகும்....

ஒருவர்: நீர் இந்த நேரத்திலை அம்மாவைப் பற்றியும் மருந்தைப் பற்றியும் சொல்லிக் கொண்டிருக்கிறீர்....

மைனர்: அண்ணையவை நீங்கள் எனக்கு உதவி செய்ய வேணும்....

ஒருவர்: தம்பி அதெல்லாம் உதவி செய்யலாம்.... இப்ப கொஞ்ச காசை எடும்....

மைனர்: அண்ணை என்னட்டை காசில்லை....

ஒருவர்: எடடா காசை....

மற்றவர்: (கத்தியை எடுத்துக் காட்டி....) எடடா காசை....

மைனர்: (பயந்தவன் போல் பொக்கற்றுக்குள் இருக்கும் காசை எடுக்கிறான்) அண்ணை இவ்வளவுதான் கிடக்கு.... இதிலை அம்மாவுக்கு மருந்தும் வாங்க வேணும்....

ஒருவர்: தம்பி உனக்கு எங்களைப் பற்றித் தெரியாது.... இப்பதான் ஒருதர் ஞாயம் கதைச்சார்.... அவரை குத்தி இழுத்து சரிச்சுப் போட்டு வந்திருக்கிறம்.... தெரியுமோ

மற்றவர்: அதாலை நாங்கள் ஒண்டுக்கும் தயங்க மாட்டம்.... (எட்டி காசைப்பறித்து எண்ணிப் பாக்கிறார்)

ஒருவர்: என்ன ஒண்டுக்காவது காணுமோ....

மற்றவர்: ஒண்டுக்கு காணும்.... பைற்றுக்கும் சோடாவுக்கும் தான் காசு காணாது....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர்: அது பரவாயில்லை.... பாவம் பொடியனை விடு.... பார்த்தால் பாவம் போலை தெரியுது....

ஒருவர்: எங்கை அவங்கள்.... ஆக்களைப் பிடி அவங்கள் உண்மையான கொட்டி போலை தான் இருக்க வேணும். விடாதை பிடி.... (இருவரும் கள்ளனைத் துரத்துவது போல் கையைக் காட்டிய வண்ணம் ஓடுகிறார்கள்)
விடாதை பிடி....
(அவர்கள் மேடையை விட்டகன்றதும்.... மைனர் பொக்கற்றுக்குள் கையை விட்டு காசை எடுத்து கண்ணையடித்து எண்ணிப்பார்க்கிறான்)

பொலிஸ்:1 (இருவர் ஓடி வருகின்றனர்) மொக்கதை மொணவாதை உணே.... (என்ன ...... என்ன நடந்தது)

மைனர்: ஒண்ண கொட்டி தென்னக் ஆயுதத் தெக்கம துவணவா.... (புலி இரண்டு ஆயுதங்களோடை ஒடுகினம்)

பொலிஸ்2.... கீயதெனக் கியலா கிவே.... ஆயுத தீயெனவதை.... (எத்தனை பேரெண்டு சொன்னனீர். ஆயுதமும் இருக்கோ)

மைனர்: ஒவ்.... துவண்ட அல்லண்ட.....
(ஓம்... ஓடுங்கோ பிடியுங்கோ)

பொலிஸ்:1 அப்பி அத்தன யண்ட ஓணை நா.... அபி கரதர நத்தி எக்கனக் அல்லமு.
(நாங்கள் அந்தப் பக்கம் போகத் தேவையில்லை...... நாங்கள் கஷ்ரச்சல் இல்லாத ஒருதனைப் பிடிப்பம்)

மைனர்: ஏமெனங் ஒத்தன தெமல கட்டிய கொடாக் இன்னுவா.... மே பத்த றாலாமி.... மேம யண்ட.....
(அப்பிடியெண்டால் உந்தப் பக்கம் நிறைய தமிழாக்கள் இருக்கினம். அங்கை போங்கோ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிஸ்:1 அப்பே பாடுவ யாங் மச்சான்....
(எங்கடை பாட்டிலைபோவம் மச்சான்)

பொலிஸ்2: மல்லி லங்க சிகரட் தெக்காத் தியனவதை....
(தம்பியிட்டை சிகரட் இரண்டு இருக்குமோ)

மைனர்: நா.... மாத்தையா....
(இல்லை ஐயா)

பொலிஸ்: ஏமதை மல்லி.... ஏனங் யண்ட பொலிசியட்டை....
(அப்படியே தம்பி ........ அப்பிடியெண்டால் பொலிஸ் ஸ்ரேஷனுக்குப் போவம்)

மைனர்: மொணட்டதை றாலாமி....
(என்னத்துக்கு பொலிஸ் ஐயா)

பொலிஸ்2: இதிலை நிண்டு பெட்டையளுக்கு சைற் அடிக்கிறது என்ன....

பொலிஸ்1: யண்ட.... பொலிசுக்கு....

மைனர்: (பொக்கற்றுக்குள்ளால் சிகரட் பக்கற்றை எடுத்துக் குடுக்கிறான்)
தெக்காக் கண்ண.... (இரண்டு எடுங்கோ)

பொலிஸ்2: தம்பி இந்த வயசுக்கு சிகரட் பிடிக்கக்கூடாது.... இருமல் வரும்....

பொலிஸ்1: அதாலை நாங்கள் இந்தப் பைக்கற்றை அப்பிடியே கொண்டு போறம்....

மைனர்: றாலாமி.... எனக்கொண்டு தாருங்கோவன்....

பொலிஸ்2: ஆ.... உதெல்லாம் கெட்ட பழக்கம் சரியோ.... ஆளைப்பார்த்தால் நல்ல பொடியன் போலை கிடக்கு.... இந்த வயசிலை சிகரட் பத்தக்கூடாது சரியோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைனர்: வீட்டிலை பத்த ஏலாது....அதுதான் வெளியிலை ஒண்டைப் பத்துவம் எண்டு யோசிச்சன் றாலாமி....

பொலிஸ்1: வீட்டிலையோ வெளியிலையோ உங்களைப் போலை ஆக்கள் சிகரட் பத்தக்கூடாது.

பொலிஸ் 2: சின்னப் பொடியள்.... உங்களையெல்லாம் உள்ளைபோட்டு இரண்டு தட்டுத்தட்டினால்தான் சரிவரும் ....போ....

மைனர்: சரி....றாலாமி.... (கண்ணையடித்துகொண்டு போகிறான்..... )

பொலிஸ்1: நல்ல டீசெண்டான பொடியன்....

பொலிஸ் 2: தாய் தகப்பன் நல்ல கவனமாய் வளர்க்கினம்.... ஏனெண்டால் வீட்டிலை சிகரட் குடிக்க வழியில்லாமல் மறைஞ்சு வந்து ஒளிச்சு நிண்டு சிகரட் பிடிக்கிறான் பெடியன்....

பொலிஸ் 1: தாய் தகப்பன் பிள்ளை வளர்க்கிறதெண்டால் இப்பிடித்தான் வளர்க்க வேணும்....

பொலிஸ்2: சரி....சரி.... வா.... (மறுபக்கத்தைக் காட்டி) இந்தப் பக்கம் போவம்.... உந்தப் பக்கமாய்த்தான் அவங்கள் போனவங்களாம்....

பொலிஸ்1: நீ சொல்றதும் சரிதான். ஆராவது ஐடென்ரிக் கார்ட் கிளிஞ்சவனைப் பிடிச்சால் கரைச்சல் இல்லாமல் இண்டைச் செலவுக்கு காசு உழைச்சுப் போடலாம்....

பொலிஸ் 2: சரி....வா....வா.... இந்தப் பக்கம் போவம்.... (மேடையின் மறுபக்கம் செல்கிறார்கள். (எதிர்முனையில் இருந்து நாரதரும் சித்திரகுப்தரும் மேடைக்கு ஒடி வந்து தங்களை யாரும் துரத்தி வருகிறார்களா என திரும்பித் திரும்பி பார்த்த வண்ணம் நிற்கிறார்கள்)

நாரதர்: (மூச்சு வாங்க....) என்ன சித்திரகுப்தரே நாங்கள் இந்த மாதிரி ஒட்டம் அங்கையும் ஒடினதில்லை.... அப்பாடா எவ்வளவு பேர் சேர்ந்து துரத்தி வாறாங்கள்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திர குப்தர்:நாரதரே இஞ்சை பிழையான விசயம் எண்டால் எல்லாரும் சேர்ந்து துரத்துவாங்கள்.... சரியான விடயத்திற்கு ஒருதரும் சேரமாட்டார்கள்....

நாரதர்: சித்திர குப்தர் அந்தா அதிலை ஒருதர் வருகிறார் அவர் யார்....

சித்திர குப்தர்:(புத்தகத்தைப் புரட்டிப் பார்க்கிறார்) நாரதரே அதில் வருபவர் ஒரு அரசியல்வாதி....

நாரதர்: அரசியல்வாதியா.... அவருக்கு என்ன வேலை....அவற்றை படிப்பென்ன அவரென்ன அரசியலில் பட்டம் பெற்றவரா....

சித்திர குப்தர்:நாரதரே.... இலங்கையிலை ஆரும் அரசியல் வாதியாய் வரலாம் அதுக்கு எந்தவிமான தராதரமும் தேவையில்லை....

நாரதர்: என்ன எந்தத் தகுதியும் தேவையில்லையோ....

சித்திர குப்தர்:நல்லாய் பொய் சொல்லத் தெரிந்தால் போதும்....

நாரதர்: அப்ப இவையள் பொய் சொல்லேக்கைதான் மேலை எங்கடை லோகத்திலை உள்ள மணியெல்லாம் அடிக்கிறதோ....

சித்திர குப்தர்:அதுவும் சரிதான்.... ஆனால் இவையின்ரை செய்தியள் ரிவியிலை றேடியோவிலை போகேக்கைதான் எல்லா மணிகளும் சேர்ந்து அடிக்கின்றன....

நாரதர்: அப்ப அதுக்குத்தான் கோவம் வந்து யமன் காதை மூடிக் கொள்ளுறவரோ....

சித்திர குப்தர்:அப்பிடி கோவம் வரேக்கைதான் புத்தகத்தைப் பிரட்டி பார்க்கச் சொல்லி லிஸ்ரை எடுப்பார்.... பிறகென்ன அவற்றை வேலையை தொடங்கிப் போடுவார்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாரதர்: அதுதானை பிழையெண்டு நான் சொல்லுறன்.... எந்த முடிவையும் நாங்கள் உடனை எடுக்கக் கூடாது.... தீர விசாரித்து உண்மையை அறிந்துதான் எடுக்க வேணும்.... அதுக்குதான் நாங்கள் இப்ப இஞ்சை வந்திருக்கிறம்....

சித்திர குப்தர்: நாரதரே அந்தா துரத்திக் கொண்டு வாறாங்கள்....ஒடுங்கோ....

நாரதர்: (நாரதர் ஒடுகிறார்) நில்லுங்கோ நாரதரே ஒருதரும் துரத்திக் கொண்டுவரேல்லை சும்மா உங்களை சோதிச்சுப் பார்க்கத்தான் அப்படிச் சொன்னனான்.... இல்லை.... நீங்கள் பிழை செய்யேல்லை.... பிறகேன் பயப்பிடுறியள்.... பிறகேன் ஒடப்பார்க்கிறியள்.... உதுக்குத்தான் யமதர்மராஜா சொல்லுறது சரியெண்டு நினைக்கிறன்.... சரி.... சரி.... அந்தா அவர் எங்கடை பக்கம்தான் வாறார் போலை கிடக்கு.... கொஞ்சம் பொறுங்கோ.

அரசியல்வாதி: வணக்கம்.... வணக்கம்.... வாங்கோ.... வாங்கோ....

நாரதர்: என்னப்பா நாங்கள் றோட்டிலை நிக்கிறம். இவர் எங்களை வரச் சொல்லி சொல்லுறார்....

சித்திரகுப்தர்: அது அவற்றை பழக்க தோசம்.... வரச் சொல்லுவார்.... பேந்து போகச் சொல்லுவார்.... இப்ப அவர் என்ன சொல்லுறார் எண்டு கேட்பம்....

நாரதா: சரி.... றோட்டிலை நிண்டுகொண்டு கேட்பம்....

அரசியல்வாதி: இப்ப பாருங்கோ நாட்டிலை பிரச்சினைகள் கூடிப்போச்சு.... இதுக்கு நல்லதொரு ஆட்சி வேணும்.... நாட்டின்ரை பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப வேணும்.... அதுக்கு நாட்டிலை சமாதானம் நிலவ வேணும்.... அதைக் கட்டியெழுப்ப நாங்கள் எல்லாரும் ஒற்றுமையாய் நிண்டு உழைக்க வேணும்.... முதலிலை நாட்டிலை எவ்வளவோ பேர் உத்தியோகம் இல்லாமல் இருக்கினம்.... அவையின்ரை பிரச்சினையை தீர்க்க வேணும்.... அதுக்கு நாங்கள் ஒரு திட்டம் வைச்சிருக்கிறம்.... அவையள் எல்லாரையும் ஒரு கப்பலிலை போட்டு இல்லை ஒரு கப்பல் காணாது என்ன.... அஞ்சாறு கப்பலிலை ஏத்தி ஏதாவது ஒரு நாட்டுக் கடற்கரையிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுபோய் இறக்கிவிடுவம். அவையள் எப்படியாவது அந்த நாட்டுக்குள்ளை போய் எங்களுக்கு காசு உழைச்சு அனுப்புவினம்.... அப்ப எங்கடை வெளிநாட்டுச் செலாவணி கூடும்.... இதுக்கிடையிலை கொஞ்சப்பேர் கடலிலை தாண்டு செத்துப் போடுவினம்.... அப்ப எங்களுக்கு வேலையில்லாப் பிரச்சினை குறைஞ்சுபோடும்.... அப்பிடி ஆரும் கதைச்சால் நாங்கள் சொல்லுவம்.... இது எங்கடை உள்நாட்டுப் பிரச்சினை நீங்கள் இதிலை தலைப்போட வேண்டாம்.... நீங்கள் என்ரை திட்டத்தைப் பற்றி என்ன சொல்லுறியள்....

நாரதர்: அப்பாடா.... இப்பதான் மழை விட்டது போலை இருக்கு....

அரசியல்வாதி: என்ன மழை பெய்ய இல்லையோ.... நாங்கள் அதுக்கும் ஒரு திட்டம் வைச்சிருக்கிறம்.... அதெப்பிடியெண்டால்....

சித்திரகுப்தர்: இவரை இப்பிடியே விட்டமெண்டால் எங்களை விடமாட்டார்....இதுக்குத்தான் யம தர்மராஜாவிட்டை சொல்ல வேணும்....

நாரதர்: இவர் இன்னும் எவ்வளவு காலம் இஞ்சை இருக்கப் போறார் சித்திரகுப்தா

சித்திரகுப்தர்: நாரதரே.... இவருக்கு இப்போதைக்கு சாவே இல்லை.... ஏனெண்டால் இவரைப் போலை .... ஒரு பட்டாளமே இருக்கு....

(தாயும் தகப்பனும் ஒரு பிள்ளையும் பூச்செண்டு மற்றும் பரிசு ஆகியவற்றுடன் அரசியல்வாதியைப் பார்க்க வருகிறார்கள்)

தகப்பன்: வணக்கம் தலைவரே....

பெண்: வணக்கம்.... தம்பி நீயும் காலிலை விழுந்து கும்பிட்டு அவரிட்டை ஆசீர்வாதம் வாங்கு....

(பிள்ளை காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்குகிறான்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாரதர்: என்ன சித்திர குப்தரே இவர்பொய் சொல்லுறவர் எண்டு சொன்னீர்.... அவற்றை காலிலை விழுந்து பிள்ளை ஆசீர்வாதம் வாங்குது....

அரசியல்வாதி: தம்பியவை கொஞ்சம் பொறுங்கோ.... இதுதான் நான் சொல்லுறது. சமூக சேவை எண்டு வெளிக்கிட்டிட்டால் நேரம் தியானம் கிடையாது.... சொல்லுங்கோ....
(பரிசில்கள் கொடுக்கப்படுகின்றன....)
இதென்ன நீங்கள் இதெல்லாத்தையும் இதிலை வைச்சு தாறியள்.... சரி.... சரி.... டிரைவர் இதைக் கொண்டு போய் காரிலை வையும்.... இஞ்சை பாருங்கோ எனக்கு ஆரும் அன்பளிப்புகள் தாறது பிடிக்காது.... நான அதை விரும்புறதும் இல்லை.... ஆரும் கொண்டு வந்தால் நான் அவையளை நல்லாய் பேசிப்போடுவன்.... என்ரை வைவ் தான் சொல்லியிருக்கிறா அப்பிடிச் செய்யக் கூடாது எண்டு.... சரியோ.... இப்ப நீங்கள் சொல்லுங்கோ.... என்ன விசயம்....

தகப்பன்: தலைவரே எங்கடை பிள்ளைக்கு கொழும்பிலை தேசிய பாடசாலையிலை அட்மிசன் கிடைச்சிருக்கு.... நீங்கள் ஒரு சிபார்சுக் கடிதம் தந்திருந்தியள்.... அது வேலை செய்திருக்குப் போலை.... அதுதான் உங்களுக்கு எங்கடை அன்பளிப்பாய் இதைக் கொண்டு வந்து தரவேணும் எண்டு மனச்சாட்சி சொல்லிச்சு....

நாரதர்: இது என்ன விசயமப்பா....

சித்திர குப்தர்: நீங்கள் இதையொண்டையும் நம்பாதையுங்கோ.... அமைச்சர் ஓடர் போட்டிருக்கிறார்.... அப்பிடி ஒரு தரும் சிபார்சுக் கடிதம் குடுக்க ஏலாது எண்டு....

நாரதர்: என்னப்பா இப்பிடிச் செய்ய ஏலாதெண்டு நீர் சொல்லுறீர்.... அவன் கடிதம் குடுத்து அட்மிசனும் கிடைச்சிட்டுது.... அன்பளிப்பும் கொடுக்கிறான். பெஞ்சாதி பேசப்போறா எண்டு போட்டு பரிசையும் வாங்கி வைச்சிருக்கிறான்....
(அரசியல்வாதி, தகப்பன் தாய் எல்லோரும் பேசுவது போல் சைகை செய்து விட்டு போய் வருவதாகச் சொல்லுகிறார்கள். அரசியல்வாதி பக்கத்தில் இருக்கும் பாதுகாவலருக்கு சைகைகாட்டி பிள்ளையை கடத்தும்படி கூறுகிறார்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாரதர்: என்ன சித்திர குப்தரே.... இவர்களுடைய பலன் எப்பிடியிருக்கு....

சித்திர குப்தர்:(புத்தகத்தை பிரட்டிப் பார்க்கிறார்) நாரதரே ஏதோ ஒரு கெட்ட விசயம் ஒண்டு நடக்கப் போகுது....

அரசியல்வாதி: தம்பியவை நான் ஏதோ ஒண்டு சொல்லிக் கொண்டு இருந்தனான்.... வேலையில்லாத் திண்டாட்டம் பற்றி என்ன.... அடுத்தது நாட்டிலை சனத்தொகையும் கூடிப் போச்சுது.... அதைக் குறைக்கிறதுக்கும் ஒரு திட்டம் வைச்சிருக்கிறன்.... தம்பியவை நீங்கள் என்னெண்டு என்னட்டை கேட்கவேணும்.... அப்பத்தான் எனக்கு விளக்கமாய் சொல்லுற மூட் வரும்....

சித்திரகுப்தர்: சரி நீங்கள் சொல்லுங்கோ.... என்ன திட்டம் வைச்சிருக்கிறியள் சொல்லுங்கோ....

அரசியல்வாதி: அது ஒரு நல்ல திட்டம்.... மேலாலை போய்ப் போடுவம்.... பிறகு கேட்டால் சொல்லுவம் தவறிப் போட்டிட்டமெண்டு.... ஆ.... ஆ.... (சிரிக்கிறார்) இப்படியே போட்டுக் கொண்டு போனால் சனத்தொகை குறைஞ்சுபோடும்.... எப்பிடியென்ரை திட்டம்....

நாரதரே: சித்திரகுப்தரே.... என்ன இப்பிடியெல்லாம் சொல்லுறாங்கள்.... (தகப்பனும் தாயும் ஓடி வருகிறார்கள்)

தகப்பன்: தலைவரே எங்கடை பிள்ளையை ஆரோ கடத்திக் கொண்டு போயிட்டாங்கள்.... நீங்கள் தான் ஏதாவது செய்ய வேணும்....

அரசியல்வாதி: என்ன கடத்திக் கொண்டு போயிட்டாங்களோ.... உடனடியாய் சிறுவர்களின் உரிமை பற்றி ஐ.நா. சபைக்கு நாங்கள் முறையிட வேணும்....

தகப்பன்: எதுக்கும் முதலிலை பொலிசுக்கு ஒருக்காப் போன் பண்ணிச் சொல்லுங்கோ....

அரசியல்வாதி: (செலுலர் போனைக் பாதுகாவரிடமிருந்து வாங்கி) ஹலோ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹலோ.... பொலிஸ் ஸ்ரேசனா....* எங்கடை ராஜாவின்ரை மகன் ரோவைக் காணேல்லை.... ஒருக்கா தேடிப் பாக்கிறியளே....

தகப்பன்: (அவருடைய போன் அடிக்கிறது. போனைக் கையில் எடுத்து) ஹலோ.... ஹலோ.... என்ன இருபத்தி ஐந்து லட்சமோ.... எங்க எப்ப கொண்டு வரவேணும்....

அரசியல்வாதி:என்ன கப்பம் கேட்கிறாங்களோ....
(சைகை மூலம் கதைக்கிறார்கள்)

நாரதர்: என்ன சித்திர குப்தரே.... கப்பம் எண்டெல்லாம் கதைக்கிறாங்கள்....

சித்திர குப்தர்:அது நாரதரே .... பிள்ளையைக் கடத்திக் கொண்டு போய் வைச்சுக் கொண்டு காசு கேக்கிறாங்கள்....

நாரதர்: அதேன் அப்பிடி.... அது அவையின்ரை பிள்ளை தானை.... அதுக்கேன் காசு....

சித்திர குப்தர்:நாரதரே.... இது பூலோகம்.... இஞ்சை அப்பிடியெல்லாம் இல்லை....

அரசியல்வாதி: நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்காதையுங்கோ.... நான் இந்தப் பிரச்சினையை ஐ.நா. சபைக்கு கொண்டு போய் ஒரு முடிவு எடுக்காமல் விடமாட்டன்.....

நாரதர்: சித்திர குப்தரே அதென்ன ஐ.நா. சபை.... யம தர்மராஜாவின்ரை போலை இஞ்சையும் ஒண்டிருக்கோ....

சித்திர குப்தர்:இது நாரதரே ஆக்கள் கொலை செய்யப்படுறது பற்றி விசாரிச்சுப் போட்டு அந்தக் கணக்கிற்கு ஏற்றாப் போலை உதவி குடுக்கிற சபை....

நாரதர்: அதென்ன ஆக்களை கொலை செய்யிறதுக்கு ஏற்றாப்போலை உதவி குடுப்பாங்களோ.... அப்ப கூடக் கொலை செய்யுற நாட்டுக்கு கூட உதவி குடுப்பினமோ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திர குப்தர்: அப்பிடியில்லை அதெல்லாம் மனித உரிமை மீறலைப் பொறுத்துத்தான் நடக்கும்....

அரசியல்வாதி: நீங்கள் கவலைப்படாதையுங்கோ.... எனக்கு நல்லாய் பொலிசைத் தெரியும்.... அவையள் ஏதாவது செய்வினம்....

பெண்: எனக்கு என்ரை பிள்ளை வேணும்.... எப்பிடியாவது காப்பாத்தித் தாங்கோ.

அரசியல்வாதி: கொஞ்சம் பொறுமையாய் இருக்க வேணும்....

நாரதர்: என்னப்பா பிள்ளையைக் காணேல்லை எண்டால் தேடிப் பார்க்கிறதை விட்டிட்டு இஞ்சை வந்து சொல்லிக் கொண்டிருக்கினம்.....

சித்திர குப்தர்: அது நாரதரே.... இவையளுக்குத்தான் பாதாள உலகக்காரர் எங்கை இருக்கினம். கடத்தல்காரார் எங்கையிருக்கினம் எண்டெல்லாம் தெரியும்.

நாரதர்: அப்பிடியே சங்கதி....

பொலிஸ்: (இருவர் சாக்கு ஒன்றை தூக்கி வருகிறார்கள் .... அதைக் கொண்டு வந்து வைத்து விட்டு அவிழ்க்கிறார்கள் பிள்ளையின் சடலம் இருக்கிறது)

தாய்: ஐயோ என்ரை பிள்ளை....

அரசியல்வாதி: இந்தக் கொடுமையை நிப்பாட்ட வேணுமெண்டுதான் நாங்கள் ஐ.நா. சிறுவர் பாதுகாப்பு சாசனத்திலை கையெழுத்துப் போட்டிருக்கிறம்.... ஒருக்கா பார்ளிமென்ரிலையும் இதைப் பற்றி பேசவேணும்....

நார்தர்: இதென்னப்பா .... இப்பிடியும் நடக்குதே....
(இந்த நேரத்தில் பெரிய சத்தத்துடன் யமன் வருகிறான்....
நாரதர் பின்னால் சித்திரகுப்தர் ஒழிந்து கொள்கிறார்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திர குப்தர் :நாரதரே உங்களோடை இஞ்சை வந்ததாலை யம தர்மராஜாட்டை லிஸ்ரை குடுக்க மறந்து போனன்.... அதுக்குத்தான் என்னைத் தேடி வாறார் போலை....

நாரதர்: வரவேண்டும் யம தர்மராஜாவே.... வரவேண்டும்.... நீங்களே எங்களைத் தேடி வந்துவிட்டீர்கள்....

யமன்: (அட்டகாசமாய் சிரித்து) என்ன நாரதரே என்னோடு பந்தயம் பிடித்துவிட்டு பூலோகத்தை திருத்தப் போவதாக கூறி வந்தீர்கள் என்ன நடந்திருக்கிறது....

நாரதர்: நான் வந்த நேரம் சரியில்லைப் போலை கிடக்கு.... எல்லாம் இடக்கு முடக்காய்த்தான் நடகுது.... எனக்கு ஆரைத்திருத்திறது.... ஆரைப் பிழை சொல்லுறதெண்டு தெரியேல்லை.... தலை குழம்பிப் போச்சுது....

யமன்: கொஞ்சம் பொறும்....சித்திர குப்தரே முன்னுக்கு வாரும்....

சித்திர குப்தர்:இதோ வந்தேன்.... யம தர்மராஜாவே....

யமன்: எங்கே உம்முடைய ஏடுகளை எடும்....

சித்திர குப்தர்:நான் ஏடுகளை மனிசர் பறிச்சுப் போடுவினம் எண்ட பயத்திலை போட்டோக் கொப்பிதான் கொண்டு வந்தனான்.... அரசே....

நாரதர்: அதையெண்டாலும் எடுமன்....

யமன்: இந்தப் பாலகனுடைய பெயர் இன்றைய தினத்திலை சாக வேணும் எண்டு எழுதியிருக்கோ....

சித்திர குப்தர்:(கொப்பியை பிரட்டிப் பாத்து) இல்லை அரசே....இவர் நன்றாகப் படித்து டொக்டராய் வரவேணும் எண்ட பலன் இருக்கு....

யமன்: அப்ப எப்பிடி இந்தப் பிள்ளை என்ரை அனுமதியில்லாமல் செத்தது....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாரதர்: அப்பிடியெண்டால் இஞ்சையும் தேவலோகம் போலை இன்னுமொரு யம தர்மராஜா இருக்கிறாரோ....

சித்திர குப்தர்: நாரதரே.... இஞ்சையும் வந்து ஒரு குழப்பத்தை ஏற்படுத்திப் போடாதையும் பிறகு கரைச்சல்....

நாரதர்: நீர் சும்மாய் இரும் சித்திர குப்தரே.... யம தர்மராஜாவே நான் நினைக்கிறேன்....

யமன்: நினைக்கிறது இருக்கட்டும் விசயத்தைச் சொல்லும்....

நாரதர்: இஞ்சையும் யமன்மார் இருக்கினம் போலை அதாலை உங்களுக்கு கனக்க வேலையில்லை.... நீர் பேசாமல் ஓய்வெடுக்கலாம்....

யமன்: (அட்டகாசமாய் சிரித்து....) எனக்குப் போட்டியாய் இன்னுமொரு யமனா....நான் ஓய்வெடுப்பதா.... நான் அப்பிடியெண்டால் அழிக்கும் கடவுளுக்கு துரோகம் செய்தவனாய் விடுவேன்.... என்னால் அப்பிடி இருக்க முடியாது....

நாரதர்: அப்பிடியெண்டால் என்ன செய்யப் போகிறீர்....

யமன்: இப்போதே நான் தேவலோகம் செல்ல வேண்டும்.... அவர்களிடம் சென்று எனது குறையைச் சொல்ல வேண்டும். நான் வருகிறேன் (போகிறார்)

சித்திர குப்தர்: நாரதரே உமக்கு இப்போது சந்தோசம் தானே. நீர் இப்பொழுது என்ன செய்யப் போகிறீர்.

நாரதர்: நான் பூவுலகில் இருந்து மக்களைத் திருத்தப் போகிறேன்.

(பொலிஸ், மைனர் மற்றும் இருவர் மேடைக்கு வருகிறார்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைனர்: அவையள் தான் ஆக்கள் புடியுங்கோ. றாலாமி.

பொலிஸ்: (இவர்களைப் பார்க்கிறார்கள்)
எங்கை உங்கடை ஐடென்ரிக் கார்ட்டைக் காட்டுங்கோ பார்ப்பம்....

சித்திர குப்தர்: நாரதரே திரும்பவும் ஐடென்ரிக்கார்ட் கேட்கிறாங்கள். பெரிய கரைச்சல் வரும் போலைக் கிடக்கு.... பேசாமல் போயிடுவம்....

பொலிஸ்: என்ன சொன்னது விளங்கேல்லையோ எடுங்கோ.... எடுங்கோ ஐ.சியை

சித்திர குப்தர்: கொஞ்சம் பொறுங்கோ தம்பியவை.... நாரதரே இப்பிடிக் கொஞ்சம் வாரும்.... (பக்கத்திற்கு சென்று) இனிமேல் இது சரிவராது வாங்கோ ஓடித் தப்புவம்....

நாரதர்: வேறை வழியில்லை போலைத்தான் கிடக்கு.... வாரும் ஓடித் தப்புவம் (ஓடி மறைகிறார்கள்)

பொலிஸ்: அந்தா ஓடுறாங்கள். பிடியுங்கோ அதுக்கிடையிலை ஓடி மறைஞ்சிட்டாங்கள். சீ.... கொஞ்சம் சுருட்டியிருக்கலாம்.... நல்ல கேஸ் .... சரி.... சரி வாரும். வேறை ஏதும் ஐ.சி கேஸ் கிடைக்கும். (அவர்கள் போய் மறைய மைனர் நிண்டு கண்ணையடித்து விட்டு செல்கிறார்.)

திரை மூடப்படுகிறது

(முடிவு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மிலேனியத்தில் நாரதர் (நவீன நாரதர்)

***1999ம் ஆண்டு கொழும்பு இந்துக் கல்லூரியின் கலை விழாவில் மேடையேற்றப்பட்டது.***

***அரங்கு : சரஸ்வதி மண்டபம்***

*<u>பங்குபற்றியோர் :-</u>*

| | | |
|---|---|---|
| நாரதர் | : | சுஜேன் செல்லத்துரை |
| சித்திரகுப்தர் | : | எஸ். மனோஹரன் |
| அரசியல்வாதி | : | என். செந்தில்குமார் |
| தகப்பன் | : | எம்.எச்.எம். அக்கீல் |
| தாய் | : | எஸ். தினேஷ் |
| மகன் | : | விஷ்ணுவர்த்த பாலச்சந்திர சர்மா |
| யமன் | : | ரி. றஜித் |
| பொலிஸ்காரர் | : | எஸ். சுதர்சன் – ரி. டானியல் |
| மைனர் | : | எஸ். சதீஸ்குமார் |
| ரவுடிகள் | : | ஜி. ஜெயதர்சன் – கே. சுமிதன் |
| பாதுகாவலர் | : | எஸ். றகிஸன் |

பொறுப்பாசிரியை : திருமதி. ப. தங்கராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அகதி முக(ா)ம்

அருணா
செல்லத்துரையின்
நாடகங்கள்





"தரை தட்டிய மீன்கள்"
"நவீன நாரதர்"

ISBN : 955-96159-4-7



... LTD. COLOMBO 13. TEL: 330195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org